ஜோதி

ஆசிரியர் — வெ. சாமிநாத சர்மா

சுடர் 4 விக்கிரம௵ ஐப்பசி௴ கதிர் 4

நவம்பர்-1940

அடுத்த பக்கங்களில்

நமது நியாய சபை	—		1
அன்றாட உலகம்	—		16
அ. இ. கா. காரியக்கமிட்டித் தீர்மானம்			21
சிறியாரும் பெரியாரும்	—	முத்துராமலிங்கம்	22
சாவித்திரிபாய்	—	மு.	25
ஜனநாயகமும் சர்வாதிகாரமும்	—	"தேசிகன்"	28
ஸ்ரீநிவாச அய்யங்கார்	—	ஒரு காங்கிரஸ்வாதி	43
சிலப்பதிகாரம்-வினையின் விதை	—	மா. சர்மா B.A Hons	47

தமயனின் கடிதம்—14 — தேவிதாசன் 55

கூலி .... — —வி. எம் துரைசாமி 57

"ஜோதி" கிடைக்கு மிடங்கள்

1 என். மாணிக்கம் பிள்ளை
நியூஸ் ஏஜெண்ட்,
தென்பாதி, சீகாழி.

2 கே. மகாதேவ ஐயர்.
நியூஸ் ஏஜண்ட்,
பேரளம், தஞ்சை ஜில்லா.

3 பாரதி பிக்சர் பாலேஸ்,
கல்லுக் கட்டி, காரைக்குடி.

4 'சக்தி' காரியாலயம்,
5, அரண்மனைக்காரன் தெரு, சென்னை.

5 ஆர். வி. பதிராவ்
நியூஸ் ஏஜண்ட்,
திருநெல்வேலி ஜங்ஷன்

6 தி. ஈசன் பிரிண்டிங் ஒர்க்ஸ்,
48, வடக்கு ஆவணி மூலவீதி, மதுரை.

ஜோதி

சுடர் 4 நவம்பர்-1940. கதிர் 4

யுத்தம்

1939ம் வருஷம் செப்டம்பர் மாதம் 1 தேதி ஜெர்மனி, சுதந்திர போலந்து நாட்டின்மீது யுத்தம் தொடுத்தது. போலந்து நாட்டோடு செய்திருந்த உடன்படிக்கையின் காரணமாக 3ந் தேதி பிரிட்டனும் பிரான்சும் ஜெர்மனிமீது போர்துவங்கி யிருப்பதாய் அறிவித்தன. இந்த யுத்தம் ஆரம்பித்து இப்போது ஒருவருஷத்திற்கு மேலாகிவிட்டது.

சென்ற ஒருவருஷத்தில் பல சிறியநாடுகள் தங்கள் சுதந்திரத்தைப் பறிகொடுத்துவிட்டன. இப்போது பிரிட்டிஷ் பிரதம மந்திரியாயிருக்கும் ஸ்ரீ சர்ச்சில், ஒருசமயம் போலந்து நாட்டைப் பற்றிக் கூறுகையில் "அந்த நாட்டின்கப்பல் அதோமுழுகிக்கொண்டிருக்கிறது. ஐயோ, அந்த நாட்டு மக்கள் அதோ தங்கள்சுதந்திரத்தைப் பறிகொடுத்துக் கொண்டிருக்கின்றனர்" என்று குறிப்பிட்டார். இந்த யுத்தத்தில் பலபேர் சுதந்தர தேவியின் பாதங்களிலே தங்களுடைய எல்லாவற்றையும் அர்ப்பணம் செய்துவிட்டுச் சென்றுவிட்டனர். எஞ்சியிருப்போர் நீர்நிறைந்திருக்கும் கண்களால் தங்களது எதிர்காலத்தைப் பார்த்துக் கொண்டிருக்கின்றனர்.

யுத்தத்தின் ஒரு வருஷமுடிவில், வெற்றி பெற்றிருப்பதாய்க் கருதுபவர்கள் தங்கள் வெற்றியைக் கொண்டாடினர். தோற்றிருப்பவர்கள் தங்களது துக்கக் கண்ணீரோடு ரத்தத்தையும் கலந்துகுத்தனர். இதில் ஒரு விசேஷமென்னவென்றால், இந்த இருதரத்தாரும் கோவிலுக்குச் சென்று மௌனவிரதத்தில் குடிகொண்டிருக்கும் கடவுளின் திருச்சன்னிதானத்திலேதான், தோற்றிருப்பவர்கள் துக்கக்கண்ணீர் வடிக்கிறார்கள்; வெற்றி பெற்றிருப்பவர்கள் ஆனந்தபாஷ்பம்சொரிகின்றனர். அந்தப் பகவானை நோக்கி, வெற்றிபெற்றிருப்பவர்கள் மேன்மேலும் வெற்றிக்கு யாசிக்கிறார்கள். தோல்வியாளர்கள் தங்களுடையவிமோசனத்திற்குயாசிக்கிறார்கள். இந்த இருதரப்பாருக்கும்

பொதுவான கடவுள் என்னதான் செய்வார்? இங்கு நமக்குஒருகதை ஞாபகம் வருகிறது. ஆங்கில கதாசிரியனான ஆஸ்கார்டு ஓயில்டு என்பவன் எழுதிய கதை அது.

ஒருநாள் ஏசு பெருமான் கபிலை நிறம் பொருந்திய நகரிலிருந்து வெள்ளை மைதானத்திற்கு வந்தார். முதன்முதலாக ஒரு தெரு வழியாக அவர்போகும்பொழுது, கொஞ்சம் உயரத்தில் பேச்சுக் குரல் கேட்டது. கவனித்தார். குடி மயக்கத்தால் ஒரு யுவன் படுத்திருக்கிறான். வாலிபனே, இப்படிக் குடித்து ஏன் உனது ஆத்மாவை வீணாக்கிக்கொள்கிறாய்? என்று ஏசுநாதர் அவனைப் பார்த்துக் கேட்டார். அதற்கு அந்த யுவன், 'நாதரே குஷ்டரோகியாக இருந்த என்னைத் தாங்கள் குணப்படுத்திக் காப்பாற்றினீர்கள். அந்த ஆனந்தத்தில், குடித்துக் களிப்பதைத் தவிர நான் வேறு என்ன செய்யமுடியும்?' என்று பதில் சொன்னான். ஏசுநாதர் இன்னும் கொஞ்சதூரம் சென்றார். ஒரு வாலிபன் வேசி ஒருத்தியைத் தொடர்ந்து செல்வதைப் பார்த்து, 'யுவனே, விபசாரத்தில் ஈடுபட்டு உன்னுடைய ஆத்மாவை நீ ஏன் அழித்துக் கொள்கிறாய்? என்று கேட்டார். அதற்கு அவ்வாலிபன், தேவரே, நான் குருடனாக இருந்தேன். எனக்குக் கண்ணொளி யளித்தீர்கள். அந்த ஆனந்தத்தில் மூழ்கியிருக்கும் நான் வேறென்ன செய்யமுடியும்?' என்று பதில் அளித்தான். ஏசுநாதர் நகரின் மத்தியில் செல்கிறார். ஒரு கிழவன் தரையில் உட்கார்ந்து அழுது கொண்டிருந்தான். அவனைப் பார்த்த ஏசுநாதர், "கிழவனே, ஏன் அழுகிறாய்?" எனக்கேட்டார். 'பிரபுவே, இறந்துபோன எனக்குத் தாங்கள் உயிர் கொடுத்தீர்கள். அழுவதைத் தவிர நான் வேறு என்னசெய்வது?' என்றான் கிழவன்.

அந்த ஏசுநாதர் இன்று ஐரோப்பாவுக்கு வந்து,

"என்னை வணங்கும் மனிதர்களே! நீங்கள் ஏன் இவ்விதம் ஒருவருக்கொருவர் அடித்துக்கொண்டு மடிகிறீர்கள்? நிரபராதிகளான மக்களைக் குண்டுகளால் ஏன் கொன்று குவிக்கிறீர்கள்? குழந்தைகளும் பெண்களுங்கூட உங்களுடைய குண்டுகளுக்குத் தப்பவில்லையே, என்று கேட்பாரானால், 'பகவானே' எங்களுக்கு நீங்கள் கண்ணைக் கொடுத்தீர்கள், ஆனால் பார்க்கும் சக்தியைக் கொடுக்கவில்லை. அறிவைக் கொடுத்தீர்கள்; ஆனால் இதயத்தைக் கொடுக்கவில்லை. விஞ்ஞான சாஸ்திரத்தைக் கொடுத்தீர்கள்; ஆனால் ஆத்மாவைக் கொடுக்கவில்லை"

என்ற பதிலைத்தான் இன்றைய ஐரோப்பா அளிக்க முடியும். பேராசையாகிய மிருகத் தன்மையானது மனிதத் தன்மையை அழித்து வருகிறது. "தற்போதுள்ள மனிதர்கள் மிக்கப் பயங்கரமானவர்களாகி வருகின்றனர். இம்மாதிரியான நிலைமையில் அவர்கள் ஒருபொழுதும் இருந்ததில்லை" என்று ஒரு அறிஞர் சமீபத்தில் கூறினார். இது இன்றைய ஐரோப்பாவுக்கு மிகவும் பொருத்தமாயிருக்கிறதல்லவா? இயந்திரத் திறமை

யும் சாஸ்திர முறையில் அவர்கள் அடைந்திருக்கிற உன்னதமும், ஈகை, தயை, இரக்கம் முதலிய நற்குணங்களின் ஊற்றுக்களை மூடிவிட்டன. பரிசுத்தமான பிரகாசத்தை வணங்காமல், ஐரோப்பா சாத்தானை வணங்க ஆரம்பித்துவிட்டது. ஐரோப்பிய நாகரிகம், மரணப்படுக்கையிலே மெலிவுற்றுக் கிடக்கிறதென்று கூறினால் அது மிகையாகமாட்டாது. அது, மனிதர்களிடையே உறைந்து கிடக்கும் மனிதத் தன்மையை வளர்க்கவில்லை; ஆனால் மிருகத் தன்மையை வளர்த்துவிட்டது. சத்தியத்தை அது தெரிவிக்கவில்லை; ஆனால் அசத்தியத்தைத் தெரிவித்துவிட்டது. ஆத்மபலத்தை விருத்தி செய்யவில்லை; ஆனால் மிருக பலத்தில் நம்பிக்கை கொள்ளும்படி செய்து விட்டது. தன்னைச் சிருஷ்டித்த மனிதர்களையே இன்று அது கொன்று குவிக்க ஆரம்பித்துவிட்டது. அந்த நாகரிகம் மனிதர்களுக்குச் சுதந்திரத்தைக்கொடுக்கவில்லை; ஆனால் மரணத்தைக்கொடுத்துவிட்டது. "சுதந்திரத்தினிடம் அடங்காத பற்றுக்கொண்டவனும், பிறருக்குச் சந்தோஷமாக சுதந்திரத்தை வழங்கக்கூடியவனுமே சுதந்திரத்தை அடைவான். அடிமைகளைப் பெற்றிருப்பதில் கருத்துக்கொண்டவன் தன்னையும் அவர்களுடன் * பிணைத்துக் கொள்ளவேண்டும். பிறரை ஒதுக்குவதற்காகச் சுவர்களை எழுப்புகிறவன் தனது சுதந்திரத்திற்கே தடையேற்படுத்திக்கொள்ளுகிறான்" என்று ஒரு பிரபல கவிஞன் கூறுகிறான். ஐரோப்பிய நாகரிகம் தன்னுடைய வளர்ச்சியிலே பெருமையடித்துக் கொண்டது. ஆனால் பழைய பாதையிலேயே தான் செல்கிறோமென்பதை அது தெரிந்து கொள்ளுமுன் சக்தியற்று விழுந்து கிடக்கிறது. உயிருக்கு யௌவனத்தை ஊட்டக்கூடிய குணங்கள் பெருகியிருப்பதாய்ப் பெருமை யடித்துக் கொண்டது ஐரோப்பிய நாகரிகம். ஆனால் அதனுடைய சுயநலப் போர்வை அதன் கண்களை மூடியிருந்ததை இப்போதாவது அது தெரிந்துகொள்ளுமா? தன்னுடைய அழிவும் தற்காலக் கஷ்டங்களும் தனக்குள்ளிருக்கும் குற்றத்தால் ஏற்பட்டதேயல்லாது, தன்னுடைய புத்தி விகாசக் குறைவினால் ஏற்படவில்லையென்பதை அது தெரிந்து கொண்டால் உலகுக்கும் நன்மை, யுத்த பயமும் ஒழியும்.

பால்கன் நாடுகள்

சகாய மற்ற ஒரு அழகிய யுவதியைக் கண்டார் பலரும் தங்களுடைய விளையாட்டுக் கருவியாகக்கருதுவது மனித சுபாவம் என்பதாக ஒரு ஆசிரியர் வர்ணிக்கிறார். பிறர் சுகமாய் இருப்பதைப் பார்த்து சந்தோஷமடையவேண்டாம்; கெடுதல் செய்யாதிருந்தால் போதும். ஆனால் கெடுதல் செய்வதுதான் தற்கால மனித சுபாவமாயிருக்கிறது. ஓர் அசுத்தப்பொருளைத் தன் கையால் தொட்டு விட்ட குழந்தை மற்றக் குழந்தைகள் பேரிலும் தன் அசுத்தக்கையை வைக்க ஓடுகிறது. அப்போதுதான் திருப்தியேற்படுகிறது அக்குழந்தைக்கு. ருமேனியா தேசத்தினுடைய செழிப்பே இன்று அந்நாட்டை விழுங்க ஆரம்பித்து விட்டதென்றால் இதில் ஒன்றும் ஆச்சரியப் படுவதற்கில்லை.

•

தற்காலம் நடக்கும் யுத்தத்தின் விசேஷமென்னவென்றால் அது ஆகாயத்தில் நடப்பதுதான். அப்

படி ஆகாயத்திலே நடக்கும் இந்த யுத்தத்திற்கு முக்கிய ஆதாரமாயிருப்பது பூமிக்கு கீழிருக்கும் பெட்ரோல். இந்தப் பெட்ரோல் ருமேனியாவில் ஏராளமாகக் கிடைக்கிறது. அப்படியானால் இத் தேசத்தின் மீது மற்றவர்கள் கருணை செலுத்த ஆரம்பிப்பதில் அதிசயமில்லையே.

ஐரோப்பாவின் அமைதிக் குறைவுக்குக் காரண புருஷர்களான இரு சர்வாதிகாரிகளும் தாங்கள் பதவிக்கு வந்தவுடனே அவர்கள் பின்னால் செய்யப் போகும் இந்தப் பயங்கரமான செயல்களுக்கு அனுகுணமான நிலைமைகளை ஒவ்வொரு நாட்டிலும் சிருஷ்டிப்பதற்கு முயற்சியெடுத்துக் கொண்டதுதான் அவர்கள் செய்த வேலைகளில் முக்கியமானது. இந்த அனுகூலத்தை அவர்கள் தேடிக் கொண்டதானது அவர்களுடைய இப்போதைய வேலைக்கு மிகவும் ஒத்தாசையாக ஆகிவிட்டது. தங்களுடைய செல்வாக்குக்கோ, அதிகாரத்திற்கோ உட்படாத நாடுகள் எவையெவை யென்பதையும் அவர்கள் ஏற்கனவே தெரிந்து அதற்குத் தகுந்தபடி மேற்கண்ட நிலைமையைச் சிருஷ்டித்துக் கொண்டிருப்பது தான் மிகவும் விசேஷம் தங்களுடைய ஆதீனத்தை மறுக்கும் தேசங்களின் மீது திடீரெனப் படையெடுக்காமல், முதலில் அதட்டிப்பார்ப்பது; ஏற்கனவே தாங்கள் சிருஷ்டித்து வைத்திருக்கும் நிலைமைகளை உபயோகப்படுத்தி உள் நாட்டுக் கலகங்களைக் கிளப்பச் செய்வது; இம்முறைகளெல்லாம் பலிககாது போனால் துப்பாக்கி முனையில் அந்த நாடுகளின் சுதந்திரத்தைப் பறிப்பது. இவையே சர்வாதிகாரிகள் கடைப்பிடித்து வரும் கொள்கையாயிருக்கிறது. சில வருஷங்களாகவே ருமேனியாவில் அமைதியான அரசு நடைபெற்று வந்ததாய்ச் சொல்ல முடியாது. அங்கு பல கட்சிகள். ஒரு நிர்ணயமான கொள்கையைக் கடைப்பிடித்து நடத்தும்படியான அரசாங்கம் அமைவதற்கு வசதியில்லாமல் திண்டாடியது. இந்தப் பல கட்சிகளையும் ஒரு கட்டுக்குள் அடக்கி நடத்திச் செல்லும் ஆற்றல் பெற்றவராய் கரோல் மன்னரைக் கருத முடியாது. இந்த வகையில் ருமேனியாவின் சர்க்கார் நிருவாகம் ஒரு குழப்பமயமாகவே இருந்தது. சர்வாதிகாரிகளுக்குத் தேவையும் இது தான். செப்டம்பர் மாதம் முதல் வாரத்தில் அங்கு உள்நாட்டுக் குழப்பம் ஏற்பட்டதாய்ச் செய்திகள் வந்தன. அதே வாரம் மன்னர் கரோல் முடி துறந்தார். நாஜி சித்தாந்தப்படி யூதர்கள் துன்புறுத்தப்பட்டார்கள். அவர்களுடைய சொத்துக்கள் பறிமுதல் செய்யப்படுவதாய்க் கூறப்பட்டது. இப்பால் சென்றமாதத்தில் அங்கு ஜெர்மன் துருப்புகள் பிரவேசிப்பதாய்ச் செய்திகள் வெளிவந்தன. இப்படித் துருப்புகள் பிரவேசிப்பதுதற்கால ருமேனிய சர்க்காரின் அனுமதியோடுதானாம். எதற்காக? ருமேனியப் படையைச் சீர்திருத்தி அமைக்கவாம். ஜனங்களை நாகரிகப்படுத்தவும் முன்னுக்குக் கொண்டு வரவுமே தாங்கள் கிளம்பியிருப்பதாக ஐரோப்பிய வல்லரசுகள் சொல்வது வழக்கம். அவர்களுடைய இந்த முறையின் அனுபவங்களைப் பல தேசங்கள் நன்கு தெரிந்திருக்கின்றன. ஆனால் இப்போது படைகளைச் சீர்திருத்தி அமைப்பதற்குக் கிளம்பியிருப்பது ஒரு புதுமை

யான காரியந் தான். "சீர்திருத்துவது" என்றால் ஆதிக்கம் கொள்வது என்பது தானே ஐரோப்பிய நாகரிக அகராதியில் அர்த்தம் இந்த அர்த்தத்தைப் பிரத்தியட்ச ரூபமாக அனுபவிக்கும் கோஷ்டியோடு ருமேனியாவும் சேரவேண்டியதுதான்.

செப்டம்பர் மாதம் 27ந் தேதி ஜப்பான் ஜெர்மனி, இத்தலி ஆகிய மூன்று தேசங்களுக்கும், ராணுவ, அரசியல், பொருளாதார ஒப்பந்தம் ஒன்று ஏற்பட்டதல்லவா? அதற்குப் பின், இத்தாலியின் வெளிநாட்டு மந்திரி சியானோ, "இனிமேல் ஐரோப்பாவில் யுத்தமில்லை புதிய ஒரு உலகத்தை அமைப்போம்" என்று பேசியிருந்தான். இவைகள் மிகவும் சிந்திக்கக்கூடிய வார்த்தைகள்தான். ஏனெனில், சர்வாதிகாரிகளோ, அல்லது அவர்களுடைய பிரதான சகாக்களோ சொல்லும் வார்த்தைகளின் அர்த்தத்திற்கு அகராதியைத் தேடும் சிரமத்தை அவர்கள் வைப்பதில்லை. 'ஐரோப்பாவிலே யுத்தமில்லை' யென்றால் அங்கு சமாதானத்தை நிலை நாட்டப் போகிறார்களா? அதற்கான சூசகம் நமக்கு ஒன்றும் புலப்படவில்லையே? பொதுவாக ஐரோப்பாவில் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வரும் யுத்தமானது, ஐரோப்பாவிலே சில நாடுகளைத் தங்கள் ஆதிக்கத்திற்குட்படுத்த வேண்டுமென்பதற்காக நடைபெறும் யுத்தமில்லை யென்பதை அரசியல் வாதிகள் அறிவர். "எங்களுக்கு இடம் வேண்டும்" என்ற சர்வாதிகாரிகளுடைய தொனிகளுக்குப் பின்னேதான் ஆகாய விமானக் குண்டுகளின் சத்தம் கேட்கிறது. அப்படியானால் இந்தயுத்தம் வேறு எங்கே பரவும்? எகிப்து, ஏடன் முதலிய பிரதேசங்களிலே ஆர்ப்பாட்டஞ் செய்து கொண்டிருக்கும் நிலைமையிலேயே இத்தாலியத் துருப்புகள், கிரீஸ் தேசத்தின் எல்லையைக்கடந்து விட்டன என்ற செய்திகள் கிடைத்தன. அங்கு யுத்தம் நடைபெறுகிறது. சர்வாதிகாரிகளினுடைய கடைசி முயற்சியின் பலனை அந்தச் சிறிய தேசம் அனுபவித்துக் கொண்டிருக்கிறது. வாசகர்களுக்கு 'இம்மாத ஜோதி' கிடைக்குமுன் கிரீஸ் நாட்டின் சுதந்திரம் இத்தாலியின் பசிக்கு இரையாகி விடுமானால் ஒன்றும் ஆச்சரியப்படுவதற்கில்லை. அப்படியானால் இந்த யுத்தம் எந்தத்திசையை நோக்கிப் பரவும் என்பதற்கு கிரீஸ் படையெடுப்பு ஒரு கலங்கரை விளக்கமாயிருக்கும் என்று நாம் ஊகிப்பது பொருந்துமல்லவா?

சில வருஷங்களாக பால்கன் நாடுகளில் துருக்கியைத்தவிர மற்ற நாடுகள் ஏதோ ஒரு வகையில் சர்வாதிகாரிகளுடைய செல்வாக்குக்குக் கட்டுப்பட்டேதான்கிடந்தன. அப்படிச்செல்வாக்குக்குக் கீழ்படியாத ஜெக்கோஸ்லோவேகியாவின் சுதந்திரம் பறிக்கப்பட்டது பழையகதை. இப்போது அந்தச் சிறிய நாடுகள் ஒவ்வொன்றும் சுதந்திரமாக மூச்சுவிட முடியாது என்று சர்வாதிகாரிகள் நினைப்பார்களானால் அதைத்தடுக்க அந்தச் சிறிய நாடுகளுக்குச் சக்தியேது?

சீனா

1937ம் வருஷம் ஜூலை மாதம் 7ந் தேதி ஜப்பான் சீனா யுத்த ஆரம்பம். இது பிரகடனம் செய்யப்படாத யுத்தமல்லவா? இப்போது இந்த யுத்தம்

ஆரம்பித்து மூன்று வருஷங்களுக்கு மேலாகி விட்டன. இந்த மூன்று வருஷங்களுக் கிடையில் ஜப்பான் சீனாவில் சில முக்கியமான நகரங்களையும், துறைமுகப் ப்ரதேசங்களையும் ரெயில்வேக்களையும் தன் ஆதிக்கத்திற்குட்படுத்திக் கொண்டிருக்கிறது. சீனா ஜனத் தொகை பெருத்த தேசமாயிருந்தாலும், தற்கால இயந்திர வசதிகள் நிறைந்த ஜப்பானுடைய படைபலத்திற்கு முன் சீனாவைச் சரியான ஒருஜோடியாக ஒப்பிடமுடியாது. சீனாவுக்குப் பல தேசங்கள் சில வகையில் உதவி புரிந்து வருகின்றன என்பதை நாம் அறிவோம். ஜப்பானுக்கும் சீனாவுக்கும் எப்படியாவது சமரஸம் செய்து விட வேண்டுமென்ற கருத்துக் கொண்டிருப்பதாய்ச் சொல்லி பர்மாவுக்கும் சீனாவுக்கும் அடைத்து வைக்கப் பட்டிருந்த பாதையுங் கூட அக்டோபர் 18ந் தேதி முதல் திறந்து விடப் பட்டிருக்கிறது. ஆயினும் தற்கால மிருக்கிற கொந்தளிப்பான நிலைமையில், எந்த ஒரு தேசமும் தாராளமாக ஆயுத சப்ளையாவது செய்யும் என்று சீனா பூரணமாக நம்பி எதிர்பார்க்க முடியாது. இந்த நிலைமையில் சீனாவுக்கும் ஜப்பானுக்கும் சமரசம் செய்து வைப்பதற்கு ஜெர்மனியிலிருந்து வான்-ட்ரவுட்மான்-போயிருப்பதாகச் செய்தி கிடைக்கிறது. இத்தலி-ஜெர்மனி-ஜப்பான் ஒப்பந்தத்திற்குப் பிறகு, இந்த ஜப்பான் சீனா சமரஸப் பேச்சு கொஞ்சம் முன்னேற்றம் அடைந்திருப்பதாகவும் தெரிகிறது. இந்த நிலைமையில் ஜப்பானுக்கும் சீனாவுக்கும் ஓர் ஒப்பந்தம் ஏற்படுவது சம்பவிக்கக் கூடியதாகத்தான் கருத வேண்டியதிருக்கிறது. ஏற்கனவே இம்மாதிரி ராஜிப் பேச்சுகள் பேசப்பட்டு ஒரு பலனும் இல்லாது போயிருப்பதும் ஞாபகப் படுத்தக் கூடிய சங்கதிதான். ஆனால் தற்போதைய நிலைமை, முன்னிருந்த நிலைமைகளுக்கு மாற்றமாயிருப்பதையும் சிந்திக்கப் வேண்டியதிருக்கிறது. அப்படி, சீனாவுக்கும் ஜப்பானுக்கும் ஒரு ஒப்பந்தம் ஏற்படுமானால், சீனாவினுடைய சில கோரிக்கைகளுக்கு ஜப்பான் விட்டுக்கொடுக்க வேண்டியதாய் நிகழ்ந்தாலும் ஆச்சரியப் படுவதற்கில்லை. சீனர்கள் ஒரு பலம் பொருந்திய வல்லரசோடு கழிந்த மூன்று வருஷங்களுக்கு மேலாக இரவு பகல் ஓய்வில்லாது போராடியும் தலைவணங்க மறுத்து விட்டது மிகவும் போற்றுதற்குரிய விஷயமாகும். ஜப்பானின் ஆதீனக் கொடியைத் தழுவிக் கொண்டு அடிமையாக வாழ்வதைப் பார்க்கிலும், மரணத்தைத் தழுவிக் கொள்வதை அவர்கள் சிரேஷ்டமாகக் கருதுகிறார்கள். இந்த நிலைமை யேற்பட்டதற்கனுகுணமான சில விஷயங்களை வாசகர்கள் தெரிந்து கொள்வது நலமாயிருக்கும். சீனாவில் ஜனங்களிடத்தில் சுதந்திர தாகம் ஏற்பட்டு அவர்கள் சர்க்காருக்கு எதிராகக் கிளர்ச்சி செய்ய ஆரம்பித்தார்கள். சீனர்கள் மிகவும் போற்றும் சன்யாட் சென்னினுடைய தலைமையில் இக்கிளர்ச்சி நடந்தது. ஆனால் இக்கிளர்ச்சியில் பாமர ஜனங்களைப் பார்க்கிலும் கொஞ்சம் நடுத்தரவர்க்கத்தைச் சேர்ந்தவர்கள்தான் அதிகப் பங்கெடுத்துக் கொண்டிருந்தார்களென்று சொல்ல வேண்டும். இவ்விதத் தேசங்களில் வசிக்கும் ஜனங்களை மூன்று வகையாகப் பிரிக்கலாம். நிரம்பவும் மேலான நிலையிலுள்ளவர்கள்.

மிகவும் தாழ் நிலையில் தரித்திரத்தோடு நெருங்கிய சம்பந்தங் கொண்டிருக்கிற பாமர மக்கள்; இந்த இரு வகுப்புக்கும் நடு நிலையிலிருக்கிற மத்திய தர வகுப்பார். மேல் நிலையிலிருக்கிறவர்களுக்கு தேசத்தில் எந்த சர்க்கார் நடந்தாலும் ஒன்று தான். தங்களுடைய கடைக்கண் தயவைப் பெறாமல் எந்த ஒரு சர்க்காரும் நடைபெற முடியாதென்பதை நன்றாகத் தெரிந்து கொண்டிருப்பவர்கள் அவர்கள். கீழ் நிலையிலிருப்பவர்கள் தங்களுடைய சகலத்தோடு சிந்திக்கிற சக்தியையும் இழந்து விட்டுத் தரித்திரம் ஒன்றை மட்டும் விடாத் தோழனாகக் கிடைக்கப் பெற்றவர்கள். ஆனால் மத்திய வகுப்பு அப்படியில்லை. கல்வியறிவு பெறுவதற்கும் உலக நிலைமைகளைத் தெரிந்து கொள்வதற்கும் வசதி யுள்ளவர்கள் அவர்கள். மற்றும் சுற்றுப் புறங்களில் தினந்தோறும் நடைபெறும் நிகழ்ச்சிகளிலிருந்தும் அவர்கள் தப்ப முடிவதில்லை. அந்நிகழ்ச்சிகள் அவர்களுடைய சிந்தனையைத் தூண்டி விடுகின்றன. இந்த நிலைமையில் இவ்விதக் கிளர்ச்சிக்கு அவர்கள் தலைமை தாங்கி நிற்பது சகஜந்தான். தலைமை வகித்து நடத்தும் இக்கோஷ்டியானது, தங்களுக்கு மேலே இருப்பவர்களிடமும், தங்களுக்குக் கீழே யிருப்பவர்களிடமும் வெறுப்புடையதாயு மிருக்கிறது. தங்களுக்கு மிஞ்சிய சுகபோகத்திலும் ஆனந்தத்திலும் மூழ்கியிருப்பதால் மேலே யுள்ளவர்கள் மீது வெறுப்பு. நாகரீகம் என்று இவர்கள் கருதுவதில் ஒண்டாமல் பிரிந்து நிற்பதால் கீழே யுள்ளவர்கள் மீது வெறுப்பு. அதிகாரிகளாக வல்லவா அவர்கள் காட்சியளிக்கிறார்கள். ஆனால் ஜனத் தொகையில் பெரும்பான்மையோரா யிருக்கும் இவர்களுடைய ஒத்துழைப்பில்லாமல் தங்களுடைய கிளர்ச்சி வெற்றி பெறாதென்பதை அவர்கள் நன்கு அறிவார்கள். ஆனதால் அவர்களை உபயோகித்துக் கொள்ள மட்டும் பார்ப்பார்களே யல்லாது உண்மை நிலைமைகளை அவர்களிடத்தில் கூறுவதற்கு அஞ்சுவார்கள். அவர்கள் தங்களுடைய ஸ்தானங்களைக் கைப்பற்றிக் கொண்டால்? இதனால் அவர்கள் ஓர் உறுதியுள்ள கொள்கையில் லாதவர்களாகிறார்கள். ஒரு நிர்ணயமான நடவடிக்கையை அவர்கள் கையாள முடிகிறதில்லை, ஆனால் தலைமையும் அவர்களைச் சுற்றிக் கொண்டே யிருக்கும் படியும் செய்து கொள்வதில் அவர்கள் ஜாக்கிரதையாயிருப்பார்கள். ஆனால் அவர்கள் நடத்தும் கிளர்ச்சி சரியான பலனைத் தரமுடியாது. சரியான வேலைத் திட்டமில்லாத காரியம் அவலமில்லாத பலனை எப்படிக் கொடுக்க முடியும்? ஆனால் தன்னுடைய பலத்திலே மாத்திரம் நம்பிக்கை வைத்தும் அரசியல் ஞான சூன்யமுள்ள சர்க்காராயிருந்தால் இந்தக் கிளர்ச்சியை அடக்குவதற்கு தடபுடலான அடக்கு முறையை ஆரம்பித்து பாமர ஜனங்களுக்கு ஒரு விழிப்பை யுண்டாக்கி தனக்குக் கேடுதானே தேடிக் கொள்ள ஆரம்பித்து விடும். அரசியல் ஞானமுள்ள சர்க்காராயிருந்தால், சர்க்காருக்கும் இந்தக் கிளர்ச்சியாளர்களுக்குமிடையில் பல தடைகளையேற்படுத்தியும், இந்தக் கிளர்ச்சியாளர்களுக்கும் பாமர மக்களுக்கும் நெருங்கிய தொடர்பு ஏற்படாதபடி செய்தும், அடக்கு முறையையும் ஆரம்பித்து விடாது தன்னை ஸ்திரப்

படுகிக் கொள்வதில் கண்ணுங் [illegible]மாயிருக்கார். சீனாவில் நடந்த கிளர்ச்சிகளுக்குத் தலைமை தாங்கி நடத்தியவர்களும் அவர்களைச் சூழ்திருந்தவர்களும் நடுத்தர வகுப்பினர் என்பதைச் சொல்லத் தேவையில்லை. பல தடவை, பல வருஷம் இவர்கள் கிளர்ச்சி நடத்தினாலுங் கூட சீனாவில் நடைபெற்ற மஞ்சூ சர்க்காரானது, இக்கிளர்ச்சியாளர்கள் போய் மோதுவதற்கு முன் விழுந்து விட்டது. தலைமை ஸ்தானம், சரியான பரீட்சையில் தேற வேண்டியதற்கான நிலைமை யேற்பட வில்லை. 1912ம் வருஷ ஆரம்பத்தில் அங்கு குடியரசு ஸ்தாபிதமான பிற்பாடுதான் தலைமையில் உள்ள கோளாறுகள் வெளிக் கிளம்பின. ஆயினும் சன் யாட்சென் ஏதோ ஒரு வகையில் தழுவிக் கொண்டு காரியத்தை நடத்திச் சென்றான். ஆனால் ஒரு நிர்ணயமான கொள்கை யில்லாததால் சரியான ஓர் அடிப்படையின் மீது குடியரசு சர்க்கார் காரியஞ் செய்ய முடியாது போயிற்று. உள் நாட்டில் குழப்பங்கள் தோன்றின. அதிலும் பல தினுசுகள்.

• •

ஆனால் சன்யாட்-சென் இறந்த 1925ம் வருஷத்திற்குப் பிறகு சீனாவின் நிலைமை வேறு தினுசாக மாறியது. சியாங்-காய்-ஷேக் குடியரசுத் தலைவனானான். இந்தக் கிளர்ச்சியாளர்களை அடக்குவதற்கு மஞ்சூ சர்க்கார் கையாளாத கைங்கர்யத்தை இவன் கையாள ஆரம்பித்தான். கிளர்ச்சியாளர்கள் கூட்டங்கூட்டமாக வேட்டையாடப்பட்டார்கள். இதனால் இந்தக் கிளர்ச்சித்தலைவர்கள், அடிபட்ட குழந்தை தாயின் மடியைக் கட்டிக் கொள்வதைப்போல், ஏழைகளைப் போய்த் தழுவிக்கொள்ள ஆரம்பித்தார்கள் அவர்களைச் சிந்திக்கச் செய்தார்கள். 1925ம் வருஷத்திலிருந்து 1937ம் வருஷம் வரை இவர்கள் பட்ட கஷ்டம் வர்ணிக்க இயலாதது. சுதந்திரமென்றால் என்ன, அதை அடைவதற்கு காணிக்கை யெவ்வளவு செலுத்தவேண்டுமென்பதைப் பொதுஜனங்கள் அனுபவித்து உணரும்படியான நிலைமை யேற்பட்டது. பின் 1937ம் வருஷம் சியாங்-காய்-ஷேக் சர்க்காரும் இவர்களும் ஒன்று சேர்ந்து ஜப்பானுடன் போராடிக்கொண்டிருப்பது யாவருமறிந்ததே. பக்குவம் அடையாத கிளர்ச்சியைக் கொண்டு குடியரசு ஸ்தாபிக்கப்பட்ட சீனாவில் ஏற்பட்ட உள்நாட்டுக் குழப்பமும் சீனாவுக்கு நன்மையாக முடிந்திருப்பது சிந்திக்கத் தகுந்ததுதான். தன்னிலும் எத்தனையோ வகையில் பலம் பொருந்திய ஒரு வல்லரசோடு இந்த மூன்று வருஷத்திற்கு மேலும் போராடிக்கொண்டு தலை வணங்காது சீனா நிமிர்ந்து நிற்குமானால், அதற்குக் காரணம் அந்த சீன மக்கள் சுதந்திரத்தையும், அதன் அருமையையும் நன்றாகத் தெரிந்திருப்பதுதான். ஜப்பானுக்கும் சீனாவுக்கும் ஒரு ஒப்பந்தம் ஏற்படுமானால் அதில் ஜப்பான் சில சலுகைகளுக்கு விட்டுக் கொடுக்க வேண்டிய தேற்படுமென்று நாம் கூறுவதற்கு இதுவும் ஒரு காரணமாகும்.

சந்திப்பு

"நாம் உதவி செய்வதாயிருந்தால், யாதொரு நிபந்தனையும் இன்றி பிரிட்டனுக்கு உதவி செய்ய வேண்டும். என்னுடைய அனு

தாபமெல்லாம் நேச தேச வல்லரசுகளின் பக்கமே."

1939ம் வருஷம் செப்டம்பர் மாதம் 4ந் தேதி வைசிராயைக் கண்டு பேசி விட்டு மகாத்மா மேற்கண்ட கருத்தடங்கிய அறிக்கை ஒன்று வெளியிட்டார்.

1940ம் வருஷம் செப்டம்பர் மாதம் 27, 30ந் தேதிகளில், "பேச்சுரிமை" கோரி வைசிராயைக் காந்திஜி கண்டு பேசினார். கோரியது கிடைக்கவில்லை. அக்டோபர் மாதம் 11, 12, 13ந் தேதிகளில் காரியக் கமிட்டி கூட்டப்பட்டது. மகாத்மாவினுடைய எதிர்கால வேலைத் திட்டத்தைக் காரியக் கமிட்டி யேற்றுக் கொண்டது. 16ந் தேதி மகாத்மா தன்னுடைய சத்தியாக்கிரக வேலைத் திட்டத்தை வெளியிட்டார். மகாத்மாவால், பேச்சுரிமையை வற்புறுத்தி சத்தியாக்கிரகம் செய்வதற்குப் பொறுக்கி யெடுக்கப்பட்ட ஸ்ரீ விநோபா 17ந் தேதி சத்தியாக்கிரகம் ஆரம்பித்தார். 21ந் தேதி இவர் கைது செய்யப்பட்டு தண்டனை விதிக்கப் பட்டிருக்கிறார்.

1939ம் வருஷம் செப்டம்பர் மாதத்தில், நிபந்தனை யில்லாமல் உதவி செய்ய வேண்டுமென்ற காந்திஜி, 1940ம் வருஷம் செப்டம்பர் மாதத்தில் பேச்சுச் சுதந்திரம் கோரி சத்தியாக்கிரகம் ஆரம்பித்திருக்கிறாரே, இது முன்னுக்குப் பின் முரணில்லையா என்ற கேள்வி இந்தியாவில் பல பேரால் கேட்கப்படுகிறது. இதைப் பற்றி நமது "ஜோதி" வாசகர்களும் அறிய ஆவல் கொள்வது சகஜந்தான். ஆனதால் பாரபட்ச மற்ற முறையில் இதைப் பற்றிக் கொஞ்சம் ஆராய முற்பட்டிருக்கிறோம். இவ்விதம் ஆராயப் புகுமுன், இந்த ஒரு வருஷ காலத்தின் நிகழ்ச்சிகளையும் நாம் கொஞ்சம் திரும்பி நோக்கிக் கொள்வது அவசியமல்லவா?

1939ம் வருஷம் செப்டம்பர் மாதம் முதல் வாரத்தில் காந்திஜி வைசிராயைச் சந்தித்து மேற்கண்ட அறிக்கை விட்ட பின்னர், செப்டம்பர் 11ந் தேதி முதல் 15ந் தேதி வரை நடைபெற்ற காங்கிரஸ் காரியக் கமிட்டி பிரிட்டனுடைய யுத்தக் கொள்கையை விளக்கும்படி கோரி ஒரு நீண்ட அறிக்கை வெளியிட்டது. (இந்த அறிகையை பூராவும் சென்ற வருஷம் அக்டோபர் மாத "ஜோதி"யில் வெளி வந்திருக்கிறது) இந்த அறிக்கையைப் பண்டித நேருவே தயார் செய்ததாகவும், காரியக் கமிட்டி வாதத்தின் போது, எவ்வித நிபந்தனையும் கேளாமல் பிரிட்டனுக்கு உதவி செய்ய வேண்டுமென்ற கட்சியில் தாம் ஒருவரே யிருந்ததாகவும் மகாத்மா காந்தி அறிக்கை விடுத்திருந்தார். 1939ம் வருஷம் அக்டோபர் மாதம் 7, 8, 9ந் தேதிகளில் வார்தாவில் நடைபெற்ற அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி மேற்கண்ட காரியக் கமிட்டியின் தீர்மானத்தை அங்கீகரித்தது. இதை ஆதரித்த பாவனையில் காந்திஜியும் அறிக்கை விட்டிருந்தார். ஆயினும் காரியக் கமிட்டியின் இந்தத் தீர்மானத்திற்காதாரமான கொள்கையானது, மகாத்மாவையும், காந்தி சேவாசங்கத்தின் சில முக்கியஸ்தர்களையும் வெகு தூரம் சிந்திக்கச் செய்து விட்டது. இந்நாளிலிருந்து அடிக்கடி கூடிய காரியக் கமிட்டிக் கூட்டங்களில் காந்திஜி பிரசன்னமா

யிருந்து, அவருடைய யோசனைகள் அடிக்கடி கேட்டுக் கொள்ளப் பட்டதாக வெளியிட்டு வந்தாலுங் கூட, காந்திஜிக்கும், காரியக் கமிட்டியிலுள்ள அவருடைய மற்ற சகாக்களுக்கும் கொள்கை விஷயத்தில் சுமுகமான ஒற்றுமை யிருந்ததாகச் சொல்ல முடியாது. அடிக்கடி கூடும் காரியக் கமிட்டி, நீண்ட நேரம், பல நாட்கள் நடப்பதும், நீண்ட அறிக்கைகள் வெளி வருவதும் அந்த அறிக்கைகள், ஸ்பஷ்டமற்ற வாக்கியங்கள் நிறைந்ததாயிருந்ததும் சுமுகமற்ற தன்மை நீடித்து வருவதையே வலியுறுத்தின. காந்தி சேவாசங்கத்திலிருந்தும் இரண்டொரு பிரபலத் தலைவர்கள் ராஜிநாமா செய்தார்கள். இப்பால் காந்திஜி உபதேசித்து வரும் அஹிம்சைக் கொள்கைக்கு ஒரு வரை யறை யேற்படுத்தியதோடு இனிமேல் நிர்ணயிக்கப் போகும் வேலைத் திட்டங்களின் பொறுப்பிலிருந்தும் காந்திஜியைவிலக்குவதாயும், 1940ம் வருஷம் ஜூன் மாதம் 17ந் தேதி முதல் நடைபெற்ற காரியக் கமிட்டி 21ந் தேதியில் வெளியிட்ட அறிக்கையும் தேசிய சர்க்கார் அமைப்புக் கோரி 7–7–40ல் டில்லியில் நிறைவேறிய காரியக் கமிட்டித் தீர்மானமும் இந்த ஒரு வருஷமாக உள்ளூர வளர்ந்து வந்த சுமுக மற்ற தன்மையின் பரிணாமங்களே யாகும். புனாவில் 1940ம் வருஷம் ஜூலை மாதம் 27ந் தேதி நடைபெற்ற அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி மேற்கண்ட இரு தீர்மானங்களையும் அங்கீகரித்தது.

இதன் மேல் காந்திஜி ''ஹரிஜன்'' பத்திரிகையில் ஷடி தீர்மானங்களைப் பற்றி அடிக்கடி தாக்கி யெழுதிக் கொண்டு வந்தார். சுமார் இருபது வருஷமாகக் காங்கிரஸ் கடைப்பிடித்து வந்த கொள்கை கை விடப் படுவதாகவும், இன்று உலகத்தில் இந்தியாவைப் பற்றிய நினைப்பு ஏற்பட்டிருக்குமானால் அது அந்தக் கொள்கையைக் காங்கிரஸ் அவலம்பித்ததினால் ஏற்பட்டதென்றும் அந்தக் கொள்கை இப்போது அவருடைய சகாக்களாலேயே புறக்கணிக்கப் படுவதாகவும் எழுதி வந்தார். தனக்கு மாறுபட்டவர்களிடத்திலுங் கூட அடக்கமாகவும் ஆனால் சொல்ல வேண்டியதை ஸ்பஷ்டமாக எளிதமான நடையிலும் பேசவும் எழுதவும் செய்கிற காந்திஜியினுடைய பாஷையானது மேற்கண்ட காலத்தில் கொஞ்சம் வேகமாகப் போவதை, விஷயங்களைத் தொடர்ந்து கவனித்து வந்தவர்கள் சுலபமாகத் தெரிந்திருக்கலாம். காந்திஜியின் வருத்தத்திற்குக் காரணமாயிருந்த மேற்கண்ட தீர்மானம் 1940ம் வருஷம் செப்டம்பர் மாதம் 16ந் தேதி பம்பாயில் கூடிய அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டியின் தீர்மான மூலம் ரத்து செய்யப் பட்டது.

காந்திஜி, நிபந்தனையற்ற உதவி செய்யவேண்டுமாய் சென்ற வருஷம் ஏன் கூறினார்? காங்கிரஸ் இந்தியாவின் சுதந்திரத்திற்காகப் பாடுபடுவது. ஆனால் அந்தச் சுதந்திரத்தை அடைவதற்கு அது மேற்கொண்டிருக்கும் கொள்கையும் வேலைத் திட்டங்களும் வேறுதினுசானவை. சத்தியம், அஹிம்சையாகிய கொள்கைகள் சட்டபூர்வமாகக் காங்கிரஸினால் ஏற்றுக்கொள்ளப்படாதிருந்தாலுங்கூட, தலைவருக்குத் தலைவராய் காந்திஜி காங்கிரஸி

லிருக்கும்வரை சத்தியத்தையும் அஹிம்சையையும் காங்கிரஸ் உல்லங்கனம் செய்துவிட முடியாது. ஏனெனில், சத்தியமும், அஹிம்சையுமில்லையானால் காந்திஜி இல்லை. அவைகளிலிருந்து காந்தியடிகளையோ, அல்லது அவரிலிருந்து சத்தியம் அஹிம்சையென்ற கொள்கைகளையோ பிரிக்க முடியாது.

> “அஹிம்சையையும் சத்தியத்தையும் நிலைநாட்டுவதற்காகவே நான் வாழ்வேன்; அதே முயற்சியிலேயே சாவேன்”

இது மகாத்மாவின் வார்த்தைகள் ஆதலால், மகாத்மாவைத் தலைவராகக் கொண்ட நமது காங்கிரசின் பிரச்னைகளை நாம் கவனிக்கும் போது இந்த மேற்கண்ட இரு கொள்கைகளையும் மனதிலிருத்தியே கவனிக்கவேண்டும்.

இந்தியாவின் சுதந்திரத்திற்காகப் பாடுபட்டுவரும் காங்கிரஸ், இந்த உலகத்தின் இதர பாகங்களில் எங்கு அக்கிரமம் நடந்தாலும் அதைக்கண்டிப்பதிலோ, அக்கிரமத்திற்கு உட்பட்டிருக்கும் நாட்டிற்குத் தன்னுடைய அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதிலோ, தன்னால் முடிந்த உதவியைச் செய்வதிலோ பின் தாங்கியதே கிடையாது. அபிசீனியா, ஸ்பெயின், ஜெக்கோஸ்லோவேகியா, சீனு, பாலஸ்தீனம் முதலிய அக்கிரமத்திற்குட்பட்டிருந்த தேசங்களுக்கு இக்கொள்கையைப் பின்பற்றித்தான் காங்கிரஸ் தன்னுடைய அனுதாபத்தைத் தெரிவித்துக் கொண்டது; தன்னால்முடிந்த உதவியும் செய்தது. இதே கொள்கையை நிலைநாட்டி வரவேண்டிய காங்கிரஸ், போலந்துதேசம் ஆக்கிரமிக்கப் பட்டபோது தன்னுடைய மேற்கண்ட கொள்கையைப் பின்பற்றத் தயங்கியது. தன்னுடைய கொள்கையிலிருந்து காங்கிரஸ் பிறழாது என்ற நம்பிக்கையிலேதான் “நிபந்தனையின்றி உதவி செய்யவேண்டும்” என்று காந்திஜி கூறியிருக்கலாம். ஆனால் காங்கிரஸ் காரியக் கமிட்டி, கொள்கையைப் பார்க்கிலும் இந்தியாவின் சுதந்திரத்தைப் பெரிதாய்க் கருதியிருக்க வேண்டும். ஆனால் இந்தியாவின் சுதந்திரத்தைப் பார்க்கிலும், கொள்கையையே மேலாகக்கருதுகிறவர்காந்திஜி. இந்தியாவின் சுதந்திரத்தை மறுக்கிற பிரிட்டிஷார் போலந்துப் பிரச்னையில் சம்பந்தப்பட்டிருப்பதால் நம்முடைய கொள்கையை நாம் அழித்துவிடுவதா? நம்முடைய சுதந்திரத்தையும் இந்தப் போலந்து பிரச்னையையும், அதாவது தற்கால யுத்தத்தையும் நாம் ஏன் சம்பந்தப் படுத்தவேண்டும்? இது காந்தியடிகளின் சிந்தனை. ஆனால் காரியக்கமிட்டி பிரிட்டிஷ் சர்க்காரோடு பேரம் பேசியது. இதைப் பற்றி காந்தி சேவாசங்கத் தலைவராயிருந்த கிஷோரிலால் மஷ்ருவாலா எழுதும் போது.

> “காங்கிரஸானது, கொஞ்சமும் சிந்தியாமல் ஒரு ஆசை வயப்பட்டு தன்னுடைய சித்தாந்தத்தைத் தூக்கியெறிந்து விட்டது. யுத்தத்தின் தன்மை தெரிந்து, மார்க்கெட்டின் கிராக்கி சபதத்திற்குத் தகுந்தவாறு சாமான்களைச் சேர்த்து வைத்து லாபம் பெற நினைக்கும் வியாபாரியைப் போல், காங்கிரஸ் பேரம் பேச ஆரம்பித்து

விட்டது. இந்த யுத்தத்தில் ஏன் இந்தியாவும் கொஞ்சம் லாபம் பெறக் கூடாது என அது நினைக்கிறது."

என்று குறிப்பிட்டிருந்தார். அக்கிரமத்தைக் காங்கிரஸ் அங்கீகரிக்காது. இந்த உலகத்தில் அக்கிரமம் எங்கு நடைபெற்றாலும் சரி அதைக் காங்கிரஸ் கண்டித்து வந்திருக்கிறது. அக்கிரம வயப்பட்டாருக்குத் தன் அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு தன்னுடைய கொள்கைக்கு ஹானியில்லாமல் தன்னால் முடிந்த உதவியை காங்கிரஸ் செய்து வந்திருக்கிறது. இந்தக் கொள்கையை அனுசரித்துத்தான், நிபந்தனையில்லா உதவிசெய்ய வேண்டும் என்று காந்திஜி குறிப்பிட்டிருக்க வேண்டும்.

சரி, அப்படியானால் இப்போது பேச்சுச் சுதந்திரம் கோரி அது மறுக்கப்பட்டது காரணமாய் சத்தியாக்கிரகம் நடத்தச் செய்து கிளர்ச்சி வளர்ந்து வருகிறதே, இது அவர் இதுவரை சொல்லி எழுதி வந்தவைகளுக்கும் காங்கிரஸினுடைய கொள்கைக்கும் முரண்பட்டதில்லையா? என்ற கேள்வி எழும். இல்லையென்று கூறுகிறார் காந்திஜி. இப்போது, இந்தியாவின் பிரச்னை சுதந்திரம் அல்ல வென்பதைச் சுட்டிக் காட்டுகிறார். இதைப் பற்றியும் ஆராயப் புகுமுன் திரும்பவும் பழைய இடத்திற்கே செல்வோம்.

பிரிட்டனுடைய யுத்தக் கொள்கையை விளக்கும்படி கேட்டு 1939ம் வருஷம் செப்டம்பர் மாதம் 15ந் தேதி காங்கிரஸ் காரியக் கமிட்டியில் நிறைவேற்றப் பட்டு அக்டோபர் மாதம் இரண்டாவது வாரத்தில் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியால் அங்கீகரிக்கப் பட்டிருக்கும் அந்தப் பிரசித்தி பெற்ற தீர்மானத்தில், பிரிட்டிஷாருடைய யுத்தக் கொள்கையை மட்டும் காங்கிரஸ் கேட்டிருக்கவில்லை. இந்தியாவினுடைய சுதந்திரமும் அதில் வலியுறுத்தப் பட்டிருந்தது. காங்கிரஸின் சுதந்திரக் கோரிக்கை அங்கீகரிக்கப்பட்டிருந்தால், அதாவது பிரிட்டன் அந்தக் கோரிக்கையை மதித்து இந்தியாவுக்குச் சுதந்திரம் கொடுத்திருந்தால் காங்கிரஸ் இந்த யுத்தத்தில் முழுப் பங்கெடுத்துக் கொண்டு கலக்க வேண்டும். தன்னுடைய தேச சுதந்திரத்திற்காகவுங் கூட, அதைப்பெறும் முயற்சிக்கு, அஹிம்சையையும் சத்தியத்தையும் ஏற்றுக் கடைப் பிடித்து வந்த காங்கிரஸ், பலாத்காரத்தின் முன்னே, சத்தியத்தையும் அஹிம்சையையும் ஆபரணமாகப் பூண்டு வெறுங் கையோடு தன் மார்பைத் திறந்து காட்டி தன்மக்களை மடியும்படி உத்திரவிட்ட காங்கிரஸ், அப்படிச் செய்வதாலேயே இந்தியாவின் சுதந்திரம் மட்டுமில்லை, உலகத்திலேயே மனிதத் தன்மையை நிலைநாட்டமுடியும்என்று நம்பி அக்கொள்கைகளை கடந்த 20 வருஷமாக மேற்கொண்டு வரும் காங்கிரஸ் திடீரென்று அவைகளை விட்டு விட்டு துப்பாக்கியைக் கைவில்பிடிக்க—ஹிம்சையை அனுஷ்டிக்க—ஆரம்பித்து விட்டதே என்று காந்திஜி கருதினார்.

"திரிபுரி காங்கிரஸில், காங்கிரஸானது மகாத்மாவினுடைய தலைமையில் தன்னுடைய அசையாத நம்பிக்கையைத் தெரிவித்துக் கொண்டதோடு, அவரைக் கலந்துகொண்டு அவருக்குப் பிடித்

திமான ஆட்களையே காங்கிரஸ் காரியக் கமிட்டிக்கு நியமிக்க வேண்டும் என்று தீர்மானிக்கப் பட்டது. இந்தத் தீர்மானத்தின் காரணமாக, தலைவராகத் தெரிந்தெடுக்கப் பட்டிருந்த பாபு சுபாஷ் சந்திரபோஸ் ராஜிநாமா செய்தார். முற்றிலும் காந்தீயவாதிகள் நிறைந்த காரியக் கமிட்டி அமைக்கப்பட்டது. ஆனால் அப்படிப்பட்ட காரியக்கமிட்டியானது, இப்போது அஹிம்சையைப் பலடாகக் கடைப் பிடிப்பதற்கு தனக்குப் பலமில்லை யென்று தெரிவித்துவிட்டது. இனி அது ஹிம்சை நிறைந்த சாதனங்களையும் கையாளலாம்"

என்று இத்தீர்மானம் பற்றி மஷ்ருவாலா அப்போது எழுதினர்.

இந்தச் சத்தியத்தையும் அஹிம்சையையும் மக்கள் மேற்கொள்வதாலேயே இந்த உலகத்திலிருந்து யுத்தபயம் ஒழியுமென்றும், மக்கள் மனிதத்தன்மை பொருந்தியவர்களாய் வாழமுடியுமென்றும், அப்படி அவர்கள் வாழ ஆரம்பித்தால், ஒருவரையொருவர் சுரண்டுவது, பேராசை முதலிய குணங்கள் அறவே ஒழிந்துவிடுமென்றும், பலாத்காரத்தையும் அன்புகொண்டு வென்றுவிடலாமென்றும், அதாவது பலாத்காரத்தில் நம்பிக்கை வைத்திருப்பவர்களிடையும், அவர்களுக்குள்ளே உறைந்து கிடக்கிற மனிதத் தன்மையையும் நல்ல குணங்களையும் எழுப்பிவிட்டு அவர்கள், தங்களுடைய செய்கைக்குத் தாங்களே வெட்கும்படி செய்ய வேண்டுமென்றும், அஃதின்றி பலாத்காரத்தைப் பலாத்காரங்கொண்டு அடக்குவதால் எதிர்பார்க்கும் பலன் விளையாதென்றும், கெடுதி, கெட்டபலனைத் தவிர நல்ல பலனைக் கொடுக்க முடியாதென்றும் அவர் நம்புகிறார். நல்லன்தானத்தை அடைவதற்காக, எளிதென்று நினைத்துக் கெட்டவழிகள் மூலம் செல்வதை அவர் அறவே வெறுப்பவர். லட்சியம் எவ்வளவுக்கு உயர்ந்ததாயிருக்கிறதோ அதற்குத் தகுந்தபடி அதை அடைவதற்குரிய வழியும் புனிதமுடையதாயிருக்கவேண்டும் என்பது அவருடைய எண்ணம். இந்தக் கொள்கையைத் தன்னுடைய வாழ்க்கையின் ஓர் அம்சமாக மட்டுமில்லை, அக்கொள்கையைத் தன்னுடைய வாழ்க்கையோடு இணைத்துக் கொண்டுவிட்டவர். இக்கொள்கையில்லாமல் அவரில்லை. ஒருகால், இந்தியாவின் சுதந்திரமா, சத்தியம் அஹிம்சையென்ற கொள்கையா என்ற பிரச்னை முன்னிற்குமாயின் (இந்த ஒரு வருஷமாக இந்தப் பிரச்னைதான்) காந்தியடிகள் அந்தக் கொள்கையைத்தான் சுட்டிக் காட்டி உபதேசிப்பார். அவர் உலக புருஷர். இவ்வுலகத்தின் நல்வாழ்வில் இந்தியாவின் சுதந்திரம் ஒரு சிறிய பிரச்னை என்று நம்புகிறார். ஏனெனில் உலகத்திலிருந்து இந்தியா பிரிந்திருக்கவில்லையே? தாம் காங்கிரசுக்குத் தலைமைதாங்கி வழிகாட்ட வேணடுமானல், தம்முடைய கொள்கைகளையும் வேலைத் திட்டங்களையும் பின்பற்ற வேண்டுமென்று அவர் தேசத்தைக் கேட்பதில் ஆச்சரியமில்லை. அவரும் தலைவராயிருக்க வேண்டும்; அவர் சொல்வதையும் கேட்க்

கூடாது என்றால் காந்தி யடிகள் அதை ஏற்றுக் கொள்ள மாட்டார்; அவரை உபயோகித்துக் கொள்ள ஒருப்பட மாட்டார். இதை அவர் ஒளிக்கவுமில்லை பலமுறை இது பற்றி ஸ்பஷ்டமாகத் தெரிவித்திருக்கிறார். "என்னுடைய கொள்கை பிடிக்கவில்லை யென்றால் என்னை விட்டு விடுங்கள்" என்று அவர் எத்தனையோ முறை கூறியிருக்கிறார். இன்றைய இந்தியாவில் அவருடைய ஸ்தானத்தைப் பூர்த்தி செய்வதற்கு வேறு ஆளில்லை. அவருடைய கொள்கை பல பேருக்குப் பிடியா திருக்கலாம். ஆனால் அவர் ஒரு திட புருஷர். கொள்கையில் அவருக் கிருக்கும் பிடிவாதத்தையும், தம்முடைய எண்ணத்தில் அவருக் கிருக்கும் நம்பிக்கையையும் யாரும் போற்றாமலிருக்க முடியாது. "மகாத்மா காந்தி யடிகளுடைய காலத்திலேயே இந்தியா சுதந்திரம் பெற்று விட வேண்டும்" என்று பல அறிஞர்கள் சொல்ல நாம் படித்தும் கேட்டு மிருக்கிறோம். ஆனால் அதே வார்த்தையை நாம் உபயோகித்தால் அது ஜனங்களை ஏமாற்றுவதாகும்.

சர்க்காருக்கும் நாம் ஒரு வார்த்தை கூறுவது அவசியமெனக் கருதுகிறோம். காந்திஜியினுடைய கோரிக்கைக்கு அவர்கள் இணங்கி யிருக்கலாம். "சர்க்காருக்கு இந்த நேரத்தில் தான் துன்பம் தர விருப்பமில்லை. இதனால் பொது ஜனச் சட்ட மறுப்பில்லை" என்று பல தடவை காந்தி யடிகள் வலியுறுத்திக் கூறுகிறார். அவர் எதைச் சொல்லுகிறாரோ அதை சர்க்கார் நம்பலாம். அவருடைய கொள்கை சிலருக்குப் பிடியா திருக்கலாம்; அவருடைய கற்பனையின் நிழலிலே ஒதுங்க முடியா திருக்கலாம். ஆனால் அவருடைய வார்த்தையில் யாரும் அவநம்பிக்கை கொள்ளத் தேவையில்லை. இந்தப் பேச்சுரிமைப் பிரச்னையில் இந்தியாவின் சுதந்திரப் பிரச்னையை அவர் கலக்கவே இல்லை. இந்த உரிமையை அவருக்குக் கொடுத்திருக்கலாம். ஒருவர் கேட்பதை நேரடியாக உடனே கொடுப்பது தன்னுடைய ஏகாதிபத்திய கௌரவத்திற்குப் பங்கம் என்று சர்க்கார் நினைக்குமானால் காந்தியடிகள் ஆரம்பித்த இயக்கத்திலாவது குறுக்கிடாமல் விட்டிருக்கலாம். காந்தியடிகள் கூடியவரை தாம் ஆரம்பித்திருக்கும் இந்த இயக்கத்திற்கும் காங்கிரசுக்கும் சம்பந்தமில்லாமலே செய்துகொள்வாரென்று தெரிகிறது. தம்முடைய கொள்கையை அப்படியே பின்பற்றக் கூடிய காந்திசேவா சங்க அங்கத்தினர்களைத்தான் இந்தச் சத்தியாக்கிரக இயக்கத்தில் அவர் ஈடுபடுத்தக்

கூடும். கொள்கைக்காக வாழும் அவர்; சர்க்காருக்கு இந்தநேரத்தில் துன்பம் கொடுப்பது தமது கொள்கைக்கு விரோதம் என்று கருதும் அவர்; அதை ஸ்பஷ்டமாகச் சொல்லி அதற் கனுசரணையாகக் காரியத்திட்டத்தை அமைத்திருக்கும் அவருடைய இயக்கத்தில் சர்க்கார் தலையிடாதிருந்திருக்கலாம். ஏனெனில் அடக்குமுறையைக் கையாண்டதால் இந்த உலகத்தில் இதுவரை எந்த ஓர் இயக்கமும் அழிந்துவிடவில்லை; ஆனால் பலம் பெற்றிருக்கிறது என்பதை சர்க்கார் அறியும். இந்தியாவிலிருந்துவரும் செய்திகள் ஜவஹர்லால் கைதியாகியிருப்பதுள்படநமக்கு அமைதியை ஊட்டுவதாயில்லை. பெரிய ஒரு வல்லரசோடு இந்த ஒரு வருஷமாகத் தளராது போராடி வரும் பிரிட்டிஷ் சர்க்கார், கடந்த ஒரு வருஷமாக மிகவும் சிரேஷ்டமான முறையில் இந்தியாவில் அரசியல் அமைதியை நிலை நாட்டி வரும் வின்லித்கௌ சர்க்கார் காந்திஜீ கோ நம் இந்தச் சிறிய பிரச்னையைக் கண்டுபலைப் பதும், அது பற்றி அவர்கள் கையாண்டு வரும் நடவடிக்கைகளும் எதிர்காலத்தின் சுபத்திற்கு அறிகுறியா என்பது நமது கவலையாயிருக்கிறது. ஆனால் இந்தக் கவலை, சர்க்காருக்கு இல்லை யென்று நாம் எப்படிச் சொல்ல முடியும்?

வந்தேமாதரம்

எந்த மனிதன், இந்த உலக இச்சைகளைக் கொஞ்சமும் லட்சியம் செய்வதில்லையோ, தன்னுடைய சுக துக்கங்களையும் புகழ்ச்சியையும் எவன் சிறிதும் கவனிப்பதில்லையோ அந்த மனிதனோடு நீ பழகுவதாயிருந்தால் மிகவும் ஜாக்கிரதையாக நடந்துகொள். ஏனெனில், அவன் நினைக்கிறான்; தான் நினைப்பதைச் சரியென்று நம்புகிறான். உடனே அக்காரியத்தில் பிரவேசித்து விடுகிறான். அவன் மிகவும் பயங்கரமான மனிதன். பெரிய சத்துரு. நீ அவனுடைய சரீரத்தை எளிதாக வெற்றி கொண்டு விடலாம். ஆனால் அவனுடைய ஆத்மாவை நீ வெற்றி கொள்ள முடியாது.

—கில்பர்ட் முர்ரே.



1940

செப்டம்பர்

28 இந்த செப்டம்பர்மாதம் முதல் இது வரை பிரிட்டன்மீது நடந்த விமானப் போரில் ஜெர்மனிக்கு 1046 விமானங்களும், ஆகஸ்டுமாதத்தில் 1115 விமானங்களும் சேதம் அடைந்திருப்பதாய் லண்டன் செய்தி கூறுகிறது.

பிரிட்டனுக்கு மாற்றிக் கொடுக்கப்பட்ட அமெரிக்க நாசகாரிக் கப்பல்களின் ஒரு பகுதி பிரிட்டிஷ் துறைமுகத்திற்கு வந்து சேர்ந்தது.

பிரஞ்சுக் கடற்கரை யோரத்திலுள்ள ஜெர்மன் படையெடுப்புத் தளங்களை பிரிட்டிஷ் விமானப்படை வெகு மும்முரமாய்த் தாக்கின.

130 லட்சம்டாலர் செலவில், வாஷிங்டனில் கட்டப்படும் விமானக் கூட்டத்தின் மூலைக்கல் நாட்டுவிழா நடைபெற்றது. பிரசிடென்ட் ரூஸ்வெல்ட் இதில் பேசினார்.

அன்னாம் மாகாணத்தில் காஸிம்பாய் என்ற இடத்திற்குச் சென்றிருக்கும் ரவீந்திரநாத் தாகூருக்கு குடல்நோயால் மிகவும் கவலைக்கிடமான நிலைமை யேற்பட்டிருக்கிறது.

ருமேனியாவிலுள்ள யூதர்களின் நிலங்களை ருமேனிய சர்க்கார் பறிமுதல் செய்யத் தீர்மானித்துவிட்டார்கள். நிலச் சொந்தக்காரர்களுக்கு நஷ்டஈடு கொடுக்கப் படுமாம்.

அகில இந்திய முஸ்லீம்லீக் காரியக் கமிட்டிக் கூட்டம் இன்று நடைபெற்றதில், கவர்னர் ஜெனரல் நிர்வாக சபையில் முஸ்லீம்லீக் பிரதிநிதிகளைச் சேர்த்துக்கொள்ளும் விஷயமாய், வைஸிராயின் யோசனையை அங்கீகரிக்க முடியாமலிருப்பதாகத் தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.

ரோம் பெர்லின்: அச்சோடு, ருமேனியாவும் பிணைந்திருப்பதாயும், மற்ற பந்தங்களிலிருந்து அது விடுபட்டு விட்டதாயும், ருமேனிய வெளிநாட்டு மந்திரி கூறுகிறார்.

பம்பாயில் நடைபெற்ற இந்தியத்தொழிற் சங்க காங்கிரஸின் 18 வது வருஷவிழா இன்றோடு பூர்த்தியாயிற்று. புது உத்தியோகஸ்தர்கள் தெரிந்தெடுக்கப் பட்டிருக்கிறார்கள். தலைவராக வி. ஆர். காளப்பா தெரிந்தெடுக்கப் பட்டிருக்கிறார்.

29 நோயுற்றிருக்கும் ரவீந்திரநாத் தாகூர் இன்று கல்கத்தாவுக்குக் கொண்டுவரப் பட்டார்.

இன்று இரவு, ஜெர்மன் வெளிநாட்டு மந்திரி வான்ரிப்பன்டிராப் தன் சொந்த விமானத்தில் மாஸ்கோவுக்குச் சென்றிருப்பதாக நியூயார்க் செய்தி கூறுகிறது.

புருத் தீர்மானத்திற்குக் காரணஸ்தராயிருந்த ஸ்ரீ, ராஜகோபாலாச்சாரியார் பம்பாய்த் தீர்மானத்தைத் தான் எதற்காக ஆதரித்தார் என்பதை விளக்கி மகாத்மாவுக்கு எழுதிய கடிதம், மகாத்மாவுடைய குறிப்போடு இன்றைய ஹரிஜன் பத்திரிகையில் வெளியாகியிருக்கிறது.

30 இன்று மகாத்மாகாந்தி ஸிம்லாவைஸிராய் மாளிகையில், மறுமுறையாக வைஸிராயோடு 2·45 மணிநேரம் பேசினார்.

பேச்சுச் சுதந்திரம்கோரி காந்திக்கும், வைஸிராய்க்கும் நடந்த கடிதப்போக்குவரத்துகள் வெளியிடப் பட்டிருக்கின்றன.

ஜெர்மனி, இத்தாலி ஜப்பான் இம்மூன்று தேசங்களுக்கும் ஏற்பட்டிருக்கிற ஒப்பந்தம் கையெழுத்தாகுமுன், ஜெர்மன் சர்க்கார் ருஷ்ய சர்க்காருக்கு அந்த ஒப்பந்தத்தைப்பற்றி தெரிவித்ததாக ருஷ்ய, பிரவ்டா என்ற பத்திரிகை எழுதுகிறது.

ஸ்பெயின் உள்நாட்டுமந்திரி ஸீனர் முசோலினியைச் சந்தித்துப் பேசினார்.

அக்டோபர்

1 பிரஸித்திபெற்ற விஞ்ஞான சாஸ்திரியும் யூதர் என்ற காரணத்தால் ஜெர்மனியிலிருந்து நாடுகடத்தப்பட்டு அமெரிக்காவில் வஸித்து வருபவருமான, ஈன்ஸ்டீனுக்கு அமெரிக்கப் பிரஜா உரிமை அளிக்கப் பட்டிருக்கிறது.

வான்ரிப்பன்டிராப்பும் ஸியானோவும், ஜப்பான் இத்தாலி ஜெர்மனி ஒப்பந்தம், பற்றி தந்திகள் பரிமாறிக்கொள்வதில் "ஜெர்மனி, இத்தலி, ஜப்பான் ஒப்பந்தத்தின் மூலம் உலகில் அசைக்கமுடியாத ஒரு புதியஏற்பாட்டை ஸ்தாபிப்பதற்கு ஒரு வலுவான அஸ்திவாரம் போட்டிருக்கிறோம்'' என ரிப்பன்டிராப் குறிப்பிட்டிருக்கிறார்.

2 இன்று மகாத்மா காந்தியின் 72வது பிறந்ததினம் எங்கும் கொண்டாடப் பட்டது.

3 காந்தி, வைஸிராயின் ஸிம்லா சம்பாஷணை முறிந்துவிட்டது பற்றி லண்டன் டைம்ஸ் எழுதியிருந்ததற்காக, காந்தி ஒரு அறிக்கை விட்டிருக்கிறார். அதில்தான் சமாதானத்திற்கு எப்பொழுதும் இணங்கத் தயாராயிருப்பதாயும், ஆனால் வழக்கம் போல் தேசீய இந்தியாவிடம் வைஸிராய் நம்பிக்கை காட்டவில்லை யென்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

பிரிட்டிஷ் மந்திரிசபையிலிருந்து சேம்பர்லின் ராஜீநாமாச் செய்துவிட்டார்.

4 இன்று, ஹிட்லரும், முசோலினியும், பிரன்னர் என்ற இடத்தில் சந்தித்து மூன்றுமணி நேரத்திற்கதிகமாகப் பேசிக் கொண்டிருந்தனர்.

5 வைஸிராயும், தானும் சம்பாஷித்த விஷயமாய் மகாத்மாகாந்தி ஒருஅறிக்கை வெளியிட்டிருக்கிறார்.

7 மகாத்மா காந்தியால் அனுப்பப்பட்டு வந்திருக்கும் மகாதேவதேசாய் இன்று ஜெயிலிலிருக்கும் சுபாஷ்சந்திரபோஸைச் சந்தித்துப் பேசினார். இவர் கவிதாகூரைப் பார்க்கவந்தவர்.

கழிந்த ஐந்துவருஷங்களுக்கிடையில் ருமேனியாவுக்குள் சட்ட விரோதமாக நுழைந்த யூதர்களெல்லாம் அடுத்த இரண்டு மாதங்களுக்குள் ருமேனியாவை விட்டு வெளியேறவேண்டும் என அறிவிக்கப்படுகிறது.

ருமேனியாவுக்குள் ஜெர்மன் துருப்புகள் சென்று கொண்டிருப்பதாகவும் இந்த ருமேனிய சர்க்காரும் ஆதரிப்பதாகவும்

ஒருசெய்தி கூறுகிறது, ருமேனியருக்குப் பயிற்சியளிக்கலாம்.

8 ருமேனியா எண்ணெய்த்தொழிலில் சம்பந்தப் பட்டிருக்கும் பிரிட்டிஷ் பிரஜைகள் அனைவரும் ருமேனியாவி லிருந்து உடனே வெளியேறி விடுவது நலமென பிரிட்டிஷ் ஸ்தானிகர் தெரிவித்திருக்கிறார்.

மாஸ்கோவிலுள்ள ஜப்பானிய ஸ்தானிகர் இன்று நடத்திய விருந்துக்கு சோவியத் அந்நிய நாட்டுமந்திரி மொலட்டோவும் வந்திருந்தார், ஜப்பானியஸ்தானிகரின் வாசஸ்தலத்தில் நடக்கும் விருந்தில் சோவியத் அதிகாரிகள் கலந்துகொண்டது இதுவே முதல்முறையாம். ஆனதால் இதையொரு விசேஷமாகக் கருதப் படுகிறது.

9 அகில இந்திய காங்கிரஸ் பார்லிமென்ட்டரி கமிட்டி வங்கசட்டசபைக் காங்கிரஸ் கட்சியின் தலைவராயிருக்கும் சரத் சந்திர போஸ் மீது ஒழுங்கு நடவடிக்கையெடுத்துக் கொண்டிருக்கிறது. காங்கிரஸ் கட்சியிலிருந்துஅவர்விலக்கப்பட்டிருப்பதோடு சட்டசபை ஸ்தானத்தையும் ராஜீநாமாச் செய்யவேண்டுமாறு கேட்கப்படுகிறது.

அமெரிக்காவில், பிரிட்டிஷ் ஸ்தானிகராயிருந்து வரும் லார்ட் லோதியன் இன்று தலைவர் ரூஸ்வெல்ட்டைச் சந்தித்துப் பேசினார்.

சமீபத்தில் லண்டன், ஜெர்மன் விமானங்களால் தாக்கப்பட்டபோது, செயின்ட் பால்ஸ் கதிட்டரலும் தாக்கப்பட்டதாகவும் கொஞ்சம் சேதமென்றும் ஒரு அறிக்கை வெளியிடப் பட்டிருக்கிறது.

10 இந்தியாவின் அரசியல் நிலைமை பற்றி கேட்கப்பட்ட ஒரு கேள்விக்கு, வைஸிராயின் நிர்வாகசபையிலும், யுத்த ஆலோசனைக் கமிட்டியிலும் சேர இஷ்டமில்லையென காங்கிரசும், முஸ்லீம் லீகும் தெரிவித்துவிட்டன. தற்சமயம் இதற்குமேல் எதுவும் சொல்வதற்கில்லையென இந்தியாமந்திரி காமன்ஸில் தெரிவித்தார்.

இந்தியத் தாய் என்ற புத்தகம் எழுதிய காதரென்மேயோ இறந்துபோனார். "சாக்கடை இன்ஸ்பெக்டர்" என்று இவரையே காந்திஜி எழுதியது.

விக்டோரியா ராணித்தலைபோட்ட ரூபாயையும் அரை ரூபாயையும் சர்க்கார் திருப்பி எடுத்துக்கொள்ள முடிவுசெய்திருப்பதாயும், 1941ம் வருஷம் மார்ச்சு மாதம் 31ந் தேதிக்குப்பிறகு அவை சட்டப்படி பழக்கத்துக்கு உபயோகப் படாதென்றும், ஆனால் 1941ம் வருஷம் செப்டம்பர்மாதம 31ந் தேதிவரை சர்க்கார் அவற்றை ஏற்றுக் கொள்வார்களென்றும் சர்க்கார் அவசரச்சட்டம் கூறுகிறது.

11 காங்கிரஸ் காரியக்கமிட்டிக் கூட்டம் இன்று வார்தாவில் கூடியது. காந்திஜியும் கூட்டத்தில் பிரசன்னமா யிருக்கிறார்.

12 பிரிட்டனின் சராசரி ஒரு நாளைய யுத்தச் செலவு 90 லட்சம் பவுனென்றும் புதிய கடன் பெறுவதற்கு பார்லிமெண்டின அனுமதி கோரப்படு மென்றும் தெரிகிறது.

13 இன்று இத்தலி விமானம் ஒன்று ஏடன் மீது குண்டுகளை வீசியது. உயிர்ச் சேதமோ பொருட் சேதமோ ஏற்படவில்லை. இதுவரை எதிரி விமானங்கள் ஏடன் மீது 18 முறை படையெடுத்திருக்கின்றன.

வார்தாவில் 11ந்தேதிமுதல் நடைபெற்று வந்த காங்கிரஸ் காரியக்கமிட்டிக் கூட்டம் இன்று பூர்த்திபெற்றது.

மேற்கே நடக்கும் யுத்தத்தின் போக்கில் விபரீதமான மாறுதல ஏற்படுமாயின் ஜப்பான், இத்தலிக்கும் ஜெர்மனிக்கும் உதவி செய்யத் தயாரா யிருக்கவேண்டும் என்று ஜப்பான் வெளிநாட்டு மந்திரி மத்ஸுகா, மேற்கண்ட மூன்று நாடுகளுக்கு மிடையில் ஏற்பட்டிருக்கிற ஒப்பந்தத்தைப் பற்றி இன்று பேசுகையில் குறிப்பிட்டார்.

16 மகாத்மா காந்தி தமது சத்தியாக்கிரஹ இயக்க சம்பந்தமாக எதிர்கால திட்டத்தைப் பற்றி விளக்கி, விரிவான ஓர் அறிக்கை வெளியிட்டார்.

பிரிட்டிஷ் யுத்தமந்திரி ஸ்ரீ அந்தோனி ஈடன் எகிப்துக்கு விஜயம் செய்தார். பம்பாய் கடற்கரையில் கொடிய புயல் காற்றினால், ஏராளமான சேதம் ஏற்பட்டது.

17 பிரிட்டனுக்கும் ஜப்பானுக்கும் ஏற்பட்டிருந்த மூன்று மாத தற்காலிக உடன்படிக்கை காலாவதியாகி பர்மா ரோடு திறக்கப்பெற்றது.

மகாத்மா காந்தியின் தனிப்பட்ட சத்தியாக்கிரஹ இயக்கம், வார்தாவுக்கருகிலுள்ள பானூர் கிராமத்தில் ஸ்ரீ விநோபா பாவால் ஆரம்பிக்கப்பெற்றது.

18 ஸ்ரீ வி. ஜே. படேல் உயில்படி காங்கிரஸுக்கு அவரது சகோதரர் வல்லபாய் படேலால் ஒரு லக்ஷ ரூபாய் காங்கிரஸுக்கு சமர்ப்பிக்கப்பெற்றது.

19 அமெரிக்க தலைவர் பதவிக்கு நிற்கும், தற்போதைய தலைவர் ரூஸ்வெல்டும், அவரது போட்டியாளர் ஸ்ரீ வில்கியும தங்களது தேர்தல் பிரசாரத்தை ஆரம்பித்தனர்.

20 பிரிட்டிஷ் ராயல் விமானப் படையினர் பெர்லினிலும், பிரெஞ்சு கடற்கரையிலும் அநேக இடங்களைத் தாக்கினர்.

இத்தாலிக்குச் சொந்தமான லிபியன் துறைமுகத்தளம், பிரிட்டிஷ் விமானிகளால் தாக்கப்பெற்றது.

21 பிரிட்டிஷ் பிரதம மந்திரி ரேடியோ மூலமாக பிரெஞ்சு மக்களுக்கு ஓர் முக்கியமான செய்தி விடுத்தார்.

காந்திஜீயின் சத்தியாக்ரஹ இயக்கத்தின் முதல் சத்தியாக்கிரஹியான ஸ்ரீவிநோபா பாவா கைது செய்யப்பெற்று, மூன்று மாத தண்டனை விதிக்கப்பெற்றார்.

ஹிட்லருக்கும், லவாலுக்கும் சம்பாஷணை நடைபெற்றது.

இத்தாலியும், ஜெர்மனியும் சேர்ந்து பிரெஞ்சு அரசாங்கத்திற்கு சில நிபந்தனைகளை விடுத்தன.

23 அமெரிக்கத் தலைவர் தமது தேர்தல் பிரசாரத்தில், தமது எதிர்கால திட்டத்தை வெளியிட்டார்.

ஹிட்லர் ஜெனரல் பிராங்கோவைச் சந்தித்துப் பேசினார்.

ஜப்பான், சைனாவுக்கு சில நிபந்தனைகளை வெளியிட்டிருப்பதாக ஓர் செய்தி கூறுகிறது.

24 ஹிட்லர் மார்ஷல் படேனைச் சந்தித்துப் பேசினார். சம்பாஷணையில் ஜெர்மனிவெளிநாட்டுமந்திரி வான் ரிப்பன்டிராபும், பிரெஞ்சு மந்திரி லவாலும் கலந்துகொண்டனர்.

பிரிட்டன் மீது குண்டுகளை வீசவந்த ஜெர்மானிய விமானங்களோடு இத்தாலிய விமானங்களும் கலந்துகொண்டன.

25 டில்லியில் கிழக்கு தேசங்கள் மகாநாடு இந்திய வைஸ்ராயால் திறந்துவைக்கப்பெற்றது. பர்மா, மலேயா, சிலோன் முதலிய அரசாங்க பிரதிநிதித்துவ தூது கோஷ்டிகள் மகாநாட்டில் கலந்துகொண்டன.

ஹரிஜன், ஹரிஜன்பந்து, ஹரிஜன்சேவக் ஆகிய மூன்று வாரப் பத்திரிகைகள் தற்காலீகமாக நிறுத்திவைக்கப்பெறும் என்று காந்திஜீ ஒரு செய்தி விடுத்திருக்கிறார்.

26 காந்திஜி இந்தியாவில் தோன்றியுள்ள புதிய நிலைமையைப்பற்றி ஓர் அறிக்கை வெளியிட்டிருக்கிறார்.

சைனாவோடு சமரஸம் செய்ய ஜப்பான் முயற்சிப்பதாக டோக்கியோ செய்தி கூறுகிறது.

27 இந்தியா மந்திரி. ஸ்ரீ அமெரி தற்போதைய யுத்த நிலைமையைப்பற்றி ரேடியோ சொற்பொழிவு ஒன்று நிகழ்த்தினார்.

விச்சி அரசாங்கம் ஜெர்மனிக்கு அடிபணிவதை அமெரிக்கா எதிர்த்து தனது அபிப்பிராயத்தை வெளியிட்டது.

28 இத்தாலி கிரீஸ் மீது படை எடுத்தது. கிரீஸ், பிரிட்டனிடம் உதவிக்கு விண்ணப்பித்துக்கொண்டது.

ஸ்ரீ சுபாஷ் சுந்திர போஸ் இந்திய சட்டசபையங்கத்தினர் பதவிக்கு டக்கா பகுதியில் எதிர்ப்பின்றி தேர்ந்தெடுக்கப்பெற்றார்.

இத்தாலியில் புளோரென்ஸ் நகரில் ஜெர்மானிய சர்வாதிகாரி ஹிட்லரும், இத்தாலிய சர்வாதிகாரி முஸோலினியும் சந்தித்து பேசினர். இவ்விருவர்களிடையே நடைபெற்ற நீண்ட சம்பாஷணையில், இருதேச வெளிநாட்டு மந்திரிகளும் கலந்திருந்தனர்.

29 கிரீஸின் எல்லைப்புரங்களிடம், அல்பானியாவின் எல்லைப் புரங்களிலும் கிரீக் துருப்புகளுக்கும், இத்தாலியத் துருப்புகளுக்கும் கொடிய முறையில் யுத்தம் நடைபெற்றது.

பண்டித ஜவஹர்லால் நேரு, வார்தா சேர்ந்து, காந்தியைச் சந்தித்து சுமார் 1-30 மணி நேரம் வரை சம்பாஷித்தார்.

30 கிரீஸை சுற்றியுள்ள கடற் புரங்களில் சுரங்க வெடிகள் வைக்கப்பட்டிருக்கின்றன வென்று பிரிட்டிஷ் கப்பற்படை தளகர்த்தர் தெரிவித்தார்.

31 ஜெர்மானிய வியாபார தூதுகோஷ்டி ஒன்று மாஸ்கோ அடைந்தது.

பண்டித ஜவஹருக்கும், காந்திஜிக்கும் சுமார் ஏழுமணி நேரம்வரை சம்பாஷணை நடைபெற்ற.

இந்திய வைஸ்ராய். லார்ட்டு, லின்லித்கோவின் பதவி 1941 ஏப்ரல் மாதத்திலிருந்து மீண்டும் ஒரு வருஷத்திற்கு நீடிக்கப் பட்டது.

ண்டித ஜவஹர்லால் நேரு வார்தாவிலிருந்து அலகாபாத்திற்கு திரும்பி வருகையில், அலகாபாத்திலிருந்து 15 மைல் தூரத்திலுள்ள செயோக்கி ஸ்டேஷனில், இந்திய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பெற்றார்.

“ஜோதி” அன்பர்களுக்கு

தற்போதைய ஐரோப்பிய யுத்தம் எப்படி விஷம் போல் பரவி வருகிறதோ அப்படியே காகித விலையும் நாளுக்கு நாள் விலையேறிக் கொண்டே வருகிறது. இந்த நிலைமையில், பக்கங்களைக் குறைத்து வெளியிட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. இந்த நிர்ப்பந்தம் தற்காலிகமாகத்தான் இருக்கும். அது வரையில் வாசகர்கள், பொறுமையுடனிருந்து “ஜோதி”க்கு ஊக்க மூட்டி வருவார்களாக.

மானேஜர்.

விக்கிரமன்

காங்கிரஸ் காரியக் கமிட்டித் தீர்மானம்

அக்டோபர் மாதம் 11, 12, 13ம் தேதிகளில் காங்கிரஸ் காரியக் கமிட்டிக் கூட்டம் வார்தாவில் நடை பெற்றது. அக்கமிட்டியில் நிறைவேற்றப் பெற்ற தீர்மானத்தைக் கீழே பிரசுரித்திருக்கிறோம்.

மகாத்மா காந்தியின் கட்டளைப்படி காங்கிரஸ் காரியக்கமிட்டி கூடியது. மகாத்மா வைசிராயுடன் நடத்தியசம்பாஷணையின் விபரத்தைக் கமிட்டி கேட்டது. தன்னுடைய திட்டத்தின் தன்மைகளை எவ்வளவு தூரம் வெளியிட்டுச் சொல்லமுடியுமோ அவ்வளவையும் அவர் சொன்னார். அவருடைய செய்கைகளைக் காரியக் கமிட்டி அங்கீகரித்தது. பம்பாயில் நடைபெற்ற அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில் நிறைவேறிய தீர்மானத்திற்கேற்ப மகாத்மா கோரும் வழியில் அவருக்கான பூரண ஆதரவும் அளிப்பதாகவும் அவருடன் ஒத்துழைப்பதாகவும் உறுதி கூறப்பட்டது.

சமஸ்தானப் பிரஜைகளுக்குப் பிரிட்டிஷ் இந்திய காங்கிரஸ் ஸ்தாபனங்களில் பிரதிநிதித்துவம் அளிக்கும் விஷயமாகச் சிலசிபார்சுகளைச் செய்ய சென்ற ஏப்ரல் மாதத்தில் காரியக் கமிட்டி சர்தார்படேல், ஸ்ரீபுலாபாய் தேசாய், ஸ்ரீமான் கிருபலானி ஆகியவர்களை ஒரு சப்கமிட்டியாக நியமித்தது. அவர்கள் தங்கள் சிபார்சை வெளியிட்டனர். அதைக் காரியக் கமிட்டி இன்று ஒத்துக்கொண்டது.

ஒரு மாகாணத்துடன் இணைத்துள்ள சமஸ்தான ஜனத்தொகையையும் கணக்கிட்டு பிரதிநிதி ஸ்தானங்கள் ஒதுக்கப் பட்டிருந்தால் சமஸ்தானப் பிரஜைகளுக்கே அந்த ஸ்தானங்களை அளிக்க வேண்டுமே யொழிய, மற்றவர்களுக்கு அளிக்கக் கூடாது. இதற்குப் போதுமானபடி காங்கிரஸ் அங்கத்தினர்கள் சமஸ்தானங்களில் சேராவிட்டால் அந்தஸ்தானங்கள் காலியாகவே இருக்க வேண்டும், ஆகவே சமஸ்தான வாசிகள், சமஸ்தானத்திலுள்ள காங்கிரஸ் கமிட்டியிலோ, அன்றி அந்த சமஸ்தானத்தை அடுத்தாற்போலுள்ள பிரிட்டிஷ் இந்தியாவிலுள்ள கமிட்டியிலோ சேரலாம். இவ்விதம் பிரிட்டிஷ் இந்தியாவிலுள்ள கமிட்டியில் சேர்ந்த காங்கிரஸ் அங்கத்தினர்களின் ஜாபிதாவைத் தனியாக வைத்திருக்கவேண்டும். இந்தத் தொகையைக் கணக்கிட்டு அவர்களுக்குப் பிரதிநிதித்துவம் கொடுக்க வேண்டும், சமஸ்தானப் பிரஜைகள் இல்லாத இடங்களில் பிரதிநிதித்துவம் அளிக்கப் படமாட்டாது. சிறு சமஸ்தானங்கள் விஷயத்தில் நிலைமைக் கேற்றவாறு இந்த விதியைத் திருத்தி அமுல் நடத்தலாம். மாகாணக் கமிட்டிகள் சமஸ்தான வாசிகளுக்குப் பிரதிநிதித்துவம் அளிக்கும் விஷயத்தில் இதைக் கவனிக்கவேண்டும்.

—முத்துராமலிங்கம்

சிறியாரும் பெரியாரும்

புவிக்கரசரெலாந் தனது புகழ் போற்றத் தமிழணங்கின் தவப் புதல்வராய் விளங்கித் தனித்திகிரி யோச்சியநம் கவிக்கரசாம் கம்பர் பிரான் கவின் பெறத் தீட்டிய அந்தக் காகுத்தன் சரிதையாம் இராமாயணம் என்னும் அற்புதக் கருவூலமானது வேண்டியோர் வேண்டியாங்கு அள்ளிக்கொள்ளும் அளப்பரிய நீதிக்களஞ்சியமாய்த் திகழ்கின்றது. உலகில் வாழ் வாங்குவாழ விரும்பும் மாந்தர் தம் வாழ்க்கையின் குறிக்கோள் இதுவெனக் குறித்துச் செல்லும் இக்காவியப் பூங்காவில் ஒரு சிறிது உலாப் போதர இலக்கியச்சுவை நனிவிரும்பும் நண்பீர் எம்மொடுவம்மின்!

அமரர்கந்துயர்களைவான் அயோத்தியிற்றோன்றிய அண்ணல் இராகவன் மிதிலைமா நகரிபுக்கு வேணியங்கங்கையான் வில்லினை யொடித்து மெல்லியல் நங்கையாம் சீதையை வெற்றிமாலை சூடி வேட்க நின்ற அன்னாள் தனயன் றன் மணவினை காண்பான் தயரதனும் மகிழ்வொடு புறப்படுகின்றான். அவனது சேனை வீரரும் நகரி மாந்தரும் கடலெனப் பரந்து செல்லு மக்காட்சியைக் கம்பர் கவினுறச் சித்தரிக்கின்றார். மலைகளனேகம் நதிகளனேகம் கடந்து மிதிலையை நோக்கிப் படரும் அம்மனிதக்கடலொடு துரகமனந்தம் கரிகளனந்தம் தேர்களனந்தந் தொடர்கின்றன. சந்திர சைலம் என்னும் பருவதத்தின் அடிவாரத்தில் இச்சேனைகளேகுங்கால் ஓர் இந்திரசாலமே நிகழ்கின்றது.

கருங்கற் பாரைமீது உருண்டு உருண்டு ஓடும் அத்தேர்களின் பொற்சக்கரங்கள் அக் கரும் பாரைக்குந் தமது பொன் வண்ணத்தை நல்கித் தங்கப் பாரைகளாக்குகின்றன. செங்கல்லைப் பொன்னாக்கிய செய்தி தேவாரத்தாலறிவோம். மற்றுங் கருங்கல்லைப் பொன்னாக்கும் ரசவாத வித்தையைக் கம்பரிடமல்லால் வேறியாரிடம் யாம் காண்பதற்கியலும்.
சித்தரிப்பாரவர்:

தெருண்ட மேலவர் சிறியவர்ச்
சேரினு மவர்தம்
மருண்ட தன்மையை மாற்றுவ
ரெனு மிதுவழக்கே
உருண்ட வாய்தொறும் பொன்-
னுருளுரைத்துரைத்தேறி
இருண்ட கல்லையுந் தன்னிற
மாக்கின விரதம்

(நிறைந்த அறிவினராம் பெரியோர்கள் சிறியோர்பாற் போய்ச்சேர நேரிடின் அன்னவரோடு அளவளாவி அவர் தம் அறியாமையை மாற்றி அறிஞராக்கி விடுவார்கள. இது உலக இயல்பு. அதுபோன்று இருண்டநிறமுள்ள கருங்கற் பாரைமீது உருண்டுருண்டோடிய அத்தேர்களின் பொற்சக்கரங்கள் அக் கரும் பாரைகளையும் தங்கநிறப் பாரைகளாக மாற்றி விட்

டன.) என்னே இந்திர ஜாலம். இக்கட்டுடைய வழக்கொன்றுளது இதில் நிறைந்த அறிவினராம் பெரியோர் சிற்யோரைச் சேரின் அவர் தம் மருண்ட தன்மையை மாற்றுவர் என்னுமிது உலக வழக்கென்கின்றுர் கம்பர். ஆனல், உலகுய்யக் குறள் தந்த ஒரு தனிப் பெரும்புலவர் திருவள்ளுவர் செப்புகின்றுர்,

சிற்றினமஞ்சும் பெருமை
சிறுமைதான்
சுற்றமாச் சூழ்ந்துவிடும்.

(பெரியோ ரியல்பு சிறிய வினத்தையஞ்சா நிற்கும். ஏனைச் சிறியோரியல்பு அது சேர்ந்த பொழுதே அதனைத் தனக்குச் சுற்றமாக வெண்ணித் துணியும்) சிறியார்தம் சேர்க்கையால் தத்தம் அறிவு மாறுபடு மென்பதும் அதனாற் றனக்குத் துன்பம் விளையுமென்பதும் ஆராய்ந்து நோக்கலின் அறிவுடையாராயினுர் இந்தச் சேர்க்கையை அஞ்சுவரென்றும், சிறியோர் இத்துணை ஆய்தலின்றித் தம்மோடொத்த அறிவினரா யிருப்பது கொண்டு அன்னுரைத் தமக்குச் சுற்றமாகக் கொள்வரென்றும் செப்புகின்றுர். ஆம். பெரியாராயினுரெல்லாம் இங்ஙனம் சிறியோரைக்கண்டு அஞ்சி ஒதுங்குவரேல் இச் சிறியார் குழூ உய்வதுதான் எங்ஙனமோ? சிறியோரிடம் "நீவிர் பெரியாரைத் துணைக்கொண்டு நல்லறிவு பெற்று உய்மின்" என உபதேசித்துவிட்டு பெரியோரை நோக்கி "பெரியீர! சிற்றினம் சேராற்க, நீவிரும் கெடுவீர்" என ஓதிடில் இதன பயனென்னும். அங்ஙனம சிறியோரைக் காணின் அன்னவரை நெருங்கி அயர்தம் அறியாமையைப் போக்கும் வன்மையிலராய் அஞ்சி ஒதுங்குவரேல் அன்னுர் பெரியாரென்பது எங்ஙனம் பொருந்தும்?

அன்றியும் சிறியோர் சேர்க்யால் தமது உயர் நிலை குலைவரேல் அன்னுரைப் பெரியா ரெனப் பேசுதற்கெங்கன மியலும்? சிறியோர் சேர்க்கையாலோ அன்றி வேறுகாரணத்தாலோ தமது உயர் நிலை தளராது தமது உடரிய குணவொழுக்கங்களையும் அறிவையும் தம்மினுந் தாழ்ந்தவரிடத்துப் படியும் படி செய்தலே பெரியார் கடன். இதுவே நிரந்தர நன்மையாமோர் செய்கை. ஆகவேதான் நமது கவிக்கரசு கம்பர் உலகிற்கொரு நீதியாம் குறள் தந்த வள்ளுவரின் கருத்துக்கு மாறு பட்டு, பெரியா ரெனின் தாம் சார்ந்த இனத்தின் தன்மைக்குத் தக்கவாறு தாம் மாறுபடாது தம்மிற்சூழ்ந் தவரைத் தமது தன்மைக்கே மாற்றிக் கொணர்வர் என்று தன்மதம் நிறுவி அதற்கு உதாரணமாய்ப் பொற் சக்கரங்கள் கருங்கற் பாறையில் ஓடி யோடி அதைப் பொற் பாறையாக்கிய சித்திரத்தைத் தீட்டிக்காண்பிக் கின்றுர்.

உலகப் பெரியா ரொருவர் இதுவே நீதி யெனச் செப்பிப் போந்த ஒன்றை மறுக்க வேண்டிய செவ்வியாயிது அமைந்தமையான் கம்பருக்கு இது ஒரு தர்ம சங்கடமாகத் தோன்றிற்றுப் போலும். ஆகவேதான் "பெரியார் சிறியாரைச் சேரின அவர் தம் மருண்ட தனமையை மாற்றுவர்" என்று சொல்லியவர் அதை முற்றுற முடிககாது "இது வழக்கே" என்ெறுரு வ காரம் கொடுத்து இழுக்கின்

றார். இதைத் தேற்றேகாரமாய்க் கொள்பவர் கொள்க.

"எனது அபிப்பிராயத்துக்கு மாறுபட்ட கொள்கையினரும் உண்டு எனினும் என் செய. உண்மைப் பெரியார் எங்குறினும் அவர் தம் உயர் நிலைவழுவாரன்றே, அங்ஙனம் தவறின் அன்னார் பெரியாராவது எங்ஙனம்? ஆகவே உயரிய பெரியார் சிற்றினங் கண்டஞ்சுவதோ அவர் தம் நிலை இழிவதோ யான் ஒவ்வேன். எனினும் உலகப் பெரியா ரொருவர் உரைத்துப் போயினதை மறக்க வேண்டி நேர்கின்றதே, இதற்கென் செய, இதுவோர் தர்ம சங்கடமே," என்றதொனிதான் அவர் தம்மருண்ட தன்மையை மாற்றுவ ரெனு "மிது வழக்கே" என்ற வாக்கியத்திற் றொனிக்கின்றது.

முன்னோர் மொழிபொருளே யன்றி யவர் மொழியும் பொன்னே போற் போற்றும் புலமையாளரில் கம்பர் முதன்மையர். அங்ஙனே வள்ளுவர் தம் பொன்னுரைகளையும் கருத்துக் களையும் ஆங்காங்கு தமது காவியத்தினிடையே எடுத்தாளுகின்றார். எனினும் மானுட வாழ்க்கையின் உன்னத லட்சியமாம் ஒரு பெருந்தனிக் கொள்கையை நிலை நாட்டிப் பேச நேரிடுமிடத்து எக்காலத்துக்கும் எம்மதத்தினர்க்கும் பொதுவாய உயரிய கொள்கையையே வற்புறுத்திப் போகின்றார். அதுகால் சிற் சில இடங்களில் வள்ளுவர் தம் கருத்துக்கு ஒத்தும் சிற்சில இடங்களில் மாறுபட்டும் போக நேரிடுகின்றது. ஆயினும் அவ்விதம் மாறுபட நேரிடுமிடங்களில் அவர் தம் வினய பூர்வமான வார்த்தைச் சித்திரம் அம்மாறுபாட்டை நயமுறத்திருத்தும் நல்லுரைகளாக மிளிர்க்கின்றன.

இங்ஙனமாயின் பொய்யா மொழியென்னும் குறளும் பொய்யேயோ? தெய்வப் புலவர் என்னும் திருவள்ளுவர் வாக்கும் சிறிதேயோ என வள்ளுவர் பக்தகூறாம் மயங்க வேண்டா. அணுவைத்துளைத் தேழ் கடலைப் புகட்டிக் குறுகத் தறித்த குறளுக்குக் குறை யொன்று மிலது. ஆகவே அப்பொய்யா மொழியையும் அதைச் சொற்ற புலவர் தம் உள்ளக் கிடையையும் பின்னர் ஆய்வாம்.

மனிதன், தன்னுடைய பலவீனத்தை மிக நன்றாகத் தெரிந்து கொண்டிருக்கிறான். ஆனால் அவனுடைய சக்தியை அவன் உணருவதில்லை. எந்த மனிதன், தன்னுடைய சக்தியை அறிந்து கொள்ளாமலிருக்கிறானோ அவன் எப்படி மனிதனாக முடியும்?

சாணக்கியன்

—"ச. மு."

சாவித்திரிபாய்

(வீரம் பொருந்திய கன்னடிய அரசி)

சிவாஜி 1677-ம் வருடத்தில் தென்மராட்டிய தேசத்தின் மீது படையெடுத்தபோது, அந்த இடத்திலுள்ள ஒரு பலமான கோட்டையைப் பிடிக்க வேண்டுமென விரும்பித் தன் அபிப்பிராயத்தைத் தமது உத்தியோகஸ்தர்களிடம் தெரிவித்தார். மகா ராஜாவின் விருப்பத்தைப் பூர்த்தி செய்யும் பொருட்டு இந்த சர்தார்கள் பெல்வாடி என்னும் பலமான கோட்டையைப் பிடிக்கச் சென்றார்கள்.

எதிரிகளின் வரவை ஏற்கனவே அறிந்து பெல்வாடி சேனைகள் அவர்களை எதிர்த்து நிற்க வேண்டிய சித்தம் செய்து கொண்டனர். இந்தச் சேனைகளுக்கு கிலிடார், தளுடார், ஹவில்டார் என்று மூன்று சேனாதிபதிகள் இருந்தார்கள். இவர்கள் மூவரும் என்ன கஷ்ட நஷ்டங்கள் நேரிடினும் எதிரிகளைக் கோட்டைக்குள் நுழைய வொட்டாமல் அடித்துத் துரத்த வேண்டுமெனத் தீர்மானித்துக் கொஞ்சமும் அஞ்சாமல் இரண்டு மாதம் வரையிலும் எதிர்த்து நின்றார்கள்.

ஒரு நாள் மராட்டியர்கள் கோட்டையைச் சுற்றிக் காய்ந்து உலர்ந்திருந்த ஒரு புதரில் நெருப்பு வைத்து விட்டார்கள். புதரில் பிடித்த நெருப்பு கோட்டை முழுதும் பரவ ஆரம்பித்ததால் கோட்டைக்குள் இருந்த கன்னடியர்கள் நெருப்பை அணைக்கும் பொருட்டுப் பற்பல திசையை நோக்கிச் சென்றார்கள். இதுதான் சமயமென்று மராட்டியர்கள் அவர்களை எதிர்க்க ஆரம்பிக்கவே, அவர்களும் எதிர்த்துத் தங்களா லானதைச் செய்ய முயன்றார்கள். இந்தச் சண்டையினால் நெருப்பை அணைக்கத் தடையுண்டாகி அக்கினி ஜ்வாலை எங்கும் பரவி வந்தது. இந்தப் பயங்கரமான தீவிபத்தினால் அநேக தளகர்த்தர்கள் உயிர் நீங்கும்படி ஏற்பட்டது. இங்ஙனம் நேரிட்ட உயிர்ச் சேதத்தைக் கண்ட கன்னடியர்கள் பயந்து மூலைக்கு மூலை ஓடத் தலைப்பட்டார்கள்

தளுடார் என்பவருடைய அருமை மனைவியான சாவித்திரிபாய் தன் உயிர் காதலனுடைய பெயரும் கீர்த்தியும் போய்விட்டதே என்னும் அவமானத்தாலும், பெல்வாடி கோட்டையை இழக்க நேரிட்டதே என்னும் வருத்தத்தாலும், தன் கணவன் இறந்துபோன துக்கத்தைக் கூடப் பாராட்டாமல், தன்னுடைய கணவனின் உடைவாளை எடுத்துக் கொண்டு அவனுடைய குதிரையின் மீது ஏறித் தன் ஆட்களைச் சேர்த்துக்

கொண்டு யுத்தத்துக்குப் புறப்பட்டு விட்டாள்.

சாவித்திரி தன்னுடைய ஜனங்களை ஒழுங்கு படுத்திப் போர்முகத்துக்குக் கொண்டுபோன விதமே மிகவும் நன்றாயிருந்ததாம். சாவித்திரி தனக்கு முன்னிருந்த மராட்டிய வீரர்களின் அணிவகுப்பை ஊடுருவிச் சென்று அநேக மராட்டிய வீரர்களைத் தன் வாளுக்கு இரையாக்கினாள். கன்னடியர்களுக்கும் தைரியம் அதிகரித்து மராட்டியர்களை மேல் விழுந்து வதைக்க ஆரம்பித்தார்கள். சாவித்திரிபாய் தான் அணிந்திருந்த உயர்ந்த ஆபரணங்களையெல்லாம் யுத்தகளத்திலேயே கழற்றித் தன்னுடைய ஆட்களுக்குப் பரிசளித்து விட்டாள். "வீரர்களே! நாம் யுத்தத்தில் எதிரிகளைக் கொல்லவேண்டும், அல்லது எதிரிகளால் கொல்லப்பட வேண்டும்; அப்பொழுதுதான் நமக்குப் புகழும் கீர்த்தியும் உண்டாகும் என்று சாவித்திரிபாய் தன் சேனைகளுக்குத் தைரியம் கூறினாள்.

மராட்டியர்களுக்கோ வரவரக் கோபம் அதிகமாகி விட்டது. யுத்தத்தில் மகாதீரர்கள் என்று உலகெங்கும் கொண்டாடப்படும் நாமா ஒரு பெண்ணினால் தோல்வி அடைகிறது? என்று நினைத்தார்கள். ஆகவே, தங்கள் சேனையை இரண்டாகப் பிரித்து, சாவித்திரியைத் தனியாக எதிர்க்கவும் மற்றவர்களைத் தனியாக எதிர்க்கவும் மராட்டியர்கள் தீர்மானித்துச் சாவித்திரியை அவளுடைய ஆட்களிடமிருந்து பிரித்துக் கொண்டு வந்து விட்டார்கள். அப்படித் தனியாகப் பிரிக்கப்பட்டு அவள் மராட்டியர்களுடன் யுத்தஞ் செய்து வந்தாள். கடைசியாக, ஒரு மராட்டிய தளகர்த்தன் அவளுக்குப் பின்புறமாகத் தெரியாமல் வந்து குதிரையின் கால்களை வெட்டி விட்டான். அப்போதும் சாவித்திரி அதைரியப் படவில்லை. உடனே குதிரை மேலிருந்து கீழே குதித்து கோபாவேசங் கொண்டவளாய் மராட்டியர்களின்மேல் விழுந்து அவர்களைச் சின்னாபின்னமாக்கத் தொடங்கினாள். இப்படி இவள் யுத்தஞ் செய்து கொண்டிருக்கும் போது, ஒரு மராட்டியன் இவளுக்குத் தெரியாமல் பின்புறமாக வந்து இவளைப் பிடித்து கொண்டான். இப்படிப் பிடிக்கப் பட்டும் அவள் அவனுடைய பிடியை திமிறிக் கொண்டு, அவனையும், அவனைச் சேர்ந்த பலரையும் வீர சுவர்க்கத்திற்கு அனுப்பினாள். இதுவரையிலும் சாவித்திரிக்கு ஒரு சிறு காயங் கூடப் படவில்லை. அவ்வளவு சாமர்த்தியமாய்ப் போர் புரிந்தாள். ஆனால், இந்தச் சமயத்தில் நடந்த சச்சரவில்தான் இவள் தன்னுடைய வலது கையையும், கையிலிருந்த வாளையும் இழக்க நேரிட்டது. அப்போது தான் சாவித்திரி சற்றுத் தளர் வடைந்தாள். ஐயோ! பரிதாபம்! இவள் தன்னுடைய கணவனின் கீர்த்தியைக் காப்பாற்ற வேண்டுமெனப் பட்ட பாடெல்லாம் அவலமாய்ப் போயிற்று. சாவித்திரியை இந்த நிலைமையில் கண்ட அவளுடைய ஆட்கள் மீண்டும் உக்கிரத்துடன் மராட்டியர்களை எதிர்த்தார்கள். எதிர்த்தும் என்ன பயன்?

தளகர்த்தனில்லாத சொற்ப ஜனங்கள் ஒரு பெரிய சேனையை எவ்வளவு

நாழிதான் எதிர்த்து நிற்பார்கள்! அநேகர் இறந்து போனார்கள், வேறு பலர் மராட்டியர்களால் கைதியாக்கப் பட்டார்கள்.

சண்டை ஒரு முடிவுக்கு வந்த பின்பு சாவித்திரிக்கு விலங்கு பூட்டி அவளை அச்சமயத்தில் கோல்காப் புரியி லிருந்த சிவாஜி மகாராஜ னிடம் கொண்டுபோய் நிறுத்தினார்கள். சிவாஜி மிகவும் சற்குணவந்தர். அவர் சாவித்திரியையும் அவள் நிலைமையை யும் பார்த்துப் பரிதபித்து அவளை விடு வித்து விட்டார். அப்படி விடுவித்த போது மிகவும் மரியாதையுடன் சிவாஜி மகாராஜா அவளை நோக்கி "அம்மா, நான் உங்களை என் தாயா ரைப் போல் கருதுகிறேன். உங் களுக்கும் உங்களுடைய குழந்தை களுக்கும் யாதொரு குறைவு மின்றி சம்ரட்சணை செய்து வர நான் ஏற்பாடு செய்கிறேன். ஆதலால் உங் களுடைய விருப்பத்தைத் தயை செய்து தெரிவியுங்கள்" என்று கேட்டார்.

இந்த வார்த்தைகளைக் கேட்ட வுடன் சாவித்திரிக்குக் கோபத்தினால் முகம் சிவந்து விட்டது. அவள் அவரை நோக்கி "ஏ அரசனே தற்சம யம் நான் உதவியற்றவளாயும், பல வீன முள்ளவளாயும் இருக்கிறேன் என்று தானே நீர் இவ்விதம் என்னைப் பரிகசிக்கவும் சோதனை செய்யவும் துணிந்தீர்? என்னுடைய தேசத்திற் குக் கேடாகவும், என்னுடைய பேருக்கும் என் கணவருடைய கௌரவத்திற்கும் அவமான முண்டா கும் படியாகவும் நடப்பேன் என்று நீர் நினைக்கிறீரா? அவ்விதம் ஒரு காலும் நடக்க மாட்டேன். எங்க ளுடைய அரசனுக்கு நம்பிக்கைத் துரோகம் செய்வது எங்கள் குலத்து வழக்க மல்ல. நியாயமாயும் உண்மை யாயும் நடக்கும் இந்த உத்தியோகஸ் தர்களால் தான் எங்களுடைய கோட்டை மதிப்படைந் திருந்தது. அப்படிப் பட்ட கோட்டையைச் சேர்ந்தவளாக நான் இருப்பதினால் பெருமை பாராட்டிக் கொள் ளத்தடை யென்ன? தயவு செய்து என்னுடைய வாளாயுதத்தை இப் போதே என்கையில் கொடுத்து விடும். இந்த நிலைமையிலும் நான் என்ன செய்கிறேன் என்பதைப் பாரும். என்னுடைய கணவனும் அவ ருடைய முன்னோர்களும் பிடித்திருந்த அந்த ஆயுதத்தை உம்மிடம் விட்டுச் செல்ல இன்னமும் நான் சகிக்க மாட் டேன். மகாராஜாவே! நான் சொல் வதைக் கேளும். என்னுடைய கத்தி யைத் திரும்ப என்னிடம் கொடுத்து விடும். நான் என்னுடைய விருப்பத் தைப் பூர்த்தி செய்து கொள்ளுகி றேன்" என்று மகா உக்கிரத்துடன் கேட்டாள். தன்னைத்தானே விடுவித் துக் கொள்ளவும், தன்னுடைய வாளா யுதத்தைக் கைப்பற்றிக் கொள்ளவும் நினைத்து சாவித்திரி மிகுந்த கோபத் துடன் தன்னைச் சுற்றியிருந்த காவலர் களைத் தள்ளிக் கொண்டு வெளியே வர முயன்றாள். இவளுடைய காம் பீர மான தோற்றமும் தைரியமான பேச்சும், இடமான சரீரமும் இவள் சமான்யமான பெண் அல்ல என்று அரசனை நினைக்கும்படி செய்தன.

அரசன் இவளை பெல்வாடிக்கே அனுப்பி இவளுக்கு வேண்டிய சகல சௌகரியங்களும் செய்து மிகுந்த

—"தேசிகன்"

ஜனநாயகமும் சர்வாதிகாரமும்

செப்டம்பர் மாத ஜோதியில் நண்பர் கே. சாமிநாதன் என்பவர் "உலக அரசியல் அமைப்புகள்" என்ற தலைப்புக் கொடுத்து எழுதி வெளிவந்த கட்டுரையைப் படித்தேன். அது சுருக்கமாகவும், ஆனால் கூடியவரை விளக்கமாகவும் இருந்தது. நமது தமிழ் நாட்டு மக்கள், அதிலும் தமிழ் பாஷா ஞானம் மட்டும் உள்ளவர்கள் அரசியல் விஷயங்களை நல்ல முறையில் தெரிந்து கொள்வதற்கு வசதியில்லை. அரசியல் வேறு, வாழ்க்கை வேறு என்று கருதியிருந்த காலம் ஒன்றிருந்தது. அதனுடைய பலன் பூராவையும் நாம் பெற்றோம்: அனுபவித்தோம்; அனுபவிக்கிறோம். உடலுக்கு உயிர் எப்படி அவசியமோ அப்படி வாழ்க்கைக்கு அரசியலறிவு என்பதை மேனாட்டார் தெரிந்து பல வருஷங்களாகி விட்டன. ஆசியாவிலும் ஒரு தேசம் அவர்களைத் தொட்டுக் கொண்டு செல்வதில் பின்னடையவில்லை. எனது தமிழ் நாட்டு மக்களுக்கு நான் ஒரு வார்த்தை சொல்லுகிறேன். "பாமரர்களும் புரிந்து கொள்ளக் கூடிய பாஷை" யென்று நினைத்து காலணாப் பெறாத வெட்டிக் கதைகளையும் விகடத் துணுக்குகளையும் படித்து நம்மை நாமே பாமரர்களாக்கிக் கொள்ள வேண்டாம். கிடைப்பது சிறிது நேரமாயிருப்பினும், அந்த நேரத்திலும் அறிவை விருத்தி செய்யக் கூடிய நல்ல நூல்களையோ அல்லது விஷயங்களையோ வாசியுங்கள். அப்படியுள்ள விஷயங்கள்தான் உங்களுடைய சிந்தனையைத் தூண்டும். இதைக் கருத்திற் கொண்டே நான்

மரியாதையுடனும் கௌரவத்துடனும் வைத்திருந்தார். இவளுடைய குழந்தைகளையெல்லாம் பள்ளியில் வைத்துப் படிக்கும்படி ஏற்பாடு செய்தார். ஆனாலும், சாவித்திரிபாய் தன்னுடைய கணவனின் மரணத்தினாலும் தான் மாாட்டியர்களிடம் தோற்று அடைந்த அவமானத்தினாலும் அனுபவிக்க வேண்டிய துக்கத்தை அதிக நாள் இந்த பூலோகத்திலிருந்து அனுபவிக்காமலே வீர சுவர்க்கம் சென்றாள்.

இந்தியாவில் பண்டைக் காலத்தில் வீரதீர பராக்கிரம சாலிகளான பெண்மணிகள் இருந்திருக்கிறார்கள் என்னும் உண்மையை உலகத்தாருக்கு அறிவித்து, கணவனுடைய கீர்த்திப் பிரதாபத்துக்கு எவ்வித பங்கமும் நேரிடாமல் காத்து, தன்னல மறுப்பே மக்களுக்கு அவசியம் வேண்டுமென்பதைக் குறிப்பித்து, தனது புகழ் என்றும் அழியா வண்ணம் யுத்தம் செய்து இம்மண்ணுலகைத் துறந்த சாவித்திரிபாய் இறந்தும் இறவாதவளே யென்பதில் தடையென்ன?

இன்று இக்கட்டுரையை யெழுதுகிறேன்.

நாம், ஜனநாயகம், சர்வாதிகாரம் என்ற இரண்டு விஷயங்களையும் ஆராய முற்பட்டிருக்கிறோமல்லவா? இதைப் பரிசீலனை செய்வதற்கு முன், அரசு, அதாவது சர்க்கார் என்றால் என்ன, சர்க்கார் என்ற ஒன்று ஏற்படுவதற்கு என்ன அவசியம் இவைகளை நாம் தெரிந்து கொள்ள வேண்டியது முக்கியம். மனித சமூகத்திலே, ஏழைகளையும், பலஹீனர்களையும் கொடுமையி னின்று காப்பாற்று வதற்காகவே சர்க்கார் என்ற ஒன்று ஸ்தாபிதமாவது அவசியமாயிற்று என்று சாதாரணமாகச் சொல்லுவார்கள். ஆனால் இதனுடைய சரியான உண்மையைத் தெரிந்து கொள்வதற்காக இப் பிரச்னையைக் கொஞ்சம் நுணுக்கமாய் ஆராய முற்படுபவர்கள் மேலே கூறியிருக்கிற காரணத்தை ஒப்புக் கொள்ள மாட்டார்கள். அதிகாரம், அல்லது சர்க்கார் என்பது பலத்தை ஆதாரமாகக் கொண்டது. பலமில்லையேல் எந்தச் சர்க்காரும் நடைபெறாது. மனித சமூகத்திலே யாரிடத்திலே பல மிருக்கிறதோ, பலசாலியாக யாரிருக்கிறார்களோ அவர்களுடைய கையிலேதான் சர்க்காரு மிருக்கும். அப்படியானால் மனிதனுடைய ஆரம்ப காலத்திலே அதாவது மனிதர்கள் அநாகரிகர்களாய் வாழ்ந்து கொண்டிருந்த அந்தக் காலத்திலே சர்க்கார் என்ற ஒன்று இருந்ததா, இருந்தால் அது எவ்வித நிலைமையி லிருந்தது என்ற கேள்வி யெழக்கூடும். அப்படியானால் மனிதவாழ்க்கையின் வளர்ச்சியைப் பற்றியும் நாம் ஆராய வேண்டும்.

ஒரு காலத்தில் மனிதர்கள் காடுகளிலே மிருகங்களைப் போன்று வாழ்ந்து வந்தார்கள்; அவர்களுடைய பரம்பரை தான் நாம் என்பதை யாவரும் அறிவோம். அவர்களுக்கும் ஏதோ ஒரு விதமான சர்க்கார் நடைமுறையி லிருந்திருக்கிறது. இதை யாரும் மறுப்பதற் கில்லை. ஆனால் தற்போதைய நாகரிக மனிதர்களுக் கிருக்கும் சர்க்காரைப் போன்று சட்ட மியற்றவும் அதைப் பரிபாலனம் செய்யவுமான சர்க்காரா யில்லா திருக்கலாம். ஆனால் சில நியதிகள் இருந்திருக்கின்றன. அந் நியதிகளே அந்தச் சர்க்காரின் சட்டங்களா யிருந்திருக்கின்றன.

அந்தக் காலத்து சர்க்காருக்கும் சில நியதிக ளிருந்ததாய்க் குறிப்பிட்டோமல்லவா, அந்த நியதிகள் தான் என்ன? மனிதர்கள் மிருகங்களைப் போன்று காட்டு வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருந்த அந்தக் காலத்தில், அவர்களில் எவன் மற்ற யாவரிலும் பலவானா யிருக்கிறானோ அவன்தான் சர்க்கார் அல்லது தலைவன். தனக்கு எது சரியாகத் தோன்றுகிறதோ அதெல்லாம் அவனுடைய சட்டங்கள்தான். அவனுக்கு எது லாபத்தைக் கொடுக்கக் கூடியதோ அதெல்லாம் அவனுக்குச் சரியாகத் தோன்றுபவை. அப்படியானால் அந்தப் பலவானாகிய சர்க்கார், அல்லது தலைவனுக்கு லாபம் தரக்கூடிய விதமாகச் சில நியதிகள் வகுக்கப் பட்டிருக்கின்றன; அந்

நியதிகளே சட்டங்களாக உரு வெடுத்தன என்று நாம் அறிகிறோம் பின்னே, படிப்படியாக மனிதர்கள் நாகரிகப் பாதையிலே முன்னேறி வர வர அவர்களுடைய சர்க்காரும் அதை ஒட்டியே முன்னேறி வந்தது. அதைப்போலவே வழக்கத்தை அனுசரித்து அந்த சர்க்கார் சில சட்டங்களையும் சிருஷ்டித்துக் கொண்டது. அதாவது காலத்துக்கும் நிலைமைக்கும் தகுந்த முறையில். ஆனால் தன்னுடைய சுயநலக் கொள்கைக்கு ஹானியில்லாமல். இப்படியாக உருவாகி வந்த சர்க்காரின் கடமையென்ன? அதனுடைய தலைவன் அல்லது ராஜாவினுடைய நன்மைகளைப் பாதுகாப்பது. இந்தச் சர்க்காரால் இயற்றப்படும் எந்த ஒரு சட்டமும் இதை அடிப்படையாகக் கொண்டதாகவே இருந்திருக்கிறது. உலக சரித்திரத்தை நாம் ஆராய்ந்தோமானால் மேலே கண்ட காட்சிகளைத் தான் நாம் பார்க்கிறோம். இன்னமும், சரித்திரத்தை நாம் ஆராய்வோமானால், அந்தக்காலத்திலே, இரண்டு தேச சர்க்கார்களுக்கு, அதாவது ராஜாக்களுக்கு யுத்தம் மூண்டதேயானால், எந்த தேச அரசன் அந்தச் சண்டையில் கொல்லப்பட்டு விடுகிறானோ, அப்படிக் கொல்லப்பட்டு விட்ட அரசனுடைய தேசமானது, ஜெயித்த அரசனுடைய சொத்தாகி விடுகிறதையும் நாம் பார்க்கிறோம். அந்தக் காலத்தில் இரண்டு சர்க்கார்களுக்குச் சண்டை மூண்டுவிட்ட தென்றால் இரண்டுதேச் ஜனங்களுக்குச் சண்டையென்பது அர்த்தமல்ல. இரண்டு தேச ராஜாக்களுந்தான் மோதிக் கொள்வார்கள். இதில் ஒருவன் இறந்து விட்டால் அவனுடைய சொத்தாகிய ஜனங்களா இனி, ஜெயித்த அரசனை யெதிர்த்து நிற்கப் போகிறார்கள்?

அந்தக் காலத்திலிருந்து, மனிதர்களும், அவர்களுடைய சர்க்காரும், அந்தச் சர்க்காரின் நடவடிக்கைகளும், சமயத்திற்கும் நிலைமைக்கும் தக்கவாறு படிப்படியாக மாறி வந்திருக்கிறதை நாம் பார்க்கிறோம். இதில் ஒரு விசேஷமென்னவென்றால் எந்த விதமாக மாறி வந்தாலுங் கூட அந்தச் சர்க்காரின் லட்சியம் அதாவது குறிக் கோள் மட்டும் மாறவே இல்லை அதனுடைய நன்மை, சுயநலம் இவற்றைப் பாதுகாத்துக் கொள்வதி லிருந்து எந்த ஒரு மாற்றத்தையும் அடைந்ததாக நாம் சரித்திரத்தில் பார்க்க முடியவில்லை.

மனிதன் காட்டுமிராண்டி வாழ்க்கை நடத்திக் கொண்டிருந்த அந்தக் காலத்தில் அந்த மனித சமுகத்திலே சரீர பலத்திற்குத்தான் முக்கியத்துவம் கொடுக்கப் பட்டது. பின்னே மனிதன் சில ஆயுதங்களைச் செய்யவும், அவற்றை உபயோகிக்கவும் தெரிந்து கொண்டான். அந்தக் காலத்தில் இந்த ஆயுதங்களைத் திறமையாக உபயோகிக்கத் தெரிவதே சக்தியாகக் கொள்ளப்பட்டது. எவனொருவன் இந்த ஆயுதங்களைத் திறமையாக உபயோகிக்கிறானோ, அதாவது குறிபார்த்து உபயோகிப்பதில் வல்லவனோ, கெட்டிக்காரத்தனமாக வாளேந்திப் போர்புரிவதில் வல்லவன் எவனோ அவனே ராஜாவாகவோ, அல்லது சேனை நாயக

னாகவோ உருக் கொண்டான். ஆனால் பின்னே, வர வர அந்த நிலைமை மாறி விட்டது. மேலே கண்டபடி, குறிபார்த்து எய்வதில் வல்லுநர்கள் என்றோ, மற்று, வாளேந்திப் போர் புரிவதில் வல்லுநர்க ளென்றோ, நெப்போலியனோ, ஸ்டாலினோ, ஹிட்லரோ அரசனாகவோ, தலைவர்க ளாகவோ வந்து விடவில்லை. ஏனெனில் இக்காலத்து மனித சக்தியானது, ஆயுத சக்தியைப் பார்க்கிலும் மற்ற சில விஷயங்களைப் பொறுத்ததா யிருக்கிறது.

பழய காலத்திலே அரசனுக்குத் தான் முக்கியத்துவம். அந்தத் தேசத்தின் மனித சமூகத்திலே அரசனே பெரிய சம்பத்து சாலியாகக் கருதப்பட்டான். ஆனால் பிந்திய காலத்தில், மனித சமூகத்திலே அரசனல்லாத சிலபேர் தனவந்தர்க ளாக மலர்ந்தனர். நாளடைவில் இவர்களுடைய எண்ணிக்கையும் வளர்ந்து கொண்டே வந்தது. தங்களுடைய உடைமையின் சக்தியால் இவர்கள் எந்தக் காரியங்களையும் சாதிக்கக் கூடியவர்களா யிருந்தனர். நினைத்ததைச் சாதித்துக் கொள்வதற்கு இவர்களுடைய சொத்து இவர்களுக்கு மிகுந்த சகாயமாயிற்று. இவர்களுடைய தயவை எதிர்பார்க்க வேண்டியவனான அரசன். ஏன்? இவர்களிடத்தில் ஏராளமான தனமிருக்கிறதல்லவா? இந்தத் தனம் அவனுக்குத் தேவை. அப்படியானால் இவர்களுடைய தயவுக்கு அவன் காத்திருக்க வேண்டியவன் தானே! அவர்களுடைய வார்த்தைகளுக்கும் இவன் கட்டுப்பட வேண்டியதேற்பட்டது. சில சமயம் இவர்களுக்கு அவன் பயப்பட வேண்டியதாயும் ஆயிற்று. இந்த விதமாக அரசனுடைய அதிகார சக்தி குறைய ஆரம்பித்தது. பணம் படைத்தவர்கள், மற்ற ஜனங்களைத் தங்கள் பக்கம் இழுத்துக் கொண்டு சில சுதந்திர வார்த்தைகளை வெளியிட ஆரம்பித்தனர். இதனால் அரசாட்சியில், எல்லோருடைய அபிப்பிராயத்துக்கும் உரிமை ஏற்பட்டது. மனித சமூகத்திலே ஜனநாயகம் என்ற சித்தாந்தம் உருவாகி அது அரசாட்சியில் இடம்பெறத் தொடங்கியது இக்காலத்திலேதான். இந்த ஜனநாயகமுறை வெகுகாலம்வரை அதாவது இயந்திர நாகரிகம் மனிதசமூகத்திலே இடம் பெறும்வரை அமுலிலிருந்தது. இந்த ஜனநாயகமுறை அமுலிலிருந்த காலத்தில், அரசியல் அதிகார முறையிலோ, அல்லது அதை அமுல்நடத்தும் முறையிலோ ஜனங்கள்யாவரும் சமமாகவே கருதப்பட்டு வந்தார்கள். ஆனால் பின்னே இயந்திர நாகரீகம் புகுந்தகாலை, மனித சமூகத்தில் ஒருபெரிய பயங்கரமான மாறுதலேற்பட்டது. ஜனங்களின் பழையகாலத்துப் பொருளாதார அஸ்திவாரங்கள் தகர்ந்துவிட்டன. சில பேர் தங்களுடைய சம்பத்தைக் கொண்டு பெரிய மில்களையும் தொழிற்சாலைகளையும் திறந்தனர். மற்றவர்கள் அந்த தொழிற்சாலைகளுடன் போட்டி போடமுடியாமல் தங்கள் தொழில்களையும் அந்தத் தொழிற்குரிய சாதனங்களையும் அடியோடு விட்டுவிடும்படியான நிலைமையேற்பட்டது. உதாரணமாக, ஜனங்கள் நூல் நூற்றார்கள்; நெசவாளி நெய்து கொடுத்தான். இயந்திரநாகரிகம் வந்தது. அதோடு

இவர்கள் போட்டிபோட முடியவில்லை. பின்னே இவர்களுக்கு என்ன கெதி யேற்பட்டிருக்கிறதென்பது நாம் தெரிந்ததேயாகும். இந்தஜனங்கள் இந்தஉலகத்தில் வாழவேண்டுமானால், அதாவது இவர்கள் வயிறு வளர்க்க வேண்டுமானால் ஒரே ஒரு வழிதானிருந்தது. கூலி வேலை செய்ய வேண்டியதைத் தவிர வேறு வழியில்லை. அந்த மில்களில் கூலிவேலை யென்றால் என்ன அர்த்தம்? தங்களுடைய உழைப்பின சக்தியை விற்பது. இவ்விதமாக இயந்திர நாகரிகம் மனித சமூகத்தில் நுழைந்தவுடன் மனித சமூகம் இரண்டு பிரிவாகப் பிரிந்தது. தங்களுடைய உடைமையின் சக்தியால் பொருள் உற்பத்திச் சாதனங்களை அதாவது பெரிய பெரிய மில்களையும் தொழிற்சாலைகளையும் தங்களுடைய ஆதீனத்திலே வைத்துக்கொண்டு, மற்ற ஜனங்களை கூலிக்கமர்த்தி லாபம் சம்பாதிக்கும் கோஷ்டி ஒருபக்கமும், தங்களுடைய உழைப்புச் சக்தியை முதலாளிகளுக்கு விற்று விட்டு அவர்கள் லாபம்பெற, வங்கிநிற்கும்கோஷ்டி ஒருபக்கமும் ஆக மனிதசமூகம் இரண்டாகப் பிரிந்தது. ஜனங்களுடைய அபிப்பிராயப்படி அவர்கள் சம்மதப்படி, அரசாட்சி நடைபெறுவதற்குத்தான் ஜன நாயகமுறை யென்று பெயர். ஆனால் அரசாட்சி நடத்துபவர்கள் யாராயிருப்பார்கள்? யார் சக்திசாலியாயிருக்கிறார்களோ அவர்கள் கையிலேதான் ஆட்சியுமிருக்கும். இதை நாம் ஆரம்பத்திலிருந்து ஆராய்ந்து வருகிறோமல்லவா அப்படியானால் இன்றைய மனிதசமூகத்திலே சக்திசாலிகள் யார்? யாரிடத்திலே பொருள் உற்பத்திச் சாதனங்கள் இருக்கின்றனவோ, அதாவது மில்கள், தொழிற்சாலைகள் யாருடைய ஆதீனத்திலிருக்கின்றனவோ அவர்கள்தான் ஆட்சி செய்வார்கள். அவர்களுடைய ஆட்சி யென்றால், அவர்களுடைய நன்மைக்குகந்த முறையில், அவர்களுடைய நன்மைகளைப் பாதுகாப்பதாகத்தானே யிருக்கும். இத்தகைய ஆட்சி முறைக்கு, தயவுக்குக் காத்திருப்பவர்கள், இவர்களுடைய போஷணையிலே வாழ்பவர்கள் உதவியாகவும் அமைந்தார்கள்.

ஜனநாயக முறையிலே, ஜனங்களுடைய ஓட்டுக்குத்தான் பிரதானம். ஆட்சியை நிர்ணயிப்பது இவர்களுடைய ஓட்டுகள்தான் என்று ஒப்புக் கொள்ளப் பட்டிருக்கிறது. ஜனங்களுக்குப் பூரணமான ஓட்டுரிமை யிருக்கிறது. ஆனால் இவர்களிடமிருந்து இந்த ஓட்டுக்களைப் பெறுவதற்கும், ஜனங்களை ஓட்டர்களாக ஆக்குவதற்குமுரிய சாதனங்கள் தனவந்தர்களிடத்திலே தானிருக்கின்றன. ஆனதால் முதலாளித்துவத்தை அடிப்படையாகக் கொண்ட தேசங்களில் ஜனநாயகமுறை அமுலிலிருந்தாலும் அதுபெயரளவோடு தானிருக்கிறது. இதனால் ஜனங்கள் அடிக்கடி கிளர்ச்சி செய்கிறார்கள். உரிமையற்ற, சாதனமல்லாத இந்த ஜனங்களுடைய எண்ணிக்கை பெருகப் பெருக இவர்களை அடக்கி வைப்பதும் சிரம சாத்தியமான காரியமாகி விடுகிறது. இவர்களை ஏதோ ஒருவகையில் திருப்திப் படுத்தி இவர்களுக்கு வேலை கொடுத்து நடத்திச் செல்வதற்காக இந்த முதலாளித்துவத்தை அடிப்படையாகக் கொண்டதேசங்கள் மற்ற

நாட்டின்மீது படையெடுத்து, அதைத் தங்கள் குடியேற்ற நாடாகவோ அல்லது அடிமை நாடாகவோ வைத்துக் கொள்ளவேண்டிய தேற்படுகிறது. இவ்விதம் நாடுபிடிக்க வசதியற்ற தேசங்களிலுள்ள ஜனங்களின் நிலைமை மிகவும் கேவலமாகவும் கவலைக்கிடமாகவும் ஆகிவிடுகிறது. அந்த நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டம் பெருகுகிறது. வேலைசெய்பவர்களுக்குக் கொடுக்கப்படுவதும் குறைந்த கூலிதான். அதனால் அவர்களுடைய வாழ்க்கையே கடினமாகி விடுகிறது. எங்கே தொழிலாளிகள் புரட்சி ஆரம்பித்து விடுவார்களோ என்று முதலாளிகள் கவலை கொள்ளுகிறார்கள்.

இந்த நிலைமையில் புரட்சி யேற்பட்டு வெற்றி பெற்றால், தொழிலாளிகளும் விவசாயிகளும் தங்கள் அதிகாரத்தை ஸ்தாபித்துக் கொள்ளுகிறார்கள். இந்த விதமாகவே ருஷ்யாவில் பொதுவுடமை சர்க்கார் ஸ்தாபிதமாயிற்று. ஆனால், உரிமை யற்ற ஜனங்களுடைய புரட்சி வெற்றி பெறவில்லை யானால், அங்கு முதலாளித்துவ முறை பலமாகும். ஆயினும், ஜனங்கள், புரட்சியில் தோற்றிருந்தாலுங்கூட அவர்களுடைய கொதிப்பு அடங்காது. அப்படியானால் அவர்களைப் பூரணமாக அடக்கி ஆட்சியை நடத்த வேண்டி யிருக்கிறது. இந்த நிலைமையில் ஜனநாயகம் என்பது சிதறுண்டு போய் முதலாளிகளுடைய பிரதிநிதியாக ஒரு சர்வாதிகாரி தோன்றுகிறார். சென்ற யுத்தத்திற்குப் பின், இத்தலியிலும் ஜெர்மனியிலும் நடை பெற்றது இதுதான்.

ஜனநாயகம் உதித்த வரலாறு, அதனுடைய வளர்ச்சி, முறிவு இவைகளைப் பற்றி நாம் மேலே தெரிவித்தோம். இந்த ஜனநாயக முறைக்கு எதிராகச் சொல்லப்படும் அபிப்பிராயங்களை வரிசைக்கிரமமாக நாம் கவனிப்போம்.

1. அரசியலை நடத்துபவர்கள் கெட்டிக்காரர்களாயிருக்கவேண்டும். காலம், நிலைமை இவற்றை அறிந்தவர்களாயிருக்க வேண்டும். ஒரு தேசத்தின் சாதாரண ஜனங்கள் பூராவும் இந்தக் குணங்கள் பொருந்தியவர்களா யிருக்க முடியாது. சில பேருக்குத்தான் இவ்வித விசேஷ குணங்கள் அமைந்திருக்கின்றன.

2. ஜனநாயகத்தின் முக்கிய அம்சம், சட்ட மியற்றும் சட்டசபை, அல்லது சபைகள் ஜனங்களுக்கு ஜவாப்தாரியாக இருப்பது. ஜனங்கள் ஆளப்படுவதற்கான சட்டங்கள் இந்தச் சபையிலே சிருஷ்டிக்கப் படுகின்றன. தங்களுடைய வாக்குரிமைகளால், அதாவது ஓட்டுகளால் ஜனங்கள் தங்களுடைய பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்து அனுப்புகிறார்கள். அந்தப் பிரதிநிதிகளால் சட்டங்கள் இயற்றப் படுகின்றன. பிரதி நிதிகளைத் தெரிந்தெடுப்பதற்குரிய முழு உரிமையும் ஜனங்களுக்குண்டு. அப்படியானால் ஜனங்களுக்கு ஓட்டுரிமை என்று கூறுகிறார்களல்லவா? அந்த உரிமை அவர்களுடைய எந்த யோக்கிதையைப் பொறுத்துக் கிடைக்கிறது? சர்க்காருக்கு அவர்கள் வரி கட்டுபவர்களா யிருக்கவேண்டும்; அல்லது வயது வந்தவர்களாயிருக்க வேண்டும். அதாவதுபணம், அடுத்தது வயது. ஒருதேசத்தை ஆளுவதற்

கான பிரதிநிதிகளைப் பணமும் வயதும் தேர்ந்தெடுக்கும் படியான யோக்கியதை பெற்று விடுகின்றன! வேறு புத்தி, அறிவு முதலிய குணங்கள் கவனிக்கப் படுவதில்லை. உதாரணமாக கல்விநிரம்பிய பெரியஒரு ஆசிரியனுக்கும், கல்விவாசனையே அற்ற, ஆனால் வயதுநிரம்பிய சாதாரண ஒரு மனிதனுக்கும் ஓட்டுரிமையில் எந்த வித்தியாசமு மில்லை.

3. ஓட்டுகள் எப்படிப் பெறப்படுகின்றன? ஜனங்களை மயக்கக் கூடிய பேச்சாளியாயிருக்கிறான். அவனுக்கு எந்த ஒரு கொள்கையோ, நடைமுறையோ கிடையாது; இருந்தும், தன்னுடைய பேச்சுச் சாதுர்யத்தால் ஜனங்களை மயக்கி ஓட்டுப் பெற்று விடுகிறான். தேர்தல் காலத்தில் யார் நிறையப்பணம் செலவுசெய்கிறார்களோ, தற் காலநாகரிக வாகனங்களான கார், ஆகாயவிமானம் முதலியன யாரால் ஜாஸ்தியாக உபயோகிக்க முடியுமோ, சிறியனவும் பெரியனவுமான நோட்டீஸ்கள் அச்சடித்து வெளியிட யாரிடத்தில் பணமிருக்கிறதோ அவர்கள்தான் ஜனங்களுடைய பிரதிநிதிகளாக சட்டசபையை அலங்கரிக்க முடிகிறது; அப்படித்தான் முடியும். இவர்களையும் இவர்களுடைய சுயநலத்தையும் பிரிக்கமுடியாது. அப்படியானால் அந்தச் சட்டசபைகளில் செய்யப்படும் சட்டங்கள் எப்படியிருக்கும் என்று அதிகம் கூறத் தேவையில்லை. அவர்களுடைய சுயநலங்களையும் அவர்களுடைய உரிமைகளையும் பாதுகாக்கக் கூடியனவாகத்தான் அந்தச் சட்டங்களிருக்கும்.

4. ஜனநாயக முறையில், சட்டசபை இரண்டு கட்சிகளை யுடையதாயிருக்கிறது. மெஜாரட்டிக் கட்சி சர்க்காரை நடத்தும் பொறுப்பை ஏற்றுக் கொள்கிறது. மற்றது எதிர்க் கட்சி. சர்க்காரை நடத்துபவர்கள் எந்த விதமான காரியத்தைச் செய்தாலும், அதை எதிர்த்தே தீரும் படியான சுபாவந்தான் இந்த எதிர் கட்சிக்கு. இதற்கு எத்தனையோ உதாரணங்களைச் சொல்லலாம். மது ஒழிப்புத் தீர்மானம் எதிர்க்கப் பட்டது யாவரும் அறிந்ததுதானல்லவா? இதனாலேதான் பெயர் பெற்ற ஆசிரியர் ஒருவர் ஒரு சமயங் கூறினார்:— சமுத்திரத்திலே ஒரு கப்பல் செல்கிறது; அதை இரண்டு புரமும் மாலுமிகளிலிருந்து ஓட்ட ஆரம்பித்தால் அந்தக் கப்பல் எப்படிக் கரை சேர்வது? அதிலுள்ள ஜனங்களின் கதி யென்னுவது? என்று.

5. இந்தச் சட்டசபையிலே சட்டங்கள் சீக்கிரம் செய்யப் படுவதில்லை. வருஷத்தில் இரண்டு அல்லது மூன்று தடவைகள் கூடுகின்றன. இதில் ஏதேனும் ஒரு மசோதாக் கொண்டு வரப் படுமானால், அதைப் பற்றிப் பரிசீலனை செய்ய ஒரு சப் கமிட்டி நியமிக்கப் படும். கொண்டு வந்திருக்கும் மசோதாவுக்குத் தகுந்தவாறு, அந்தச் சப்கமிட்டியில் சில அல்லது பல உபகமிட்டிகள் நியமிக்கப்படும். அல்லது பொதுஜனங்களுடைய அபிப்பிராயத்திற்கு விடப்படும்; நிலைமையை நேரில் விசாரித்துக் கண்டறிய ஒரு கமிட்டியை நியமிப்பார்கள். ஜனங்களுடைய பிரதிநிதியாக, அவர்களுக்குச் சேவைசெய்

வதற்காக நிலைமையைத் தெரிந்தவர்களாகச் சென்றவர்கள், திரும்பவும் நிலைமையை நேரில் கண்டறியவும், அபிப்பிராயத்தையறியவும் பயணப்பட்டுவிடுவது ஆச்சர்யமில்லையா? கடைசியாக அந்த மசோதா ஒருதினுசாய் சட்டமாக உருக்கொள்ளும்; அல்லது அந்த மசோதாவும், விசாரித்து நேரில் கண்டறிந்த விஷயங்களும் நூற்றுக் கணக்கு, மிஞ்சினால் ஆயிரக் கணக்கான பக்கங்களில் அச்சடித்து புத்தகமாக அலமாரியை அலங்கரிக்கும். சட்டமாக நிறைவேறினாலும், எந்த நோக்கத்தோடு அந்த மசோதா கொண்டுவரப் பட்டதோ அது அடியோடு பாழ்பட்டிருக்கும், அல்லது சிதைந்து போயிருக்கும். உதாரணம் பாருங்கள்; இந்தியாவின் மத்திய சட்டசபையில், இளமை மணத்தைத் தடுப்பதற்கான நோக்கத்தோடு ஒரு மசோதாக் கொண்டுவரப் பட்டது. இதைப்பற்றிச் சட்டசபையில் மேலே கூறியிருக்கிற எல்லாச் சடங்குகளும் நடந்தன. மூன்று வருஷங்கள் கழிந்து சாரதாச் சட்டமாக உருப்பெற்றது. அது எந்த விதமான பலனைக் கொடுத்திருக்கிறதென்பதை நாம் அறிவோம். சென்னை காங்கிரஸ் சர்க்கார், ஜமீன் குடிகளின் கஷ்டங்களைப் பரிகரிப்பான் வேண்டி ஒரு சட்டம் செய்ய நினைத்துக் கமிட்டி நியமித்தார்கள். ஊர் ஊராகச் சென்று அந்தக் கமிட்டி நிலைமையை நேரில் கண்டறிந்தது, விசாரித்தது. வருஷமும் இரண்டுக்கு மேலாயிற்று. பலன் என்ன? சுமார் ஆயிரம்பக்கமுள்ள புத்தகம் சென்னைச்சர்க்கார் காரியாலய அலமாரியை அலங்கரிக்கிறது. குடிகளைப் பட்டினி சூழ்ந்து கொண்டிருக்கிறது. ஆனால் ஜீவன் பிரியமாட்டேனென்கிறதே! இவ்வளவுக்கும் காங்கிரஸ் சர்க்கார் நல்ல மெஜாரிட்டி பலமுள்ளது. அப்படியிருந்தும் பலனில்லை. ஒரு மாகாணத்தில் மட்டுமில்லை; எந்தமாகாணத்திலுமே அது உருப்படியான காரியங்களைச் செய்யவில்லை.

6 அரசாட்சியை நடத்துவதற்காக, ஜனங்களுடைய பிரதிநிதியாகச் செல்கிறார்களே? அப்படி அவர்கள் பிரதிநிதியாக நிற்பதற்கு அவர்களுக்கு ஏதேனும் யோக்கிதை கவனிக்கப்படுகிறதா? இல்லை. அந்தப் பகுதி ஜனங்களுக்கு முன்பின் தெரியாதவர் கூட பிரதிநிதியாக வந்துவிடுவதைப் பார்க்கிறோம். இதற்கென்ன காரணம்? அவர்கள் ஒரு கட்சியால் நிறுத்தப்படுகிறார்கள். அந்தக்கட்சி பலத்தைக் கொண்டு அவர்கள் வெற்றி பெறுகிறார்கள். அப்படியானால் அவர்கள் அந்தக் கட்சிக்குக் கட்டுப்பட்டவர்களே யல்லாது பொதுஜனங்களுக்குக் கட்டுப்பட்டவர்களில்லை. ஜனங்களுடைய கஷ்ட நஷ்டங்களைத் தெரிந்து அதைப் பரிகரிப்பதற்கு முயற்சிப்பதைவிட தன்னுடைய கட்சி அடிக்கடி என்ன ஆணையிடுகிறதோ அதை ஜனங்களிடத்தே சொல்லித்திரிவதுதான் அவருடைய வேலையாயிருக்கும். தான் தெரிந்தெடுக்கப்பட்ட தொகுதியிலே சுற்றுப் பிரயாணம் செய்வதைப் பார்க்கிலும் தன்னுடைய கட்சிக் கூட்டங்களுக்குச் சொல்வதைத்தான் அவர் முக்கியமாக எண்ணுவார்.

7. எந்தக் காலத்திலுமே, சாதாரணமான பொதுஜனங்கள், தங்களு

டைய நல்லகாலத்தைத் தாங்களே தேடிக்கொண்டதில்லை. அது அவர்களால்முடியாது. இதுதான் உலக சரித்திரம். பள்ளி மாணவர்களுக்கு வேண்டிய பாடப்புத்தகங்களை, அவர்களையே தீர்மானிக்கும்படி விட்டுவிடுவதில்லை. நோயாளி, அவனுடைய சிக்கைப்போக்கும் மருந்தை அவனே தெரிந்தெடுத்து உட்கொள்ள விடுவதில்லை.

8. ஜனநாயகமுறையில், மிகவும் சிந்திக்க வேண்டியதும், யுக்திக்குப் பொருத்தமற்ற விஷயமும் என்னவென்றால், எந்த ஜனங்களுக்கு, தங்களுடைய லாயக்கற்ற தன்மைக்காக ஒரு தலைவன் அவசியமாயிருக்கிறதோ, தங்களை நடத்திச் செல்வதற்காக தலைவன் எந்த ஜனங்களுக்குத் தேவையாயிருக்கிறதோ அந்த லாயக்கற்ற ஜனங்களே அந்தத்தலைவனைத் தெரிந்தெடுப்பதுதான். இது ஒரு ஆச்சர்யமான விஷயமல்லவா? லாயக்கற்ற ஜனங்கள், லாயக்குள்ள ஆளை எப்படித் தெரிந்தெடுக்க முடியும்?

9. ஜனநாயகம் என்பது அழகான அர்த்தபுஷ்டியுள்ள வார்த்தையாயிருக்கலாம். ஆனால் அது ஒரு சரியான லட்சியத்தைக் கடைப்பிடித்து வேலை செய்ய இயலாது. திடமான லட்சியமில்லாத காரியங்களுடைய பலனும் அவலமாகத்தானிருக்கும்.

10. இந்த ஜனநாயகம் என்ற சித்தாந்தம் கிரீஸ் நாட்டிலே பிறந்தது. ஒரு காலத்தில் அரசாட்சியிலே வெறுப்புற்ற ஜனங்கள் இந்த சித்தாந்தத்தைப் ன்பற்ற வைக்கப்பட்டார்கள். ஐரோப்பாவில் இது ஒருவாறு கப்பரவியது. ஆனால் பின்னே அதனுடைய பலவீன அம்சங்களே அதை முறித்துவிட்டன. இப்போது அங்கு நாடுகளெல்லாம் சர்வாதிகார மயமாகிவிட்டன.

தங்கள் வாக்குரிமையை உணர்ந்து உபயோகிக்கத் தெரியாத ஜனங்கள் அதற்குரிய பலனை அடையவேண்டியதுதான். கஷ்டங்களை அனுபவிக்க வேண்டியதுதான் என்று கூறப்படுகிறது. இவ்விதம் அழகாகச் சொல்லிவிடலாம். ஆனால் அர்த்தமற்ற வார்த்தைகள் இவை. தன் தந்தையின் ஆதினத்தில் மகனிருக்கிறான். பெண் தன் சகோதரனுடைய மேற்பார்வையிலிருக்கிறாள். ஒரு நகரத்தைப் போலீசும், சேனையும் பாதுகாக்கின்றன. மாணவன் உபாத்தியாயருடைய அதிகாரத்தின் கீழிருக்கிறான். இவைகளெல்லாம் எதற்காகச் செய்யப்படுகின்றன? ஒரு பையன் தெருவழியே செல்கிறான். அவனுடைய பொருள் திருடப்படுகின்றது. அவன் தெருவழியே தனிமையாகச் சென்றான்; அதனால் அக்குற்றத்திற்குத் தகுந்த தண்டனையை அனுபவிக்க வேண்டியதுதான் என்று கூறுவதா? குற்றம் அவனுடைய தாய் தந்தையருடையது, நகர் பாதுகாவலர்களுடையது. இதே போல் சாதாரணஜனங்கள் ஏமாற்றப்படுவது அவர்களுடைய குற்றமில்லை. இந்த உலகத்திலே இதுவரை எத்தனையோ பெரிய பெரிய காரியங்கள் சாதிக்கப் பட்டிருக்கிறன. இதற்குக் காரணஸ்தர்கள் சில மகான்களாய்த் தானிருக்கிறார்களே யல்லாது ஜனசமூகம் பூராவுமில்லை. அறிவும் அனுபவமும் உள்ளவர்கள்தான் பொது ஜனங்களுக்கு வழிகாட்டியாயிருந் திருக்கிறார்கள்.

11. நம்முடைய பாரத நாட்டிலும் அந்தக் காலத்தில் அரசன் மகன் அரசனாக வந்தாலும்கூட, சட்டமியற்றுபவர்கள், அரசாட்சியை நடத்துபவர்கள் அவர்களாயிருக்கவில்லை. ராஜகாரியத்தை நடத்தியவர்கள், காட்டிலே, குடிசையிலோ, அல்லது அரச தர்பாரிலோ அவர்கள் எங்கிருந்தாலும் சரி யோகவாழ்க்கையை மேற்கொண்ட தனி மனிதர்களாய்த் தானிருந்திருக்கிறார்கள். கோவணமே அவர்களுடைய அலங்காரமான ஆடை. தங்களுடைய புத்தி சாதுர்யத்தினாலும், யோக பலத்தினாலும், தீரத்தினாலும் எத்தனையோ இடுக்கண்களையும் சமாளித்து அரசியலை நடத்தி யிருக்கிறார்கள். அரசர்கள், அவர்களுடைய ஏவலாளராய்த் தானிருந்திருக்கிறார்கள். அப்படிக்கில்லாத அரசன் தன் ஆசனத்தைத் துறந்திருக்கிறான். அந்த இந்தியா சுகக்ஷேமத்தில் குறைந்திருக்கவில்லை. ஜனங்கள் மிக ஆனந்தமாகத் தங்கள் வாழ்க்கையை நடத்தி யிருக்கிறார்கள். இன்றைய இந்தியாவில் காங்கிரஸ் மகாசபையைப் பார்ப்போம். கிராமக் கமிட்டிமுதல், காரியக்கமிட்டி தலைவர் வரை எல்லாம் ஜனநாயக முறை என்று கூறப்படுகிறது, ஆனால் ஒரு தனி மனிதரின் கை அசையாவிடில் அந்தக் காங்கிரஸ் அசையாது. காங்கிரஸ் தலைவர் முதற் கொண்டு அவருடைய ஆணைக்குக் கீழ்ப்படியாமல் தீர வில்லை. துருக்கியை யெடுத்துக் கொள்வோம். ஐரோப்பாவின் நோயாளி யென்ற பட்டம் பெற்றிருந்தது துருக்கி ஒரு காலத்தில். ஆனால் சொற்ப காலத்திற்குள்ளே, உலகக் கண்களின் முன் அந்தத் துருக்கியின் தந்தை கமால், ஒரு புதிய துருக்கியை சிருஷ்டித்தார். மதப் பற்றிலும், அறியாமையிலும் ஆழ்ந்து கிடந்த துருக்கியை ஒரு ஆண்மை நிறைந்த துருக்கியாக ஆக்கினார் கமால். உலகம் கனவென்று நினைக்கும் படியான காரியங்களை இந்த நனவுலகத்திலே செய்து முடித்தார் அவர். கமால் இறந்து விட்டார். ஆனால் துருக்கியர்கள் ஒவ்வொருவருடைய இருதயத்திலும் அவர் இறவாது வசிக்கிறார். ஏன், ருஷ்யாவைப் பார்ப்போமே. புதிய ஒரு சமுதாயத்தை சிருஷ்டித்து அதை வேரூன்ற வைத்தார் லெனின். உலகத்திலேயே மகா பலம் பொருந்திய வல்லரசாக ருஷ்யா இன்று கருதப்படுவதற்கு லெனினும், அடுத்த ஸ்டாலினுந்தான் காரணம். இன்று எத்தனையோ தேசங்கள் ருஷ்யாவின் தயவுக்காக, அதனுடைய அடைத்திருக்கும் கதவுகளைத் தட்டிக் கொண்டு வெளியே காத்திருக்கின்றன வென்றால் அதற்கு மேற் கண்ட இருவருமே காரண புருஷர்கள். ஜனநாயக சித்தாந்தம் அமுல் நடத்தப்பட்டிருந்தால் துருக்கி எப்பொழுதோ ஜீரணிக்கப் பட்டிருக்கும். ருஷ்யாவுக்கும் அந்தக்கதிதான் நேர்ந்திருக்கும். ஜனநாயக சித்தாந்தம் வெற்றி பெற்றதில்லை; வெற்றி பெறவும் முடியாது.

அதிகாரம் இரண்டு வகையாகப் பிரிக்கப்படுகிறது. ஒன்று பொதுஜனங்களால் தெரிந்தெடுக்கப்படுகிற பிரதிநிதிகளைக் கொண்ட சட்ட சபைகள் மூலம். மற்றொன்று அறிஞர்களும், சாமர்த்தியசாலிகளும் நிறைந்த சட்ட சபைகள்மூலம். ஒன்று ஜனங்களுடைய வாக்கைப் பெற்றவர்களது

சபை. மற்றது தங்களுக்குத் தாங்களே, அறிஞர்களாகவும் திறமைசாலிகளாகவும் ஆகியவர்களைக் கொண்டது. ஆதலால் அதிகாரம், அல்லது ஆட்சியென்பது, யார் அதை நடத்தத் தகுதியுடையவர்களோ அவர்களுடைய பொறுப்பாயிருக்கவேண்டும்.

ஆனதால் ஒரு சர்வாதிகார ஆட்சியே அந்தத்தேசத்திற்கு நன்மைபயக்கும். காற்று, தண்ணீர், உணவு, உடை, பூமி இவைகள் ஒவ்வொரு மனிதனுக்கும் கிடைக்க வேண்டியது அவனுடைய பிறப்புரிமை. இயற்கையால் அளிக்கப் பட்டிருக்கும் இந்தச் சொத்துக்களின்மீது அதிகாரம் செலுத்த யாருக்கும் உரிமை கிடையாது. ஆனால் தேசத்தை ஆளும்சக்தி ஜனங்களுடைய பிறப்புரிமையாக மாட்டாது. அந்தசக்தி ஒருவனுடைய யோக்கியதையைப் பொறுத்தது. ஆனால் ஒன்று, சர்வாதிகாரி பட்சபாதமற்றவனாயிருக்கவேண்டும். பட்சபாதமற்ற தன்மை யென்பது தான் என்ன? அது ஒருமனப் பக்குவம்; பழக்கத்தால் சித்திப்பது.

ஜனநாயகத்திற்கு எதிராகக் கூறப்படும் இந்த எதிர் அபிப்பிராயங்களை ஒவ்வொன்றாகப் பரிசிலனை செய்வோம்.

1. கெட்டிக் காரத்தனம் என்பது, ஒருவருக்கோ, அல்லது சில பேருக்கோ ரிஜிஸ்தர் செய்யப்பட்ட சொத்தல்ல. அரசன்மகனே அரசனாகவும், மந்திரி மகனே மந்திரியாகவும், அறிவாளி மகனே அறிவாளியாகவும், ஒரு முட்டாள் மகன் முட்டாளாகவுமே தான் வரமுடியும்; இதெல்லாம் அவரவருடைய விதிப்பயன் என்று நினைத்த காலம் ஒன்றிருந்தது. தற்கால சமூக அமைப்பின் கோளாறுகள் இவை யென்பதை ஜனங்கள் உணர்ந்து வருகிறார்கள். ஒரு சிறு கிராமத்தி லிருக்கும் விவசாயி பத்துஏக்கர் நிலம் உடையவனாயிருக்கிறான். வருஷத்தில் சர்க்காருக்கு நூறு ரூபாய் வரிக்கட்டுகிறான். அது சுமார் நாற்பது ஐம்பது வீடுகளுடைய சிறிய கிராமம், ஆரம்பப் பாடசாலை கூட அந்த ஊரில் கிடையாது. அந்த விவசாயின் மகன் படிப்பாளியும் அறிவாளியும் ஆவதெங்ஙனம்? அவன் ஆரம்பப் படிப்புக்கானால், அடுத்த பெரிய கிராமத்திற்குச் செல்லவேண்டும். உயர்தரப் படிப்புக்கானால் நகரங்களுக்குச் செல்லவேண்டும். இதற்கு அவனுக்கு வசதியில்லையே! நகரத்தில் ஒருவர் மாதம்ஐம்பதுரூபாய் சம்பாதிக்கிறார் என்று வைத்துக் கொள்வோம். குடியிருக்கும் வீட்டுக்கு ஐந்தோ, பத்தோ வீட்டுக்காரருக்கு வாடகை கொடுப்பதைத் தவிர சர்க்காருக்கு அவர் எந்தவித வரியும்கட்டுவதில்லை. ஆனால் அவருடைய மகன் உயர்ந்த வகுப்புவரை அந்த நகரக் கலாசாலையில் படிக்க வசதியிருக்கிறது. அறிவாளியாகவும யோக்கியதை யுள்ளவனாகவும் மலர்ந்துவிடுகிறான். சர்க்காருக்கு நூறுரூபாய் வரிக்கட்டும் விவசாயினுடைய மகன் முழுமுடனாகவும்,யாதொருவரியும்கட்டுவதற்கில்லாத ஒருவனுடைய மகன், அறிவாளியாகவும் வருவதற்கான முறையில் தற்காலசமூக அமைப்பிருக்கும்போது விதி விதி யென்று யாரேனும் கூறமுடியுமா? வசதி யிருந்தால் சாதாரண விவசாயினுடைய மகனும்

அறிவாளியாகவும் யோக்கியதை யுடையவனாகவும் ஆக முடியும். நல்லவிதையை உவர்ப்பூமியில் விதைத்தோமானால் யாதொரு பிரயோஜனமும் இல்லாது போகிறது. ஆனால் சத்துக்குறைவான விதையைத் தொடர்ந்து நல்லபூமியில் விதைப்போமானால் அது நல்லபலனைக் கொடுக்கிறது. மனித சமூகத்தில் சிலபேர் அறிஞர்களாகவும், பலபேர் மூடர்களாகவு மிருப்பது அவர்களுடைய பொருளாதார நிலைமையின் தாரதம்மியத்தைப் பொறுத்தது. வர்க்கபேதமுள்ள சமூக அமைப்பின் பரிணாமம் இது. வெறுங்கல்பனையல்ல; சாதாரண விவசாயிகளுடைய மக்கள் எத்தனையோபேர் பெரிய பெரிய உத்தியோகங்கள் வகிக்கிறார்கள் இன்றைய ருஷ்யாவிலே. இருபது வருஷங்களுக்குமுன்னே சமூகத்தின் கழிகூடையில் தள்ளப் பட்டுக்கிடந்த ஏழை விவசாயிகளும், தொழிலாளிகளும், அவர்களுடைய மக்களும் இன்று அரசாங்கத்தை நடத்தும் முக்கிய பொறுப்புள்ளவர்களா யிருக்கிறார்கள்.

2. ஜனங்கள், தங்களுடைய விதியைத் தாங்களே நிர்ணயித்துக் கொள்ள அதிகாரம் உடையவர்களா யிருப்பதற்கு ஜனநாயகம் என்று அர்த்தம். அப்படியானால் சர்க்கார் ஜனங்களுடையது. இதற்காக ஜனங்கள் யாவருமே சேர்ந்து சர்க்காரை நடத்துவதென்பது அர்த்தமில்லை. மனித சமூகத்தில் பலருக்குப் பல வேலைகள். சமூகத்தின் ஊழியர்களாகிய இவர்கள் தங்கள் தங்கள் தொழிலைக் கடமையாகச் செய்பவர்கள். இதனால் சர்க்காரை நடத்துவதற்குப் பாத்திர மானவர்களை தங்களுடைய வாக்குரிமையின் மூலமாகத் தெரிந்தெடுத்தனுப்புகிறார்கள். சர்க்காருக்குச் செலுத்தும் வரியும், வயதும் அவர்களுடைய வாக்குரிமையை நிர்ணயிப்பதில்லை. மனித சமூகத்தில் பிறந்திருக்கிற ஆண் பெண் ஒவ்வொருவருடைய பிறப்புரிமையாக்கும் அது. பிறப்புரிமையில் எந்தவித வித்தியாசத்திற்கும் இடமில்லை.

3. வர்க்க பேதமுள்ள, உயர்வு தாழ்வுள்ள தற்கால சமூக அமைப்பிலிருந்துவரும் மக்களையும், அவர்களுடைய வசதியற்ற தன்மையால் ஏற்படும்பலன்களையும் மனதில்கொண்டே நாம் பேசுவதால்தான் ஓட்டர்கள் ஏமாற்றப்படுவது, பணம் படைத்தவர்கள் அதிகார ஸ்தானங்களைக் கைப்பற்றுவது இம்மாதிரியான காட்சிகள் நமக்குத் தென்படுகின்றன. ஜனங்கள் அறிவுள்ளவர்களாயிருந்தால், தங்களுடைய ஓட்டுரிமையை உணர்ந்தவர்களா யிருந்தால் ஏமாற மாட்டார்கள். நம்முடைய தேசத்தில் நடைபெற்ற சட்டசபைத் தேர்தலின்போது எத்தனையோபெரிய பெரியஜமீன்தார்களும் பணக்காரர்களும் தங்களுடைய பொருள்களை யெவ்வளவோ செலவு செய்து அரும்பாடு பட்டார்கள். ஆனால் காங்கிரசால் நிறுத்தி வைக்கப் பட்டவர்கள்தான் வெற்றி பெற்றார்கள். இவர்களிற் பலர் சாதாரணமானவர்களே. ஜனங்கள் தங்களுடைய வாக்குரிமையை உபயோகிப்பதில் ஏமாந்து விடவில்லை. இவ்வளவுக்கும், வர்க்க பேதமற்ற சமூகத்திலே யுள்ளவர்க

ளல்ல அவர்கள். படித்த அறிஞர்களுமல்ல.

4. மனித சமூகத்தில் வெறுப்புள்ள ஒரு சிறு கோஷ்டியிருப்பது அதிசயமில்லை. பொதுஜனங்களுடைய நம்பிக்கைக்குப் பாத்திரர்களாய்ச் சென்றிருக்கும் பெரும்பாலான பிரதிநிதிகளைக் கொண்டகட்சி செய்யுங் காரியங்களில் எதிர்கட்சியார் ஆட்சேபணை கூறுகிறார்களென்பதற்காக காரியம் நின்றுவிடப் போவதில்லை.

5. இந்தச் சட்டசபைகளில் சட்டங்கள் சீக்கிரம் செய்யப்படுவதில்லை என்று நம்முடைய இந்தியாவையோ அல்லது காங்கிரஸ் மந்திரி சபைகளையோ உதாரணமாக வைத்துப் பேசக்கூடாது. அரசியல் அடிமை நாடு இந்தியா. காங்கிரஸ் மந்திரிகள் முழுபொறுப்புள்ள அரசாட்சியை நடத்தவில்லை.

6. ஜனங்களின் பிரதிநிதியாக ஒருவரை, ஒருகட்சி நிறுத்துவது அசட்டுத்தனமல்ல. எந்தக்கட்சி ஜனங்களுக்குச் சேவை செய்கிறதோ, ஜனங்களுடைய இதயத்தை தன்னுடைய சேவையால் ஆகர்ஷித்திருக்கிறதோ அக்கட்சி தன்னுடைய அங்கத்தினரைப் பிரதிநிதியாக நிறுத்துகிறது. ஒருகட்சியில் ஒருவர் அங்கத்தினராவது சிறிய விஷயமில்லை. அதனுடைய கொள்கைக்கும், கட்டுப்பாட்டுக்கும் உட்பட்டவரே அங்கத்தினராகமுடியும். அப்படியுள்ள கட்சியால் நிறுத்தப்படும் அங்கத்தினரை ஜனங்கள் தங்களுடைய பிரதிநிதியாக அங்கீகரிக்கிறார்கள். ஜனங்களுடைய பிரியத்திற்குப் பாத்திரமற்ற கட்சியின் அங்கத்தினர் தூக்கியெறியப் படுகிறார்.

7. பொது ஜனங்கள் எந்தக்காலத்திலுமே தங்களுடைய நற்காலத்தைத் தாங்களே தேடிக் கொண்டதில்லையென்றால், தங்களுக்கு வழிகாட்டுபவர்கள் தங்களுக்கு நன்மை செய்வதற்குரியவர்கள் என்று அவர்கள் அறிந்தால்தானே வழிகாட்டிகளைப் பின்பற்ற முடியும்? நல்ல காலத்தை யேற்படுத்துபவர்களை அறிந்து பின்பற்றும் தன்மை பொருந்தியிருக்கிற ஜனங்கள், தங்களுக்கு நன்மையைத் தாங்களே செய்து கொள்வதற்கான சக்தியை ஏன் பெற்றிருக்க முடியாது? பொது ஜனங்கள் யாவரும் பள்ளி மாணவர்களல்ல; நோயாளிகளுமில்லை. பொதுஜனங்களை முட்டாள்களாகவும், சக்தியீனர்களாகவும் நாம் நினைத்துக் கொண்டு பேசுவதால்தான் இந்தச் சந்தேகங்கள் கிளம்புகின்றன.

8. தங்களுடைய லாயக்கற்ற தன்மையைப் பரிகரிப்பதற்காக ஜனங்கள் தங்களுடைய பிரதிநிதிகளைத் தெரிந்தெடுப்பதில்லை. பொது ஜனங்கள் யாவருமே சர்க்காரை நடத்த முற்பட்டால் மனிதசமூகம் இயங்க வேண்டாமா? அவரவர்களும் அவரவர்களுக்குரிய கடமைகளைச் செய்தால்தான் மனித சமூகம் இயங்கமுடியும். அதனாலேயே அவர்கள் தங்களுடைய பிரதிநிதிகளாகச் சிலரைத் தெரிந்தெடுக்கிறார்கள்.

9. ஜனநாயகம், அழகும் அர்த்த புஷ்டியுமானது என்பதில் சந்தேகமேயில்லை. ஜனநாயகமென்றால் என்ன? ஜனங்கள் தங்களுடைய நன்மையைத் தாங்களே

நிர்ணயம் செய்து கொள்வதற்கு அதிகாரம் உடையவர்களாயிருப்பது. ஜனநாயக சித்தாந்தத்தின் லட்சியமும் இதுதான் இது திடமற்றதென்றோ, இதனுடைய காரியங்கள் அவலமாயிருக்குமென்றோ நினைப்பது வெறும் கற்பனை; மயக்கம்.

10. ஜனநாயக சித்தாந்தம், கிரீஸ் நாட்டிலே பிறந்தது என்பதற்காக அதை வெறுக்கவேண்டுமா? நல்லதை யாரும் தனதாக்கிக் கொள்வதில் தடையில்லையே? ஐரோப்பாவில் இந்த சித்தாந்தம் அழிந்துவிடவில்லை. ஜனநாயகத்திலே முழுப்பற்றுக் கொண்டவர்கள் பேணுட்டார். பெரிய ஒரு தேசஜனங்கள் ஜனநாயக சித்தாந்தத்தின் முழு நன்மையையும் அனுபவித்துக்கொண்டு சுகஜீவிகளாயிருப்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

11 இந்தியாவில் ஜனநாயக எண்ணம் அந்தக் காலத்தில் இல்லாமலிருக்கவில்லை. ஜனங்களுடைய நன்மைக்கு விரோதமாயிருந்த நந்தவம்சம் அழிக்கப்பட்டதும் சந்திரகுப்தனை அரசனுக்கியதும் நம்முடைய தேசத்திலேதான். "ஏ, அரசனே, அரசகாரியத்தை நடத்துவதற்காக ஜனங்கள் உன்னைத் தெரிந்தெடுக்கிறார்கள்" என்பது வேதவாக்கியம். "தெரிந்தெடுக்கிறார்கள்" என்ற வார்த்தை எவ்வளவு அர்த்தமும் மகத்துவமும் பொருந்தியது! "ராஜன்" என்ற சமஸ்கிருத வார்த்தையும், "ஆர்கன்" என்றகிரீஸ்வார்த்தையும், "கவுன்சில்" என்ற ரோமவார்த்தையும் ஒரே அர்த்தமுடையவை யென்று ஆசிரியர் ரீஸ்டேவிடஸ் என்பவர் அபிப்பிராயப்படுகிறார். ஜனநாயக சித்தாந்தத்தின் வளர்ச்சியடைந்த ஒரு உருவம் இந்தியா என்று, லெப்டினெண்ட். கர்னல்மார்க்பில்க்கஸ் என்பவர் தன்னுடைய, "ஹிஸ்டாரிகல் ஸ்கெச்சஸ் ஆப் தி சவுத் இந்தியா" என்ற நூலில் எழுதியிருக்கிறார். "நம்முடைய இந்தியாவில் அந்தக் காலத்திலே, அரசியலும் அதைநடத்தும் முறைகளும் நன்றாக வளர்ச்சியடைந்திருந்தன. இங்கே பல ஜனநாயக அரசுகள் நடைபெற்றிருக்கின்றன. அதைக் "கணராஜ்யம்." என்று அழைப்பார்கள். (கணம்—கூட்டம்) பல ராஜ்யங்களில் அரசன் ஜனங்களால் தெரிந்தெடுக்கப் பட்டிருக்கிறான்" என்று ஒரு பிரபல சரித்திராசிரியர் எழுதுகிறார்.

சர்வாதிகாரிகளான கமால், லெனின், ஸ்டாலின் இவர்களால் அந்தந்த தேசங்கள் சில வருஷங்களுக் குள்ளே வெகு முன்னேற்றத்தை யடைந்திருப்பதாய்ச் சொல்லப் படுவதைக் கவனிப்போம். துருக்கி ஒரு காலத்தில் பெரிய சாம்ராஜ்யமாகத் திகழ்ந்தது. வர வர அது சுருங்கி, அதனுடைய நற்காலம் மறைந்து கொண்டே வந்து கடைசியாக ஐரோப்பாவின் நோயாளி யென்ற பட்டத்தையும் பெற்றது. இக்காலங்களில் அங்கு ஜனநாயக ஆட்சி நடைபெறவில்லை யென்பதை நாம் மறந்துவிடக் கூடாது. ஜனங்களுடைய அரசரும் மதகுருவும் ஒருவரே. அக்காலத் துருக்கியர்கள மதப்பற்று மிக்கவர்கள். அறியாமை அவர்களிற் குடிகொண்டிருந்தது. இதனால் அந்நிய வல்லரசுகளின் ஆதிக்கம் அங்கு வலுத்தது. இந்த ஆதிக்கத்திற்காக

போட்டியும் ஏற்பட்டது. சென்ற யுத்தத்தில் துருக்கி யிழுக்கப்பட்டது. அதனால் அது அடைந்த கஷ்ட நஷ்டம் கொஞ்சமில்லை. இனிமேல் துருக்கி யென்ற ஒருதேசம் இருக்குமா? என்று அரசியல் வாதிகள் சிந்தித்தனர். ஜனங்களின் எண்ணங்களிலிருந்து கமால் உதயமானார். பொதுஜனங்கள் அவரைப் பூரணமாக ஆதரித்தார்கள். அது மட்டுமா? பின்னே ஜனங்களின் தந்தையாக கமால் அவர்களாலேயே பட்டம் சூட்டப்பெற்றார் என்றால், அவர்கள் எவ்வளவுதூரம் அவரை ஆதரித்திருக்கிறார்கள் என்பது விளங்கவில்லையா?

இனி ருஷ்யாவைப்பற்றிக் கூறப்படுவதைக் கவனிப்போம். ருஷ்யாவில் சர்வாதிகாரத்துவம் நடைபெறுகிற தென்று சொல்வது அறியாமையைத் தவிர வேறில்லை. 1936ம் வருஷத்தில் இயற்றப்பட்ட சட்டம் அங்கு இப்பொழுது அமுலிலிருக்கிறது. பூரணமான ஜனநாயகம் ஸ்திரப்பட்டிருக்கிறது. ஒரு காலத்தில் அங்கு சர்வாதிகாரத்துவம் இருந்தது. அது லெனினையோ, ஸ்டாலினையோ பொருத்திருக்கவில்லை. தேசம் பூராவிலும் நிறைந்திருக்கிற விவசாயிகளையும், தொழிலாளிகளையுங் கொண்ட பொதுவுடைமைக் கட்சிதான் அங்கு சர்வாதிகாரியாயிருந்தது. இக்கட்சியினுடைய ஆக்ஞையைமீறி லெனினோ, ஸ்டாலினோ ஒரு காரியத்தையும் செய்யமுடியாது. சர்வாதிகாரி யென்ற தோரணையில் இன்று ஸ்டாலின் சக்திசாலியாய் விளங்கவில்லை. அவர் இதுவரை சர்வாதிகாரியாக ஆனதே கிடையாது. மேற்கண்ட பொதுவுடைமைக் கட்சியின் காரியதரிசி யென்ற தோரணையில்தான் அவர் சக்திபெற்றவராயிருக்கிறார். உண்மையைக் கூறப்போனால், ருஷ்யாவின் இவ்வளவு உன்னதத்திற்குக் காரணமாயிருப்பது விவசாயிகள் தொழிலாளிகளுடைய சர்வாதிகாரம். ருஷ்யாவிலே யாவரும் விவசாயிகளும் தொழிலாளிகளுமே.

காற்று, தண்ணீர், உணவு, உடை, பூமி இவைகள் ஒவ்வொரு மனிதனுக்கும் கிடைக்கவேண்டியது அவனுடைய பிறப்புரிமை யென்று கூறப்படுகிறது. மனித சமூகத்திலேயுள்ள எல்லா மக்களுக்கும் இயற்கையின் செல்வமாகிய மேற்கண்ட சொத்துக்களைப் பூரணமாக அனுபவிக்க உரிமையிருக்கிறதா? அப்படியிருந்தால் இந்த உலகத்தில் யுத்தமே நிகழக் காரணமில்லையே? தண்ணீருக்காக, என்சமுத்திரம், உன் சமுத்திரம் என்ற சண்டை நடக்கிறது. உணவு, உடை, பூமி யாவருக்கும் கிடைக்க வில்லையே?

மனித சமூகம் எவ்வளவோ வளர்ச்சியடைந்து விட்டது. இன்னும் வளர்ந்துகொண்டிருக்கிறது. இது நியதி. ஜனங்களுடைய எண்ணங்கள் தினே தினே வளர்ந்துகொண்டு வருகின்றன. இந்தக்காலத்தில்கூட சர்வாதிகாரத்துவந்தான் சிறந்தது என்று கூறுவது அறிவுடைமையாகாது. விஞ்ஞான திருஷ்டி கொண்டு நிலைமைகளை ஆராய்பவர்கள் அந்த முடிவுக்குத்தான் வருவார்கள்; வரமுடியும்.

—"ஒரு காங்கிரஸ்வாதி"

ஸ்ரீனிவாச அய்யங்கார்

ஜனனம் 1874

நாற்பத்தோராவது
காங்கிரஸ் தலைவர்.

செல்வமும் சுகமும் நிறைந்த, வைதிகவைஷ்ணவ குடும்பத்தில் 1874ம் ஹு செப்டம்பர் மாதம் 11ந் தேதி ஸ்ரீமான் ஸ்ரீனிவாசய்யங்கார் பிறந்தார். இவருடைய தந்தையார்பெயர் சேஷாத்திரி அய்யங்கார். இவர்களுடைய சொந்த ஊர் இராமநாதபுரம். நமது அய்யங்கார் ஜெனித்ததும் இராமநாதபுரத்திலே தான். இவரது தந்தையார் நல்ல பணக்காரர். சிறந்த வக்கீல். பழைய காங்கிரஸ்காரர். மதம், கலை இவ்விஷயங்களில் அதிகப்பக்தியும், சிரத்தையுங் கொண்டவர். 1880ம் வருஷம் இவர் மதுரை நகரைத் தன்னுடைய வாசஸ்தலமாகக் கொண்டு அங்கேயே வசித்துவரலானார்.

ஸ்ரீமான் ஸ்ரீனிவாசய்யங்கார் தன்னுடைய 21வது வயதில் பி. எ. பரீட்சையிலும், 23வது வயதில் பி. எல். பரீட்சையிலும் தேர்ச்சியடைந்தார். இவர் நல்ல அறிவுள்ள மாணாக்கராக யாராலும் கொண்டாடப்பட்டதில் ஆச்சர்யம் ஒன்றுமில்லை. பின்னே இவர் நமது இந்தியாவிலே சட்டஞானத்தில் பிரபலஸ்தரான ஸ்ரீமான் வி. பாஷ்யம்அய்யங்காரிடத்திலிருந்து வக்கீல்தொழில் பழகலானார். கொஞ்சக்காலத்திலேயே இவர் நல்ல கீர்த்தியடையவும் தலைப்பட்டார்.

1898ம் வருஷம் ஏப்பிரல்மாதம் 5ந் தேதி; இவர் ஐக்கோர்ட் வக்கீலாகப் பதிவுசெய்துகொண்டு சென்னையில் சுதந்திரமாக வக்கீல் தொழில் செய்ய ஆரம்பிக்கலானார். சட்டஞானத்திலே இவருக்கு நல்ல பெயரும் கீர்த்தியும் ஏற்பட்டது. இவருடைய சட்டஞானத்தைக் கண்டு, ஸ்ரீமான் பாஷ்யம்அய்யங்கார் மட்டுமின்றி இதர பெரிய பெரிய வக்கீல்களும், ஜட்ஜ்களுங்கூட இவரைப் புகழ்ந்து இவருடைய அபிப்பிராயத்திற்கு நல்ல மதிப்புக் கொடுத்துவந்தார்கள். தொழில் ஆரம்பித்த கொஞ்சக்காலத்திற்குள்ளேயே, பிரபலமான வக்கீல்களோடு இவரும் ஒருவராகக் கருதப்பட்டார். இதனால் நல்ல வரும்படியும் கிடைத்தது. சென்னிந்

தியாவில் பெருந் தனவந்தர்களான நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் இவரை மிகவும் கொண்டாடினார்கள். அவர்களிடத்தில் இவருக்கு நல்ல மதிப்பும் ஏற்பட்டது.

1916ம் வருஷம் ஸ்ரீமான் அய்யங்கார் அட்வகேட் ஜெனரலாக நியமிக்கப்பட்டார். ஸி. ஐ. ஈ. பட்டமும் சர்க்காரால் இவருக்கு அளிக்கப்பட்டது. 1920ம் வருஷம் பிப்பிரவரி மாதம் 17ந் தேதி தன்னுடைய அட்வகேட் ஜெனரல் பதவியை இவர் ராஜீநாமா செய்துவிட்டார்.

சென்னைமாகாண லெஜிஸ்லேடிவ் கௌன்ஸில் லா ஆபீசராக இவர் நியமிக்கப்பட்டார். சமூகம், கலைசம்பந்தமான அனேக சங்கங்களுக்குத் தலைவராகவும் அதன் அங்கத்தினராகவும் இருந்திருக்கிறார். 1920ம் வருஷம் இந்தியாவிலேயே ஒரு விசேஷமான வருஷமல்லவா? காங்கிரஸ் தலைவர்கள் அவ்வருஷத்தில் நிறைய சிறைப்படுத்தப் பட்டார்கள். இதைக் கண்டு மனம் பொறாதவராய் இவர் தன்னுடைய ஸி. ஐ. ஈ. பட்டத்தைத் துறந்தார். சென்னைமாகாணக் கவுன்ஸிலிலிருந்தும் ராஜீநாமாச் செய்தார்.

1899ம் வருஷம் சென்னையிலே நடைபெற்ற காங்கிரஸிலேதான் இவர் முதல் முதலாகக் கலந்துகொண்டார். 1914ம் வருஷம் சென்னையில் நடைபெற்ற காங்கிரஸ் மகாசபைக் கூட்டத்தின் காரியதரிசிகளில் ஒருவராயிருந்து அக்காங்கிரஸ் வெற்றிகரமாக நடைபெறுவதற்கு முக்கிய காரணஸ்தராயிருந்தார். அப்பால் இவர் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி அங்கத்தினராகத் தெரிந்தெடுக்கப்பட்டார்.

1915ம் வருஷம், பம்பாயில் காங்கிரசுக்குப் பண்டுசேர்ப்பதற்காக ஒரு கமிட்டி நியமிக்கப்பட்டது. அக்கமிட்டியில், சுரேந்திரநாத் பானர்ஜி பூபேந்திரநாத்பசு, வாச்சா, பண்டித மாளவியா இவர்களோடு நமது அய்யங்காரும் ஒரு மெம்பராவார்.

காங்கிரஸ் ஒரு அரசியல் ஸ்தாபனம்; தேசம் பூராவுக்கும் பிரதிநிதிஸ்தானம் வகிப்பதற்குப் பாடுபடுவது; இதில் மதசம்பந்தமான விஷயங்களை நுழைக்கக்கூடாது; மெஜாரிட்டியான ஒரு சமூகத்தின் ஆதிக்கத்திலும் இருக்கக்கூடாது என்பது ஸ்ரீமான் அய்யங்காருடைய திடமான அபிப்பிராயமாகும். சத்தியாக்கிரகம் முதலிய கொள்கைகள் எப்பொழுதும் அவரை வசீகரித்ததில்லை. 1920ம் வருஷத்திற்குப் பின்னே காங்கிரசில் மகாத்மா காந்தியினுடைய அபிப்பிராயங்களே பூரணமாக அங்கீகரிக்கப்பட்டு வந்தாலும், இவர் தன்னுடைய அபிப்பிராயங்களை வெளியிடுவதில் எப்பொழுதும் தயங்கியதே கிடையாது.

1922ம் வருஷம் டிசம்பர் மாதம் கெயாவில் கூடிய காங்கிரஸில், சட்டசபைகளைக் கைப்பற்றும் வேலைத்திட்டம் அடங்கிய ஒரு தீர்மானம் தேசபந்து தாஸால் கொண்டுவரப்பட்டபோது, சட்டசபைத் தேர்தல்களிலே கலந்துகொள்ளவேண்டியது அவசியந்தானென்றும், ஆனால் தேர்ந்தெடுக்கப்படும் காங்கிரஸ் அங்கத்தினர்கள் சட்டசபைக்குச் செல்வது கூடாதென்றும் இவர் ஒரு திருத்தங் கொண்டுவந்தார். இத்திருத்தம் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. ஆனால் டில்லியில் கூடிய காங்கிரஸ் விசேஷக் கூட்டத்தில், சுயராஜ்யப்

பார்ட்டியின் மூலமாக சட்டசபைகளின் தேர்தல்களிலே கலந்து கொள்ள வேண்டுமென்று காங்கிரஸ் முடிவுசெய்தபின், இவர் தன்னுடைய அபிப்பிராய பேதங்களை உதறித் தள்ளிவிட்டு கலந்து உழைக்கலானார். இப்பால் சென்னைச் சட்டசபைத்தேர்தலில் முழுப்பங்கெடுத்துக் கொண்டு வெற்றிகண்டார். இந்தத் தேர்தலில் ஜஸ்டிஸ்கட்சி முறியடிக்கப் பட்டதற்கு இவருடைய சலியாத உழைப்பும் ஊக்கமும் காரணங்களாகும். இதோடு சமயம்நேர்ந்தபோது தன்கைப்பணத்தையும் ஏராளமாகச் செலவுசெய்வதில் இவர் தயங்கியதே கிடையாது.

ஸ்ரீமான் அய்யங்கார் தன்னம்பிக்கை யுடையவர். மனிதத்தன்மை நிறையப் பெற்றவர். இவருடைய சேவை, தியாகம் இவற்றால் பூரிப்படைந்த இந்தியா, 1926ம் வருஷம் கோகத்தியில் நடைபெற்ற காங்கிரசுக்கு இவரைத் தலைவராகத் தெரிந்தெடுத்துக் கௌரவித்தது. வேலையில்லாத்திண்டாட்டத்தை ஒழிப்பது, உழைப்பாளிகளாகிய விவசாயி தொழிலாளிகளுடைய குறைகளைத் தெரிந்து அக்குறைகளை நீக்குவது, சமஸ்தானப் பிரஜைகளினுடைய நன்மைகளில் கவனஞ் செலுத்துவது, அந்நியநாடுகளிலேவசிக்கும் இந்தியர்களுடைய கஷ்டங்களை நீக்குவது இவ்விதக்காரியங்களிலே காங்கிரஸ் கவனம்செலுத்துவதற்கு இவர் பிரயாசையெடுத்தார்.

சைமன்கமிஷனைப் பகிஷ்கரிக்கும்படி காங்கிரஸ் தேசமக்களைக் கேட்டுக்கொண்டது. மகாசபையின் வருதிப்படி, 1928ம் வருஷம் சைமன் கமிஷன் சென்னைக்கு வந்தபோது அய்யங்காருடைய தலைமையில் கருப்புக் கொடியுடன் ஊர்வலமாகப் புறப்பட்டு சைமன் கமிஷனை மக்கள் பகிஷ்கரித்தார்கள். அவ்வருஷம் சரீர அசௌக்கியத்தின் காரணமாக இவர் ஐரோப்பாவுக்குச் சென்றார். பிரான்ஸ் ஜெர்மனி, ஸ்விஜர்லண்ட், இட்டலி, அயர்லந்து முதலிய நாடுகளில் சுற்றுப்பிரயாணம் செய்திருக்கிறார். இந்தியாவின் பலவிஷயங்களைப்பற்றி இங்கிலாந்தில் பல பிரபலத்தலைவர்களுடன் சம்பாஷித்திருக்கிறார். அயர்லாந்துக்குச் சென்றபோது, அந்நாட்டுத் தலைவர் திவேலராவினுடைய விருந்தினராகவும், ருஷ்யாவுக்குப் போயிருந்தபோது சர்க்காருடைய விருந்தினராகவும் இருக்கும் கௌரவத்தைப்பெற்றார். அரசியல், பொருளாதாரம், சமூகம் இவ்விஷயங்களைப் பற்றி இவர் ஸ்டாலினோடு சம்பாஷித்திருக்கிறார். 1928ம் வருஷம் குளிர் காலத்தில் அய்யங்கார் தாய்நாடு திரும்பினார். 1930ம் வருஷம்வரை தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் தலைவராயிருந்தார்.

காங்கிரஸின் லட்சியம் பூரணசுதந்திரமாயிருக்கவேண்டுமென்பது இவர் எண்ணம். இதை இவர் 1927ம் வருஷமுதல் வற்புறுத்திக்கொண்டே வந்தார். பூரண சுயராஜ்யத்தீர்மானம் 1929ம் வருஷம் லாகூரில்கூடிய காங்கிரஸில் நிறைவேற்றப் பட்டது.

சத்தியாக்கிரகம் ஆரம்பிப்பதற்காக காந்திஜி சர்வாதிகாரியாக ஆக்கப்பட்டதை இவர் எதிர்த்திருக்கிறார். சத்தியாக்கிரகத்தில் நம்பிக்கையில்லாதது காரணமாயிருந்திருக்கலாம்.

காங்கிரஸ் மகாசபைக் காரியகமிட்டிக்கு அங்கத்தினர்களைப் பொறுக்குவதில் அப்போது தலைவர்களுக்குள்ளே சில பிணக்குகள் ஏற்பட்டது. இதைத்தொடர்ந்தே ஸ்ரீமான் சுபாஷ் சந்திரபோசும் இவருமாகச் சேர்ந்து காங்கிரஸ் சுயராஜ்யக்கட்சி யென்ற ஸ்தாபனத்தை ஆரம்பித்தார்கள். காங்கிரஸ் சத்தியாக்கிரகப் போராட்டம் ஆரம்பித்த காலத்திலிருந்து காங்கிரசில் இவர் கலந்துகொள்வதில்லை யென்றே சொல்லலாம். ஸ்ரீமான் அய்யங்கார், அரசியலில்மட்டுமின்றி சமூகசீர்திருத்த விஷயங்களிலும மிகுந்த ஆர்வமுடையவர். பெண்கள் பக்குவம் அடைந்தபின்னேயே விவாகம் செய்யப்பெறவேண்டுமென்ற விஷயமாய் சர் சங்கரநாயர் ஆரம்பித்த கிளர்ச்சியில் அவரோடு இவரும் சேர்ந்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. கலைவளர்ச்சியிலே மிகுந்த பற்றுக் கொண்டவர் அய்யங்கார். தென்னிந்தியாவில் ஹிந்தி பிரசாரம் பலமடைவதற்கு இவர் ஒரு முக்கியஸ்தராயிருந்தார். கோகலேயின் ஞாபகார்த்தமாக சென்னை சர்வகலாசாலைக்கும், பண்டித மாளவியாவினுடைய வேண்டுகோட்கிணங்க, காசி ஹிந்து சர்வகலாசாலைக்கும், மகாத்மாவினுடைய சொற்படி சர்க்கா சங்கத்துக்கும் இவர் பதினாயிரக் கணக்கில் பொருளுதவி செய்திருக்கிறார்.

சில அபிப்பிராயபேதங் காரணமாக காங்கிரஸிலிருந்து ஒதுங்கியிருந்த ஸ்ரீமான் அய்யங்கார், பின்னே காங்கிரஸ் அங்கத்தினர் பத்திரத்தில் கையெழுத்துச்செய்து காங்கிரஸ் அங்கத்தினரானார். நமது திருக்காப்பியத் தலைவர் ஸ்ரீமான் விஜயராகவாச்சாரியாருடைய பொன் விழாக் கொண்டாட்டம் சென்னையில் இவருடைய தலைமையில் நடைபெற்றது. தொடர்ந்து சில காங்கிரஸ் கூட்டங்களிலும், அரசியல்மகாநாடுகளிலும் இவர் ஊக்கத்தோடு கலந்து கொண்டார். ஆனால் திரிபுரி காங்கிரஸ் தலைவர் தேர்தலிலும் அப்பால் ஸ்ரீமான் சுபாஷ்சந்திரபோசுக்கும், மற்ற காங்கிரஸ் தலைவர்களுக்கும் ஏற்பட்ட பிணக்குகளுக்குப் பின்னே ஸ்ரீமான் அய்யங்கார், தன்னுடைய காங்கிரஸ் அங்கத்தினர் பதவியையும், அகிலஇந்தியக் காங்கிரஸ் கமிட்டியில் தனக்கிருந்தஸ்தானத்தையும் ராஜிநாமாச் செய்துவிட்டார்.

—மா. சர்மா, B. A. (Hons.)

சிலப்பதிகாரம்:-வினையின் விதை

கடற்கரை: இடித்த மாவைக் கலந்து வைத்தது போல் மிக மெல்லிய மணல் பரந்தது. வேற்று நாட்டிலிருந்து வந்த பண்டங்களைப் பத்திரப் படுத்தி வைக்கும் பண்டசாலைகள் அங்கு ஒரு பக்கத்தில் வரிசையாய் அமைந்திருக்கின்றன. அவற்றை இரவில் காவல் காக்கும் காவலாளிகள், அவைகளில் பிரகாசமான விளக்குகளை வைத்திருக்கின்றனர். வெளி நாடுகளிலிருந்து வந்து வியாபாரஞ் செய்யும் வியாபாரிகள் வேறு துறைகளுக்குப் போகாமலிருப்பதற்காக, ஒரு துறையில் பனை மரங்களை நாட்டி அவற்றின் மேல் மண்ணால் செய்த மடல் விளக்குகளை ஏற்றி வைத்திருக்கின்றனர். கடலில் மீன் பிடிக்கும் செம்படவர்கள் தங்கள் ஓடங்களில் விளக்குகள் வைத்திருக்கின்றனர். கப்பல்களை அழைப்பதற்கு வைக்கப்பட்ட கலங்கரை விளக்கம் சூரியனைப் போல் உயரத்திலிருந்து ஒளி வீசுகிறது. இவைகளோடு கடற்கரையில் இருக்கும் கடைத் தெருவில், மீன் விற்பவர்கள் வைத்த விளக்குகள், அப்பம் விற்பவர் குடக்கால்களில் வைத்த விளக்குகள், பிட்டு விற்பவர் வரிசையாக வைத்த விளக்குகள். பொன், வெள்ளி முதலியவற்றில் வேலை செய்யும் தட்டார் தம் கடைகளில் வைத்த விளக்குகள், பலவகைப் பண்டங்களை விற்கும் பெண்கள் வைத்த விளக்குகள், சந்தனம் புஷ்பம் முதலிய வாசனைப் பொருள்களை விற்பவர் வைத்த விளக்குகள் இவற்றின் ஒளியும் சேர்ந்து கடற்கரையைப் பிரகாசமாக்குகின்றது. இவ் விளக்குகளின் வெளிச்சத்தால் மணலில் விழுந்த சிறு கடுகும் கண்ணுக்குப் புலப்படும்.

கடல் விளையாட்டு: இந்திர விழா முடிந்த மறுநாள் பௌர்ணமி. அன்று கடலில் குளிப்பதற்கு அந்நகரத்தில் இருப்பவர் எல்லோரும் வருவார்கள். இடமிருக்காததலால், இடம் பிடிக்க விடியற்காலத்திலேயே எல்லோரும் எழுந்து கடற்கரைக்கு ஓடுவார்கள். காவிரிப்பூம் பட்டினம் முழுவதும் திரண்டிருக்கும் காக்ஷியையும், அவர்கள் கடலில் குளிப்பதையும், அங்கு நடக்கும் வேடிக்கைகளையும் காண மாதவி விரும்பினாள். கோவலனுடன் கடற்கரையை வந்து சேர்ந்தாள்.

அரச குமாரரும், அவர்கள் சுற்றத்தாரும் ஒரு பக்கத்தில் இருந்தனர். அவர்களைச் சுற்றி நாட்டியப் பெண்களும், பாட்டில் வல்ல பெண்களும் சூழ்ந்திருந்தனர். நகர மாந்தர்கள் எங்கும் நிரம்பி யிருந்தனர். கடற்கரையில் மட்டுமின்றி காவிரி நதியின் சங்கமத் துறையிலும் நிற்க இடமில்லை என்று சொல்லும்படி மக்கள் நிறைந்திருந்தார்கள். அவர்கள் பேச்சின் ஒலி அலைகளின் ஒலியைக்

காட்டிலும் அதிகமாயிருந்தது. ஒரு புன்னை மரத்தின் நிழலில் கட்டில் ஒன்றில் மாதவியும் கோவலனும் வீற்றிருந்தனர். வசந்தமாலை வைத்திருந்த வீணையை வாங்கி, மாதவி முறைப்படி திருத்திக் கோவலன் கையில் கொடுத்தாள். அவள் மன மகிழும்படி கோவலனும் வாசித்தான்.

மதிகெட்டுவரும் முன்னே : கோவலன் பாடிய பாடல்கள் எல்லாம் தலைவன் ஒருவன் தலைவியைக் குறித்துக் கூறும் பாணியில் இருந்தன. அவற்றைக் கேட்கும் போது இவன் வேறொரு பெண்ணைக் குறித்துப் பாடுவது போல் தோன்றிற்று மாதவிக்கு. 'கடலை வேலியாகவுடைய ஊரையே மயக்கித் திரியும் பெண்ணை நெருங்காதே, அன்னப் பக்ஷியே! அவள் நடைக்கு நின் நடை ஒப்பாகாது' என்னும் பொருளமைத்து அவன் கைக் கிளைத்துறையில் பாடிய,

'சேரல் மடவன்னம் சேரல்
நடையொவ்வாய்
சேரல் மடவன்னம் சேரல்
நடையொவ்வாய்
ஊர்திரைநீர் வேலி யுழக்கித்
திரிவாள்பின்
சேரல் மடவன்னம் சேரல்
நடையொவ்வாய்'

என்ற பாட்டைக் கேட்டதும் அவள் சந்தேகம் உறுதியாயிற்று. வெளிக்கு மட்டும் பாட்டைக் கேட்டு மகிழ்ந்தவள் போல் வேஷம் போட்டாள். யாழை அவனிடமிருந்து வாங்கி,

"தானு மோர் குறிப்பினள்
போல்............
நிலத்தெய்வம் வியப்பெய்த
நீணிலத்தோர் மனமகிழ
கலத்தோடு புணர்ந்தமைந்த
கண்டத்தால்........"

பாடத்தொடங்கினாள்.

கேடுவரும் பின்னே: கோவலன் ஒரு குறிப்பும் இல்லாமல் பாடிய பாட்டுகளை மாதவியின் மனத்தில் சந்தேகத்தை விளைவித்தன. இவள் வேண்டுமென்றே வேறுகுறிப்புடையவள் போல் பாடும் பாட்டுகள் சந்தேகமூட்டுவதற்குக் கேட்க வேண்டுமா? கோவலனும் சந்தேகப்பட்டான். "சூரியன் மறையவும், உலகத்திலுள்ளார் உறங்கவும் நான் நோய் மிகுதியால் வாடவும் வந்த மயக்கந்தரும் மாலையே! எனக்கு ஒருவித மகிழ்ச்சியும் தராததால் இவ்வுலகமே தரித்திரம் நிறைந்ததாயிருக்கிறது" எனனும் பொருளமைந்த அவள் கைக்கிளைத்துறையில் பாடிய,

பையுளோய் கூரப் பகல்
செய்வான் போய்வீழ
வையமோ கண்புதைப்ப
வந்தாய் மருண்மாலை
மாலைநீ யாயின்
மணந்தா ரவராயின்
ஞாலமோ நல்கூர்ந்
ததுவாழி மாலை"

என்ற பாடலும் பின் அவள் தலைவன் கூறிய சபத மொழிகளின் படி அவன் நடந்துகொள்ளாததற்கு அவனை மன்னிக்கும்படி கடவுளை வேண்டிக்கொண்டதும், கோவலன் சந்தேகத்தை ஊர்ஜிதப் படுத்தின. அவன் தீவினையும் அவனை அவளைவிட்டு

விலகிவிடும்படி தூண்டியது. ஒன்றும் கூறாமல் அவ்விடத்தைவிட்டுப் போய் விட்டான்.

கோவலனும் மாதவியும் பிரிந்ததை ஊழ்வினைப்பயன் எனக் கூறுகிறார் ஆசிரியர். இப்பிரிவு நிகழ்ந்திரா விட்டால் கோவலன் கொலையும், அதனால் கண்ணகியின் கற்பின் திறன் வெளிப்பட்டதும் நிகழ்ந்திருக்காது. ஆகவே இனி வரும் கதைநிகழ்ச்சிகளுக்கெல்லாம் இதுவே காரணமாய் அமைகின்றது. வாழ்க்கையில் விபரீத முடிவை விளைவிக்கக்கூடிய சக்தி ஊழ்வினைக்கே உரியதல்லவா? அதனால்தான் மிகமுக்கியமாயும், பின்வரும் நிகழ்ச்சிகளுக்கு முதற்காரணமாயும் அமைகின்ற இப்பிரிவை வினைப்பயன் என ஆசிரியர் கூறுவது. பல கிளைகளையுடைய மரத்தின் முதற் காரணமாகிய விதையைப் போல, பின் ஊழ்வினை வயத்தால் கோவலனும் கண்ணகியும், அவரைச் சேர்ந்தவரும் படும் பலகஷ்டங்களுக்கும் முதற்காரணமாகிய இப்பிரிவை வினையின் விதை யென்றே கூறலாம்.

மாதவியின் நிலை: கோவலன் பிரிந்தபிறகு மாதவி தனியே தன் வீடு சேர்ந்ததை

கையற்ற நெஞ்சினளாய்
  வையத்தி னுள்புக்குக்
காதலனுட னன்றியே
  மாதவிதன் மனைபுக்காள்"

எனக் கூறுகிறார் ஆசிரியர். ஒன்றும் தோன்றாத மயக்கமடைந்த மனத்தை உடையவளாய் மாதவி உலகத்தினுள்ளே தன்னந்தனியாய்ப் புகுந்து தன் வீட்டுக்குச் சென்றாள். இதுவரையில் மாதவிக்கு உலகம் ஒன்று இருப்பதாகவே எப்பொழுதும் தோன்றியதில்லை. ஐந்து வயது முதல் பன்னிரண்டு வயதுவரை ஆடலிலும் பாடலிலும் பயிற்சி பெற்றாள். பின் தன் வித்தையை அரங்கேற்றிய உடனே கோவலனைக் காதலனாகப் பெற்றாள். அது முதல் அவள் வாழ்க்கை சந்தோஷமயமாகவே இருந்தது. உலகவிஷயங்களைத் தெரிந்துகொள்ளக் கூடிய பருவமுதல் இவள்மனம் வேறு ஒரு பொருளையும் நினைக்காமல் கோவலனுடன் கூடி இன்பமனுபவிப்பதிலேயே கண்ணுங் கருத்துமா யிருந்தது. கஷ்டம் ஒன்று மில்லாமல் களிப்பிலேயே காலங் கழிக்கும் மக்களுக்குக் கடவுளைப் பற்றியோ, உலக விஷயங்களைப் பற்றியோ சிந்திக்கச் சந்தர்ப்பம் ஏது?

இப்பொழுது மாதவி வாழ்க்கையில் ஒரு பெரிய மாறுதல் ஏற்பட்டு விட்டது. இதுவரை கோவலனோடு கூடியிருப்பதே உலகம் என்று நினைத்திருந்தாள். இப்பொழுது கோவலன் பிரிந்து போய் விட்டான். உலகம் கோவலனோடு கூடியிருப்பதைக் காட்டிலும் மிகப் பெரியது எனத் தோன்றுகிறது. வாழ்க்கை முள்ளையுடைய ரோஜாவைப் போல் துன்பமும் பொருந்தியது எனத் தெரிந்து கொண்டாள். இதழ்களின் அழகும் வாசனையும் நம்மை ரோஜாவில் இருக்கும் முள்ளை மறக்கச் செய்கின்றன. கோவலன் பிரிவால் ரோஜாவின் இதழ்கள் வீழ்ந்து விடுகின்றன. முள் மாத்திரம் நிற்கிறது. அதனால் வாழ்க்கை துன்பமயமாகவே தோன்

றுகிறது மாதவிக்கு. கடற்கரையில் ஆயிரக் கணக்கான மக்கள் ஆனந்தத்தில் மூழ்கினவர்களாய் இருக்கிறார்கள். மாதவி ஒருத்திக்கு மட்டுமே துன்பம் ஏற்படுகிறது. அதுவும் எல்லை கூற முடியாதது. இதுவரை இன்பத்தையே அனுபவித்தவளுக்குத் திடீரென துன்பம் நேரவே, அத் துன்பத்தின் அளவு மேலும் அதிகப்படுகின்றது. கடல் விளையாட்டைக் காண வந்தவர்களுள் மாதவி ஒருத்தியே மன வருத்தம் அடைந்தவளாகையால், அவளுக்கும் மற்றவருக்கு முள்ள வேற்றுமையையும், அவள் அடைந்த அளவிலாத துன்பத்தின் அளவையும் வெளிப்படுத்தவே ஆசிரியர், அகன்ற உலகத்தில் ஆதரவின்றித் தனியே புகுந்து தன் மனை அடைந்தாள் எனக் கூறுகிறார்.

மாதவியின் கடிதம்: மனையை அடைந்த மாதவி, மேல் மாடத்திற்குச் சென்று, வீணை வாசிப்பதில் ஈடுபட்டாள். வேனிற்காலத்திற்கேற்ற பண்ணை வீணையில் வாசித்த படியே வாய்ப்பாட்டும் பாட ஆரம்பித்தாள். ஆனால் வீணைக்கு ஒத்த குரல் கொண்டவளுக்கு, இப்பொழுது சாரீரம் வீணையோடு சேரவே யில்லை. பல முறைகள் முயன்று பார்த்தும் பயன் ஏற்பட வில்லை. வீணை வாசிப்பதை நிறுத்தி விட்டாள். என்ன செய்வது எனச் சிந்தித்தாள். காமன் கட்டளையும் அவ்விதமே செய்யத் தூண்டியதால் கோவலனுக்கு ஒரு கடிதம் எழுதுவது என முடிவு செய்தாள்.

தாழை மடல்தான் ஓலை. பித்திகைப் பூவின் மொட்டு எழுத்தாணி. செம்பஞ்சிக் குழம்பே மை. எழுத்தாணியை மையில் தோய்த்து உதறி,

> மன்னுயி ரெல்லா மகிழ்துணை
> புணர்க்கும்
> இன்னிள வேனி லிளவர சாளன்
> அந்திப் போதகத் தரும்பிடர்த்
> தோன்றிய
> திங்கட் செல்வனுஞ் செவ்விய
> னல்லன்
> புணர்ந்த மாக்கள் பொழுதிடைப்
> படுப்பினுந்
> தணந்த மாக்கள் தந்துணை
> மறப்பினு
> நறும்பூ வாளியி னல்லுயிர் கோடல்
> இறும்பூ தன்றிஃ தறிந்தீ மின்"

எனப் பேசிப் பேசி எழுதி முடித்தாள். "உலகத்து உயிர்களை ஒன்று கூட்டி மகிழ்விக்கும் இளவேனில் இளவரசனாகையால் பொறுப்பின் பெருமை தெரியாமல் காரியஞ் செய்வான். அவனோடு ஒழியாது அந்திப் பொழுதில் அலரும் காம நோய் எனும் புஷ்பத்தோடு தோன்றும் சந்திரனும் வஞ்சக முடையவன். சேர்ந்தவர் சிறிது பிரிந்தாலும், பிரிந்தவர் மறந்தாலும், நல்ல புஷ்ப பாணத்தினால் இன்பத்தை விரும்பும் உயிரைக் கொள்ளுதல் புதிய செய்தியல்ல. இதை மனத்திற் கொள்ள வேண்டும்" என எழுதி யிருந்தாள்.

• கோவலன் மறுப்பு: முடித்த கடிதத்தை வசந்தமாலை யிடம் கொடுத்தனுப்பினாள். மாதவி யினிடத்து மிக்க

அன்புடைய அத்தோழி போகும் வழியில்,

"செந்தா மரைவிரியத் தேமாங் கொழுந்தொழுக
மைந்தா ரசோக மடலவிழக்—கொந்தா
ரிளவேனல் வந்ததா லென்னுங்கொ லின்று
வளவேனற் கண்ணி மனம்"

எனக் கூறி வருத்தப் பட்டாள்—தாமரைப் பூக்கள் அலர்ந்திருப்பதையும், மாமரங்கள் கொழுந் தோடி யிருப்பதையும், அசோக மரங்கள் கொத்து கொத்தாய்ப் பூத்திருப்பதையும் பார்த்தாள். இப்படி இயற்கைப் பொருள்களை அழகுறச் செய்யும் இவ் விளவேனிற் காலத்தில் மாதவி மனம் எப்படி யாகுமோ என்பதுதான் அவள் வருத்தம். கோவலன் கடிதத்தை ஏற்றுக் கொண்டால் மாதவியும் மாமரத்தையும் அசோக மரத்தையும்போல் அழகுடன் திகழ்வாள். மறுத்தால்!........அதுதானே அவளை வருத்துவது.

கூனி கூல வீதியில் கோவலனைக் கண்டு கடிதத்தைக் கொடுத்தாள். 'உலகத்தில் ஊடிப் பிரிந்தவர்க ளெல்லாம் கூடி மகிழுங்கள். இது காமன் கட்டளை' எனக் குயில்கள் கூவுகின்றன. கடற்கரையில் அவள் பாடிய பாடலுக்கு வருந்தியவனே! வேனிற் காலத்தில் நின்னோடு கலந்தவள் கொடுத்த கடிதத்தைக் காண் என்று கூறினாள்.

ஊடினீ ரெல்லா முருவிலான் றன்னாணை
கூடுமினென்று குயில்சாற்ற—நீடிய
வேனற்பா ணிக்கலந்தாள் மென்பூந் திருமுகத்தைக்
கானற்பா ணிக்கலந்தாய் காண்

இதைக் கேட்ட கோவலன் 'மாதவி நாடகப் பெண்ணல்லவா? அவள் இப்படி நடிப்பது அவள் குலவித்தைதானே' என்று கூறி கடிதத்தை ஏற்றுக் கொள்ள மறுத்து விட்டான். மனம் மாறுபட்ட கோவலனுக்கு மாதவியின் அன்பெல்லாம் நடிப்பாகவே தோன்றுகிறது. நடிப்பு என முடிவு கட்டிய பிறகு பின்னும் அதில் மயங்க அவன் மனம் இசையவில்லை.

எதிர்பார்த்தல்: வசந்தமாலை மிக வருந்தியவளாய் கோவலன் மறுத்ததை மாதவிக்குச் சென்று கூறினாள். மாதவிக்கு இச்செய்தி அவ்வளவு வருத்தத்தைத் தரவில்லை. அவள் மனோ திடத்துடனேயே 'மாலையில் வரா விட்டாலும், கட்டாயம் அவரை நாளைக் காலை காண்போம்' என்று கூறினாள். கோவலன் மன நிலையை மாதவி தெரிந்து கொள்ளவில்லை. அவள் அன்பின் அளவைக் கோவலன் தெரிந்து கொள்ளவில்லை. இப்படி ஒருவரை ஒருவர் முற்றும் உணராமலேயே இவர்கள் செய்யும் தவறு இவர்களோடு நில்லாமல் பின்னால் இவர்களைச் சேர்ந்தவர்களுக்கும் இன்னல் விளைவிக்கிறது. 'ஊழ் வினை உறுத்து வந்தூட்டு மென்ப'தை உலகத்தாருக்கு உரைக்க, இதைக் காட்

டிலும் சிறந்த கதையை ஆசிரியர் தேர்ந்தெடுத்திருக்க முடியுமா?

மாயமகன்: பிராமணன் ஒருவனுக்கு இரண்டு மனைவியர் இருந்தனர். மூத்தவள் மாலதி. ஒரு நாள் மாலைப் பொழுதில் பார்ப்பானும் அவன் இளைய மனைவியும் வெளியே சென்றிருந்தனர். இளையவளின் பிள்ளை அழுதது. அக்குழந்தைக்குப் பால் ஊட்டினாள் மாலதி. பால் விக்கி குழந்தை இறந்தது. புருஷனும் சக்களத்தியும் தன் மேல் வீண் பழி சுமத்துவார்கள் என்று அஞ்சினாள் மாலதி. மரித்த மகவை எடுத்துக் கொண்டு, உயிர்ப் பிச்சை தருமாறு கோவில்களிற் சென்று தொழுதாள். ஒரு கோயிலிலும் அவள் குறை தீரவில்லை. கடைசியாகச் சாத்தன் கோயிலுக்குச் சென்று முறையிட்டாள்.

ஒரு பேய் அவளிடம் வந்து 'முன் ஜன்மத்தில் தவம் செய்யாதவருக்குத் தேவர்கள் வரம் கொடுக்க மாட்டார்கள்., உன் வேண்டுகோள் வீணே' என்று சொல்லி குழந்தையைப் பிடுங்கி விழுங்கிவிட்டது. மாலதியின் மனவருத்தம் அதிகமாயிற்று. குழந்தையைக் கொன்றதுமல்லாமல், பழியைப் போக்கிக் கொள்ள அதன் உடலையும் மறைத்துவிட்டாள்' என்று மேலும் பழிவருமே என்று ஏங்கினாள்.

சாத்தன் மனம் இளகியது. அவன் மாலதியைத் தேற்ற, அவள் முன்தானே அக்குழந்தை வடிவத்தைக் கொண்டான். அந்த மாயப் பிள்ளையை மாலதி வீட்டுக்கு எடுத்துச் சென்றாள்.

அப்பிள்ளை வளர்ந்து பலகலைகளையும் கற்றவனாய் விளங்கினான். அவனுக்கு தேவந்தி எனும் பெண்ணைக் கலியாணஞ் செய்துவைத்தனர்.

சிலவருஷங்கள் தேவந்தியுடன் சாத்தன் இல்லறம் நடத்தினான். இறந்த தாய்தந்தையர்க்குக் கடன்களைக் குறைவறச் செய்து முடித்தான். பின் தன் தேவவடிவைத் தேவந்திக்குக் காட்டி அவளைத் தன் கோவிலுக்கு வரச்சொல்லிவிட்டு மறைந்தான். தேவந்தியும் தன் கணவனைத் திருப்பித் தரவேண்டுமெனச் சாத்தன் கோயிலில் தினமும் வேண்டினபடி வாழ்ந்து வந்தாள்.

தன்னைப் போலவே கண்ணகியும் புருஷன் பிரிவினால் வருந்துவது தேவந்திக்குத் தெரிந்தது. அவள் இளமையில் கண்ணகியின் தோழியாயிருந்தவள். தன் தோழியும்கணவனைத் திரும்பப் பெறவேண்டுமெனத் துதித்துவிட்டுக் கண்ணகியைக் காணச் சென்றாள்.

கண்ணகியின் கனவு: கண்ணகியைக் கண்டதும் 'நீ நின்கணவனைப் பெற்றுச் சுகமாயிருப்பாய்' என்று ஆசீர்வதித்தாள் தேவந்தி. இவ் ஆசி கண்ணகிக்குச் சிரிப்பைத் தந்தது. அன்றுதான் அவள் ஒரு கனவு கண்டாள். அவளும் கோவலனும் ஒரு பெரிய நகரத்திற்குச் செல்லுகிறார்கள். அங்கு கோவலனுக்கு ஒரு தீங்கு ஏற்படுகிறது. கண்ணகி அவ்வூர் அரசன்முன் சென்று வழக்குரைக்கிறாள். பின் அரசனுக்கும் அவ்வூருக்குந் தீங்கு உண்டாகிறது.

கனவின் வரலாற்றைக் கேட்ட தேவந்தி 'நீ முன் பிறப்பில் ஒரு நோன்பு செய்யத் தவறினாய். அதனால் தான் உனக்குக் கஷ்டம் நேர்ந்தது' என்று சொல்லிக் கஷ்டம் நீங்க வழியும் சொன்னாள். காவிரியின் சங்க மத்துறையின் பக்கத்தில் சோம குண்டம் சூரியகுண்டம் என்ற இரண்டு தடாகங்கள் உண்டு. அவற்றில் நீராடி காமன் கோவிலில் சென்று வணங்குவதுதான் அது. இந்த வழியைப் பின்பற்ற கண்ணகிக்கு விருப்பமில்லை. அதுகுலமகளிர்க்குப் பெருமைதருவதல்ல என்று கூறிவிட்டாள்.

கோவலன் வருகை: அவ் வேளையில் கோவலன் வருகிறானென்று ஒரு பணிப்பெண் கண்ணகியிடம் வந்து சொன்னாள். வந்தவன் கண்ணகியின் வருத்தத்தைக் கண்டு 'பொய்யை மெய்யாகப் பொருந்துவித்து நடிக்கும் பரத்தையோடு சேர்ந்து, முன்னோர் சேர்த்துவைத்த பொருளெல்லாவற்றையும் இழந்தேன். அதனால் ஏற்பட்ட வறுமை எனக்கு வெட்கத்தைத் தருகிறது' என்றான்.

அவன் பரத்தைக்குக் கொடுக்க மேலும் பொருளில்லாமல் வறுமையைக் குறித்து வருந்துகிறான் என்று நினைத்தாள் கண்ணகி. தன் மனவருத்தத்தை அடக்கிக் கொண்டு சந்தோஷ முகபாவத்துடன் 'என்னிடம் இரண்டு சிலம்புகள் இருக்கின்றன. அவற்றை எடுத்துக் கொள்ளுங்கள்' என்று கூறினாள்.

'கெட்டால் மதி தோன்றும்' என்பது வழக்கு. கோவலன் பொருளை இழந்த பிறகு புத்திவரப் பெற்றான். இனி புகாரில் வசிப்பதே அவனுக்கு வெறுப்பாய் இருந்தது. மதுவையுண்ட மயக்கம் தீர்ந்த பிறகு, தாம் செய்த காரியங்களுக்கு வெட்கப் படுபவர்கள்போலக் கோவலனும் மாதவியுடன் கூடியிருக்கும் வரைதான் செய்வது தவறு என்று உணரவில்லை. இப்பொழுது மயக்கம் தீர்ந்துவிட்டது. அவன் செய்ததை அவனுக்கே வெறுப்பை விளைவிக்கின்றன. மற்றவர் முகத்தில் விழிப்பதற்கே அவன் வெட்கப்பட்டான். வேற்றூருக்குப் போக உறுதி கொண்டான்.

உன் சிலம்பை மாற்றி அதை முதலாகக் கொண்டு இழந்தபொருளைச் சேர்க்க உத்தேசிக்கிறேன். அதன் பொருட்டு மதுரைக்குச் செல்வதென்று தீர்மானித்து விட்டேன். நீயும் என்னுடன் வா என்று கண்ணகிக்குக் கூறினான்.

புறப்பாடு:

காதலி கண்ட கனவு
  கருநெடுங் கண்
மாதவி—தன் சொல்லை
  வறிதாக்க—மூதை
வினை கடைக் கூட்ட
  வியங்கொண்டான் கங்குற்
கனை சுடர் கால் சீயா முன்

கண்ணகி கண்ட கனவு மாதவியின் சொல்லைப் பொய்யாக்கவும், முன் செய்த வினை தூண்டவும் சூரியன்

உதிப்பதற்கு முன்னே இரவிலேயே நகரத்தை விட்டுச் செல்ல வினையின் ஏவலைக் கொண்டான்.

ஊழ்வினை கோவலனை மாதவியை விட்டுப் பிரித்தது. அவன் சிலகாலம் கண்ணகியுடன் கூடி யிருப்பதை நாம் விரும்புவோம். ஆனால் வினைப்பயன் அதற்கு இடந்தரவில்லை. அவன் முடிவைத் துரிதப்படுத்துகிறது. அம் முடிவை ஒருவாறு ஊகித் தறிய கண்ணகி கனவு உபயோகப்படுகிறது. எதிர்பாராத முடிவு நமக்கு எப்பொழுதும் ஆச்சரியத்தைத் தரும். அது விபரீதமாயிருந்தால் நமக்குத் துன்பத்தையுந் தரும். அப்படிப்பட்ட முடிவை இயற்கையாக நடக்கக்கூடியது என்று நம்பவும் மாட்டோம்.

இம்மனோபாவத்தைத் தெரிந்துகொண்டுதான், பின்னிகழ்ச்சிகளை ஆசிரியர் கண்ணகி கனவு காண்பதாகச் சித்தரிக்கிறார். இப்பொழுது முடிவுக்கு ஒரு காரணமும் கற்பித்தாயிற்று. காரண காரியமாய் நடக்கும் எவ்விஷயமும், நம் உறுதியான நம்பிக்கைக்குப் பாத்திரமாகிறது. அவ்விஷயங்கள் தாம் மக்களுக்கு நீதிகளைப் புகட்டுவதும். கண்ணகி கனவு காண்பதாக கற்பிப்பது, ஆசிரியர் மக்கள் மனநிலையை எவ்வளவு தூரம் தெரிந்துகொண்டிருக்கிறார் என்பதை விளக்கிக் காட்டுகிறது.

நாம் எதிர்பார்ப்பது ஒன்றும் நடப்பதில்லை. நாம் எவ்வெப்படி இருக்க விரும்புகிறோமோ அப்படியேதான் ஆவோம். இவை யிரண்டும் ஒன்றுக்கொன்று முரண் பட்டவை. ஆனால் இரண்டு கொள்கைகளும் உண்மையாயிருப்பதை நாம் கண்கூடாகப் பார்த்திருக்கிறோம். மாறுபட்ட இரண்டும் உண்மையென்றால், அது நம் அறிவாற்றல்களுக்கு குறைகூறுவதாகாதா?

கோவலன் மாலையில் இல்லா விட்டாலும் மறுநாள் காலையில் வருவான் என்று மாதவி எதிர்பார்க்கிறாள். அது நிகழவில்லை. கண்ணகி கனவு காண்கிறாள். கனவு பலிக்கும் என்ற உறுதியுடன் தான் தேவந்தி ஆசீர்வதித்ததைக் கேலி செய்கிறாள். ஆகவே அவள் கனவு பலிக்கும் என்று எதிர்பார்த்தது உண்மையாயிற்று. முரண்பாடுகள் இரண்டும் உண்மையாகி விட்டன. ஆனால் இவ்வித முரண்பாடு இருப்பதற்கு ஒரு காரணம் இருக்க வேண்டுமல்லவா?

இப்படிப்பட்ட சமயத்தில் தான் கடவுளும் ஊழ்வினையும் பழி யேற்பது. நாம் எதிர் பார்ப்பவை நம் ஊழ்வினைக்கு ஒத்தவையாயிருப்பின் நிகழும். இல்லாவிட்டால் நிகழாது. இதை வலியுறுத்தத்தான் கோவலன் மதுரைக்குப் புறப்பட்டதை 'ஊழ்வினையின் ஏவல்' என்று கூறுகிறார் ஆசிரியர். இனிக் கதையின் நிகழ்ச்சிகளின் பொறுப்பு ஊழ்வினையின் தலையில் விழுகிறது. அது காட்டும் வழி எப்படிப் பட்டதோ?

—"தேவிதாசன்"

தமயனின் கடிதம்-14

எனது இராப் போது

ஒடிந்த பலகையிலே—விரித்த வொரு
ஓலைப் பாயினிலே
ஒடித்து நித்திரையை—நாலுலகில்
ஓட்டுவேன் உளப்பரியை. 1

காட்டிற் செல்கையிலே—நெஞ்சம்மிக
களிவீறு கொள்ளுமடா!
நாட்டில் நடக்கையிலே—மிகமிக
நடுக்கங் கொள்ளுமடா! 2

பொய்யரின் போலிப் பொருள் நல்விலைக்குப்
போகு மடா புவியில்! [போக
மெய்யரின் சொக்கப் பொன்னும்—விலை
மிகவும் தயங்கு மடா! 3

உள்ளம் ஒருப்படினும்—சமூகவிழி
உருட்டும் மிரட்டலிலே
உள்ளம் ஒடுங்கிடுவார்—காதலர்கள்
உலகை நொந்திடுவார். 4

குள்ள நரிகள் வரும்—வால் குழைத்துக்
கும்பிடுகள் போடும்!
கள்ள மறியாமல்—நம்பி மோசங்
கண்டார் கண்ணீர்பெருகும். 5

வஞ்சகர் வாழ்சிறக்கும்—பின்பவர்கள்
வாழ்குலைந் தூர்சிரிக்கும்!
பச்சைக் குடிசைகளும்—மாறுமடா
பளிங்குக்கல் மாடங்களாய்! 6

கொடுங்கோ லரசினிலே—மக்கள்கூடிக்
கொட்டிடுங் கண்ணீர்த்துயர்
மடுவில் உளப்பரியும்—மிகமிக
மயக்கங் கொள்ளுமடா! 7

நல்லதோ ரரசினிலே— கட்டறியாப்
புட்களைப் போல மக்கள்
செல்லுதல் கண்டடாவோ!—உளப்பரி
சிரம் நிமிர்ந்து செல்லும். 8

இந்தவித மாகச்—செல்லுமென்றன்
இரவுப் போதினிலே
சிந்தை மறந்திருப்பேன்!—சேவற்கோழி
செப்புங் கதிர்வரவை. 9

உள்ளப் பரியுமெங்கே?—சென்ற நன்னூல்
உலகு மெங்கேயடா?
எல்லாம் மறைந் தொழியும்—வருபகலை
எண்ணி மனந்துடிக்கும்! 10

——வி. எம். துரைச்சாமி

கூலி : : : : :

கூலி, அல்லது சம்பளம் என்று கூறுகிற வார்த்தை சாதாரணமாக எல்லோருக்கும் அறிமுகமானதுதான். இந்த வார்த்தையோடு நாம் தினந்தோறும் பழகுகிறோம். தனம் படைத்த ஒருவருக்கு, ஒரு கிளார்க்கு தேவையாயிருக்கிறது. தேவையைத் தெரிந்து பல பேர் அவரை அணுகுகின்றனர். சம்பளத்தைப் பற்றிய பேச்சு வருகிறது. தன்னுடைய படிப்பையும், சாமர்த்தியக் குணங்களையும் வேலைக்கு வந்திருப்பவர் தெரிவித்துக் கொள்ளுகிறார். உலகப் பொருளாதார மந்தத்தையும், வியாபாரக் குறைவையும் முன்னே வைக்கிறார் தனம் படைத்தவர். "மாதம் ஒன்றுக்கு இருபது ரூபாய் சம்பளம்" 'கட்டாதே, கருணை செய்ய வேண்டும்' என்கிறார் வந்திருப்பவர். கடைசியாய் இருபத்திரண்டு ரூபாயாக நிச்சயமாகிறது. தினக் கூலிக்கு ஆள் பார்க்கிறோம். ஒரு ஆள் வருகிறான். குறிப்பிட்ட வேலையை முடித்துவிட்டான். சம்பளமாக ஆறு அணாக் கொடுக்கிறோம். பெற்றுக் கொண்டு பேசாது போய் விடுகிறான். இவையெல்லாம் மனிதர்கள் அடிக்கடி நெருங்கிப் பழகும் சம்பவங்கள். ஆனால், அவ்விதம் அறிமுகமாயுள்ள விஷயமாயிருந்தாலுங் கூட, இந்தக் கூலி, அல்லது சம்பளம் எந்த ஆதாரத்தைக் கொண்டு நிர்ணயிக்கப்படுகிறது? இதையெப்படி நிர்ணயம் செய்ய வேண்டும் என்பதை யாவரும் அறிந்திருக்கிறார்களென்று சொல்ல முடியாது. அப்படி அறிந்திருந்தால், இன்று உலகத்தில் இவ்வளவு கொந்தளிப்பும் கூக்குரலும் ஏன் நிலவியிருக்கிறது! ஆனதால் இதைப்பற்றி நாம் இங்கு சிறிது ஆராய்வோம்.

நாம் உபயோகிக்கும் எந்த ஒரு பொருளும், மனிதனுடைய உழைப்பில்லாமல் உண்டாவதில்லை. அதாவது, மனிதனுடைய உழைப்பே ஒரு பொருளாகவோ, அல்லது ஒரு பண்டமாகவோ உருக் கொள்கிறது என்று கூறலாம். நாள்தோறும், ஒரு மனிதன் இவ்விதம் உழைத்து, அந்த உழைப்பினால் உண்டாகும் பொருளில் கொஞ்சங் கொஞ்சமாக மீதம் வைத்து வந்தானேயானால், அவ்விதம் அவனால் மீதமாகச் சேர்த்து வைக்கப்படும் பொருளை, மூலதனம் என்று கூறுவார்கள். அப்படியானால், மூலதனம் என்பது, உண்மையில் மனிதனுடைய உழைப்பின் சேர்க்கை அல்லது குவியல் என்பதை நாம் ஸ்பஷ்டமாக அறிகிறோம். இந்த மூலதனம் பல பொருள்கள் உண்டாவதற்கு ஏதுவாக இருக்கிறது. அதாவது, எப்படி மனிதனுடைய உழைப்பானது பல பொருள்களை உற்பத்தி செய்வதற்குரிய சக்தி பொருந்தியதாயிருக்கிறதோ அதேபோன்று, இந்த மூலதனமும், பல பொருள்களை உற்பத்தி செய்யக் கூடிய சக்தி பொருந்

தியதாயிருக்கிறது. ஆனால், வெறும் மூலதனம் மட்டும் எந்த ஒரு பொருளையும் சிருஷ்டித்து விட முடியாது. அதோடு மனித சக்தியும் சேர வேண்டும். அப்படியில்லையேல் மூலதனம் முடங்கிக் கிடக்க வேண்டியதுதான். அப்போது அதற்கு மூலதனம் என்ற பெயரும் பொருந்தாதல்லவா? ஒரு மனிதன் ஒரு நாள் பூராவும் இருபது மைல் தான் நடக்க முடிக்கிறதென்று வைத்துக் கொள்வோம். ஆனால், அவனுடைய இந்த சக்தியோடு, மூலதனத்தின் ரூபமான சக்தியும் அவனுக்குக் கிடைத்தால் அந்த மனிதன் ஒரு தினத்தில் நூறு மைல் பிரயாணம் செய்து முடித்து விடுகிறான். இவ்விஷயத்தை ஒரு உதாரண மூலமாகப் பார்ப்போம். ஒரு மனிதன், ஒரு நாள் பூராவும் இருபது மைல் தூரம் நடக்கிறான் என்று கூறினோமல்லவா? அப்படியானால், அவனுடைய, பூரா ஒரு நாள் உழைப்பின் பலன் இருபது மைல் பிரயாணம் என்று தெரிகிறோம். இந்த மனிதன், ஏற்கனவே தன்னுடைய உழைப்பில் கிடைத்தகூலியைக் கொஞ்சங்கொஞ்சமாக மீதம் செய்து வைத்திருக்கிறான் என்று வைத்துக் கொள்வோம். மீதம் செய்து சேர்த்து வைத்த இந்தத் தொகையைக் கொண்டு ஒரு சைகிள் வாங்குகிறான். இப்போது இந்த சைகிளின் மீது ஏறிக்கொண்டு இவன் ஒரு நாள் முழுதுமாக நூறு மைல் வரை பிரயாணம் செய்ய முடிகிறது. சைகிளுக்கு இவன் முதலாளியாகி விடுகிறான். முன்னே இருபது மைலைக் கடப்பதற்கு இவன் ஒரு நாள் பூராவும் உழைக்க வேண்டியதிருந்தது. இப்போது, அதில் ஐந்தில் ஒரு பங்கு உழைப்பால் அந்த இருபது மைலைக் கடந்து விட முடிகிறது. அப்படியானால் இப்போது அவனுக்கு நான்கு பங்கு நேர உழைப்பு மிஞ்சுகிறது. உழைப்பின் குவியல் தான் மூலதனம் என்பதாக நாம் மேலே கூறியிருக்கிறோமல்லவா? இவ்விதம் மிஞ்சுகிற உழைப்பு, அதாவது மூலதனம் பெருகப் பெருக, அந்த மூலதனத்தைக் கொண்டு, பொருள் உற்பத்திக்குச் சாதனமாயிருக்கிற மில்களையும் தொழிற்சாலைகளையும் கட்டுகிறான். அவைகளுக்கு இவன் முதலாளி. மூன்று நான்கு லட்சம் மனிதர்களுக்குள்ள சக்தி நிறைந்திருக்கிற அந்த இயந்திரங்களை நடத்துவதற்கு, குறைந்தது ஆயிரம், அல்லது இரண்டாயிரம் பேர்களாவது தேவைப்படுகிறது. இதுதான் தற்கால உலகில் பொருள் உற்பத்தியின் ரீதியாயிருக்கிறது. இதில் முதலாளியும் தொழிலாளியும் பாகஸ்தர்களாகிறார்கள். அப்படியானால், அந்த உற்பத்திச் சாதனங்களின்மீது முதலாளிக்கு எவ்வளவு உரிமையிருக்கிறதோ; அதிகாரமிருக்கிறதோ அதே அதிகாரமும் உரிமையும் தொழிலாளிகளுக்கும் இருக்கவேண்டும். ஆனால் நாம் என்ன காண்கிறோம்? பொருள்களைப் பங்கிட்டுக்கொள்வதில் தகராறு நிகழ்வதைக் காண்கிறோம். உழைப்பின் குவியலாகிய மூலதனத்தைக் கொண்டு மில்களைக் கட்டியமுதலாளிக்கும், தங்களுடைய உழைப்பால் அந்த மில்களை நடத்திப் பொருள்களை உற்பத்திசெய்கிற தொழிலாளிகளுக்கும் தகராறு என்றால் என்ன அர்த்தம்? மேற்கண்ட பொருள்களைப் பங்கிடும்போது தொழிலாளிக்குக் கிடைக்கவேண்டிய பங்கு

கிடைக்கவில்லை; முதலாளி அதிலும் கைவைத்துவிட்டார். தகராறு தோன்றிவிட்டது.

ஆனால் இது ஒரு அதிசயமான சங்கதியில்லை. முதலாளித்துவத்தின் இயற்கையே அதுதான். முதலாளிகள் தொழிற்சாலைகளை நடத்தும் முறையில் கொஞ்சம் உழைக்கிறார்களென்பது வாஸ்தவம். ஆனால் அந்த உழைப்பு ஜனசமூகத்திற்குச் செய்ய வேண்டிய சேவையென்பதாக நினைத்து அல்ல. தங்களுடைய லாபத்தைமுக்கியமாகக்கருதி உழைக்கிறார்கள். முதலாளித்துவமானது எவ்வளவுதூரம் பலப்படுகிறதோ அதற்குத் தகுந்தவாறு, தொழிலாளருக்கு உற்பத்திப் பொருள்களில் கிடைக்க வேண்டிய பங்கு குறைக்கப்பட்டு விடுகிறது.

"பொருள் உற்பத்தியில், முதலாளித்துவசிப்படி, அதனுடைய இயற்கையான குணம் என்னவென்றால், தொழிலாளிகளுடைய கூலியைக் குறைப்பதும்; அவர்களுடைய கூலியைக் குறைந்தபட்சமாக நிர்ணயிப்பதுமாகும். தொழிலாளிகள், முதலாளிகளுடைய இச்செய்தியை தடுக்கவில்லையானால், அவர்கள் இவர்களுக்கு எதுவுமே கொடுப்பதற்கு ஒருப்பட மாட்டார்கள். தொழிலாளிகள், தங்களுடைய கூலியைக் குறைக்கவிடாமல் பார்த்துக் கொள்ள வேண்டியது, அவர்கள் வாழ்வதா சாவதா என்ற பிரசினையாக்கும். முதலாளித்துவத்தினுடைய இயற்கையான குணமும், முயற்சியும், தொழிலாளிகளுடைய முயற்சியும் குணமும் நேர்மாறான, முரண்பட்ட தன்மையுடையவை. முதலாளித்துவத்திற்கும் தொழிலாளிகளுக்கும் அடிக்கடி போராட்டம் நிகழ்கிறதென்றால் அதில் அதிசயமொன்றுமில்லை. தடுக்கமுடியாத விஷயம் அது" என்று காரல் மார்க்ஸ் கூறுகிறார். மேலும் அவர் என்னகூறுகிறார் என்பதைக் கவனிப்போம். "தங்களுடைய கூலியைக் குறைப்பதுபற்றி தொழிலாளிகள் கிளர்ச்சிசெய்கிறார்கள். இதிலே அவர்களுக்குச்சில சமயம் வெற்றியும் கிடைக்கிறது. ஆனால் அது அவர்களுக்கு நிரந்தரமான வெற்றியாகுமா? முதலாளித்துவத்தினுடைய சுரண்டலிலிருந்து தொழிலாளி கொஞ்சம் காப்பாற்றப் படுகிறான்; அதுவும் சிலகாலத்திற்கும். ஆனால் சுரண்டும் கொள்கையிலிருந்து அவன் விடுபடவில்லையே! தங்களுடைய கூலியின் உயர்வுக்காகத் தொழிலாளிகள் கிளர்ச்சி செய்வதனாலோ, அப்படியே அவர்களுக்குக்கொஞ்சம் கூடுதலான கூலிகிடைத்துவிட்டதனாலோ உண்மையான பிரசினைக்குப் பரிகாரம் கிட்டிவிட்டதாக எண்ணக்கூடாது. அவர்களுடைய உழைப்பின்பலனைச் 'சுரண்டுவது மனிதசமூகத்திலிருந்து' ஒழியவேண்டும். அது அவர்களது உண்மையான பிரசினை. ஆனதால் தொழிலாளிகள், தங்களுக்குக் கூடுதலான கூலிகொடுக்கப் படவேண்டுமென்று கேட்பது அர்த்தமற்றவேலை. மனித சமூகத்திலே, உழைப்பின்பலனைச் சுரண்டுவதை ஒழிக்கவும், மனிதசமூகத்திலே, தொழிலாளி யென்ற ஒரு தனி கோஷ்டிப்பிரிவிருப்பதை அகற்றவும் அவர்கள் பாடுபடவேண்டும். இது தான் அவர்களது உண்மையான பிரசினை"

தொழிலாளிகளுக்கு கூலி எவ்விதம் தரப்படுகிறதென்பதைக் கவனிப்போம். தொழிலாளிகளுக்கு, அவர்களுடைய உழைப்புக்குரியபலன், அதாவது கூலி பலவழிகளில் கொடுக்கப்படுகிறது. ஆனால் இதில் முக்கியமாக இரண்டு முறைகளிருக்கின்றன.

1. ஒரு தொழிலாளிக்கு அவன் வேலை செய்யும் நேரத்தைக் கணக்கிட்டுக் கூலிகொடுப்பது. ஒருமணியோ, நாளோ, வாரமோ, மாதமோ அவன் வேலை செய்திருப்பதை நேரவிகிதமாகக்கணக்கிட்டுக் கூலிகொடுப்பது. இதுஒருமுறை.

2. தொழிலாளிக்கு அவன் எந்தப் பொருளைச்செய்திருக்கிறானோ அதைக் கணக்கிட்டுக் கூலிகொடுப்பது. அதாவது, குயவனாயிருந்தால், அவன் எத்தனை பாண்டங்கள் செய்திருக்கிறான், நெசவாளியாயிருந்தால், அவன் எத்தனை ஆடைகள் நெய்திருக்கிறான், விவசாயியாயிருந்தால் அவர் எத்தனை அடிநிலம் வெட்டியிருக்கிறான் என்பதைக் கணக்கிட்டுக் கூலிகொடுப்பது. இந்த இரண்டு முறைகளைத்தவிர இன்னும் பலமுறைகளிருப்பினும் தத்துவரீதிக்கு மேலேயுள்ள இரண்டு முறைகளையுந்தான் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளுகிறார்கள்.

மேலே, கூலி கொடுக்கப்படும் முறை இரண்டு விதமாகக் காண்பித்திருக்கிறோமல்லவா? ஆனால், உண்மையில் இதைக் கொஞ்சம் ஆழ்ந்து ஆராயப் புகுந்தோமாயின் இந்த இரண்டு முறைகளும் வெவ்வேறல்ல என்பது நமக்கு விளங்கும். குறிப்பிட்ட ஒரு தொழிலாளிக்கு நேரத்தைக் கணக்கிட்டுக் கூலி கொடுக்கப்படுகிறதென்றால், கூலி கொடுக்கும் முதலாளி, ஏற்கனவே, அந்தத் தொழிலாளி குறிப்பிட்ட வேலையை எவ்வளவு நேரத்தில் செய்து முடிக்கக் கூடும் என்பதைக் கணக்கிட்டுக் கொண்டுதான் கூலி கொடுக்கிறார். அடுத்தது, அந்தத் தொழிலாளிக்கு அவன் செய்திருக்கும் சாமானைக் கொண்டு கூலி கொடுக்கப் படுகிறதென்றால், அந்தப் பொருளை, குறிப்பிட்ட தொழிலாளி எவ்வளவுநேரத்தில்செய்துமுடிப்பான் என்பதை ஏற்கனவே கணக்கிட்டுக் கொண்டுதான் முதலாளி கூலி கொடுக்கிறார். இந்த விதத்தை தெரியாத ஒரு முதலாளி, பணம் சம்பாதிக்கவும் முடியாது; அவர் முதலாளியாயிருக்கவும் லாயக்கற்றவராகிறார். அவருடைய துறையிலே அவர் வெற்றி காண முடியாது. ஸ்பஷ்டமாக விளங்குவது யாதெனில், தொழிலாளி உயிருடன் இருக்க வேண்டும்; அவனால் வேலை நடைபெற வேண்டியதிருக்கிறது; ஆதலால், அவன் உயிர் வாழ்வதற்கு எவ்வளவு தேவையோ அதுவே அவனுக்குக் கூலியாகக் கொடுக்கப்படுகிறது என்பதே. அவனுக்கு நேரத்தைக் கணக்கிட்டுக் கூலி கொடுத்தாலுஞ் சரி, செய்திருக்கிற பொருளைக் கணக் கிட்டுக் கூலி கொடுத்தாலுஞ் சரி காரியாம்சத்தில் இரண்டும் ஒன்றுதான். தனக்கு லாபம் தரக் கூடிய பாதை யெதுவோ, எந்த முறையைக் கையாண்டால் தனக்கு லாபம் கிடைக்குமோ அதில் முதலாளி மிகவும் கவனமாகவே இருப்பார் என்பதை நாம் மறந்து விடக் கூடாது.

பல மில்களிலும், தொழிற்சாலைகளிலும், இனாம் அல்லது போனஸ்

கொடுக்கும் முறை நடைபெறுகிறது. தொழிலாளிகள் அதிகமாக உழைத்திருந்தால், அதிலிருந்து முதலாளிக்கு லாபம் கிடைத்திருந்தால், இந்த இனாமோ, போனஸோ கொடுக்கப்படுகிறது. ஒரு மில்லில் இயந்திரத்தின் உதவி கொண்டு, குறிப்பிட்ட நேரத்தில் 200 அடி மரம் அறுக்கக்கூடிய தொழிலாளி அதே நேரத்தில் 250 அடி அறுத்திருந்தால், எட்டணாக் கொடுக்கப்பட்டு வந்த சம்பளத்திற்கு மேல் இரண்டணாச் சேர்த்து பத்தணாக் கொடுக்கப்படும். ரெயில் இஞ்சின் டிரைவர், இருபது மணு கரியின் உதவியால், நானூறு மைல் ஓடிக் கொண்டிருந்ததை, பதினெட்டு மணுக்கரியைக் கொண்டு நானூறு மைல் ஓட்டிவிட்டானேயானால் அந்த டிரைவருக்குக் கொஞ்சம் இனாமோ போனஸோ தரப்படுகிறது. போனஸ், அல்லது இனாம் என்று அதற்கு என்ன பெயர் வைத்தாலுஞ் சரிதான்; தொழிலாளி அதிகமாக வேலை செய்து, அதன் மூலமாகக் கிடைக்கும் லாபத்திலிருந்தோ, அல்லது அவனுடைய சாதுர்யத்தினால் கிடைக்கும் லாபத்திலிருந்தோ கொஞ்சப்பாகம் அந்தத் தொழிலாளிக்குத் தரப்படுகிறது. இப்படிக் கொடுப்பதும் எதை முன்னிட்டுக் கொடுக்கப்படுகிறது தெரியுமா? தொழிலாளி, இன்னும் அதிக சிரமப்பட்டு உழைக்கவும், அதிலிருந்து அதிக லாபம் பெறுவதற்காகவுந்தான், அதாவது, அதிக லாபம் சம்பாதிப்பதற்கு இது ஒரு வழி.

தொழிலாளிகளிடம் வேலை வாங்குவதற்கு இப்போது விஞ்ஞான முறை கையாளப்படுகிறது. இதைப் பற்றிக் கொஞ்சம் கவனிப்போம். பெரிய ஒரு மில்லில் வேலை நடப்பதாக வைத்துக் கொள்வோம். அதில் வேலை செய்யும் ஒரு தொழிலாளி, ஒரு பொருளை உற்பத்தி செய்கிறானென்றால், அந்தப் பொருள் உற்பத்திக்கு அந்தத் தொழிலாளிக்கு எவ்வளவு நேரம் செல்கிறது; அவனுடைய சக்தி எவ்வளவு செலவாகிறது என்பதைக் கவனிக்க பெரிய தொழிற்சாலைகளில் சில நிபுணர்கள் நியமிக்கப் பட்டிருப்பார்கள். மற்றும் அவர்கள் தொழிலாளிகளை, ஒருவரோடொருவர் பேசிப் பொழுதைப் போக்குவதற்கியலாத தூரத்தில் வைத்தும் இன்னும் சில வேலைகளையும் கவனித்துக் கொள்கின்றனர். விஞ்ஞானத் துறையில தொழிலபிவிர்த்திக்கு இன்னொரு முறையும் கையாளப் படுவதைக் கவனிக்க வேண்டும். இது தொழிலைப் பிரித்துக் கொடுக்கும் முறை. உதாரணமாக, பூட்ஸ் உற்பத்தி செய்கிற தொழிலையெடுத்துக் கொள்வோம். பூட்ஸின் மேலும் கீழும் போடுகிற தோலை நறுக்குவது, அதைத் தைப்பது இவ்வேலைகள் யாவற்றையும் ஒருவரிடமே ஒப்புவிப்பதில்லை. அப்படிச் செய்தால், ஒரு வேலையிலிருந்து இன்னொரு வேலை ஆரம்பிப்பதற்குள்ள இடை நேரம் யாதொரு ஆதாயமுமின்றிச் செலவாகி விடுவதாகக் கருதப்படுகிறது. ஆகையால் ஒரு பூட்ஸைத் தயார் செய்வதில் சம்பந்தமிருக்கிற வேலைகளை, அதாவது, தோல்களை நறுக்குவது, அவற்றைச் சரிசெய்வது, தைப்பது இந்த வேலைகள் தனித்தனி ஒவ்வொரு ஆளுக்காய்ப் பிரித்துக் கொடுக்கப் படுகிறது. தோலை நறுக்குபவன் தன்னுடைய இயந்திரத்தின் உதவியால்

நறுக்கிக்கொண்டே யிருப்பான்; தைப்பவன் தைத்துக்கொண்டே யிருப்பான். இதனால், முன்னே 20பேர் நாளொன்றுக்கு 20பூட்ஸுகளே செய்யமுடிந்ததென்றால், இப்போது இவ்விதம் வேலைமுறையைப் பிரித்துக் கொடுத்தபிறபாடு 20பேர் 30பூட்ஸுகள் வரை தயார் செய்யமுடிகிறது.

தொழிலாளிகளிடமிருந்து வேலை வாங்குவதற்கு போர்ட் (Ford) ஒரு புதிய முறையை ஏற்பாடு செய்திருக்கிறார். தொழிலாளிகள் முறைப்படி வரிசையாகநிற்கின்றனர். ஒரு இயந்திரத்தின் மூலம்தயாராகும் சாமான் குறிப்பிட்ட நேரத்தில், குறிப்பிட்ட வேலைக்காக, ஒவ்வொரு ஆளிடமும் போகும்படி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அந்த ஒவ்வொரு ஆளும், அந்த வேலையைக் குறிப்பிட்ட நேரத்தில் செய்து தீரவேண்டும். இப்படிச் கிரியாக வேலைசெய்ய முடியாத தொழிலாளி விலக்கப்பட்டு விடுவான்.

விஞ்ஞானத்தின் ஆதாரத்தால் பொருளுற்பத்தித் துறையில் அதிக முன்னேற்ற மேற்பட்டிருக்கிறது. ஆனால், இந்த முன்னேற்றமானது, தொழிலாளியை, அவன் எந்த இயந்திரத்தில் வேலை செய்கிறானோ அந்த இயந்திரத்தைப் போலவே ஆக்கி விட்டது. அப்படிக் கஷ்டப்படும் அவனுக்குப் பிரயோஜனம ஏதேனும் உண்டோ? அவனுடைய கூலி யேதேனும் உயர்ந்திருக்கிறதோ? இல்லை. ஆனால் முதலாளிக்கு இதனால், முன்னைப் பார்க்கிலும் ஏராளமாக உற்பத்திப் பொருள் குவிந்து கிடக்கிறது. அவ்வளவும் அவருக்கு லாபந்தானே! அதிக உழைப்பினால் தொழிலாளி, மிகவும் சுருக்கமான வயதிலேயே வேலை செய்ய லாயக் கற்றவனாகி விடுகிறான். ஆனால் இதைப் பற்றிக் கவலைப்படுவது யார்? வேறு கூலியாளுக்குப் பஞ்ச மிருந்தால்தானே?

அப்படியானால், விஞ்ஞான வளர்ச்சியானது தொழிலாளிகளுக்குக் கெடுதலாகத்தான் முடியுமோ என்ற கேள்வி யெழுவது சகஜம். விஞ்ஞான வளர்ச்சிக்கும், தொழிலாளிகளுடைய நிலைமைக்கும் சம்பந்த மில்லை.

மில்கள், தொழிற்சாலைகள் தற்கால மிருப்பதைப் போல் வளர்ச்சியடையாதிருந்த அந்தக் காலத்தில், தொழிலாளிகளுக்கு, கூலி நாணய ரூபமாகக் கொடாமல், தான்ய ரூபமாகக் கொடுக்கப்பட்டு வந்தது. அதாவது அந்தத் தொழிலாளிக்குச் சாப்பாட்டிற் குரிய சாமானாகக் கொடுக்கப்பட்டு வந்தது. அவ்விதம் சாப்பாட்டுக் குரிய சாமானாகக் கொடுக்கப்படும் போது, அவனுடைய தேவையை அனுசரித்தும் கொடுக்க வேண்டியது அவசியமாகி விடுகிறதல்லவா? அப்படியானால் அந்தத் தொழிலாளியினுடைய உணவுத் தேவையைக் கவனிக்க வேண்டிய பொறுப்பு கூலி கொடுக்கும் முதலாளியுடையதாகிறது. ஆனால், நாணய ரூபமாக கூலி கொடுக்கும் முறை அமுலுக்கு வந்தபின், முதலாளிக்கு மேற்சொன்ன பொறுப்பு இல்லாமலே போய் விட்டது.

சரி, நாணயரூபமாக கூலி கொடுக்கும் முறை வந்ததால், தொழிலாளிக்கு நன்மையா தீமையா என்பதைக் கவனிப்போம். சாமான்களின் விலை ஒரே நிதானமா யிருப்

பதில்லை யென்பதையும், அது தினந்தோறும் ஏறவும், இறங்கவுமா இருக்கிற தென்பதையும் நாம் அறிவோம். நேற்று ஒரு ரூபாய்க்குப் பத்துப்படி நெல் விற்றது. இன்று பனிரெண்டுபடி, அல்லது ஒன்பதுபடி. இந்த ஒருதான்யம் மட்டுமில்லை; உணவுக்கு வேண்டிய எல்லாச்சாமான்களுடைய விலையுமே இப் படித்தான். ஒரு சாமான், இன்று கொஞ்சம் சகாயமாய்க் கிடைத்தால், இன்னொரு சாமானுக்கு விலை அதிகமாகக் கொடுக்க வேண்டியதிருக்கிறது. இந்தச் சாமான்களுடைய விலையை நிர்ணயிக்கும்சக்தியும் அதிகாரமும் முதலாளிகளுடையதாய்த்தானிருக்கிறதல்லவா? இவ்விதம் சாமான்களின்விலை ஏறியிருப்பதற்காக, தொழிலாளிக்கு அவனுடைய சம்பளத்திற்கு மேல் ஜாஸ்தி கொடுக்கப்படுவதில்லை யென்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும்.

முதலாளித்துவத்தினுடைய அடிப்படையான கொள்கை லாபம் சம்பாதிப்பதே. அதற்கு வழி, உற்பத்திப் பொருள்களுக்குகுறைந்தவிலை அடங்க வேண்டும். இதற்கு தொழிலாளிகளுடைய கூலியைக் குறைப்பதைத்தவிர வேறுவழியில்லை. தேசம் செழித்திருந்தால் அதிகப்படியான பொருள்கள் செலவாகும். அப்படியானால் தொழிலாளிகளிடம் அதிகமான வேலை வாங்கி அதிகப்பொருளை உற்பத்தி செய்வது. தொழிலாளிகள் அதிகமான வேலைசெய்தாலுங்கூட முந்திய கூலியைத்தான் பெறுகிறார்கள். தேசம் செழிப்பற்றிருந்தால் சாமான்கள் எடுபடாது. அப்படியானால் தொழிலாளிகளுடைய கூலியை இன்னும் குறைத்து பொருள்களின் விலைமதிப்பைக் குறைக்கவேண்டும். அல்லது பொருள் உற்பத்தியைக் கட்டுபடுத்துதல் வேண்டும். பொருள் உற்பத்தியைக் கட்டுப்படுத்துவதென்றால் என்ன அர்த்தம்? தொழிலாளிகளை வீட்டிற்குப் போகச் சொல்வது. உலகத்தை நல்லகாலம் சூழ்ந்திருந்தாலும் சரிதான், அல்லது கெட்டகாலம் சூழ்ந்திருந்தாலும் சரிதான்; தற்கால முறையில் உழைப்பவனுக்கு எல்லாக் காலமும் ஒரேமாதிரிதான்.

பணம் அவசியமான சாதனம். ஆனால் அச்சாதனத்தை உபயோகிக்க ஒருமனிதன் தேவை. உலக முழுவதையும் அடைந்தாலும், தன்னையிழந்து விட்டால் எவ்வளவு பணமிருந்தாலும் அவன் வாழ்க்கை பாழே.

—ராபர்ட் லூயிஸ் ஸ்டீவன்ஸன்.

மூன்றாவது வருஷம்
"ஜோதி"யின்
பைண்டு வால்யூம்

இரண்டு புஸ்தகங்களாக
தயாராகிவிட்டது.

விலை ரூபா 4—8—0

தபால் செலவு

பர்மாவுக்கு 0-6-0 இந்தியாவுக்கு 0-8-0
மலேயா முதலிய வெளி நாடுகளுக்கு ரூ. 2

தபால் செலவுடன் மணியார்டர் செய்யுங்கள்

ஜோதி பப்ளிஷிங் கம்பெனி, லிமிடெட்
47, 31-வது வீதி, இரங்கோன்.

கலைமகள்

ஓர் உயர்ந்த மாதப் பத்திரிகை

(1932ம் ௵ ஆரம்பிக்கப்பட்டது)

தமிழ் நாட்டிலுள்ள சிறந்த அறிவாளிகளுடைய கட்டுரைகளோடு வெளிவருவது. அழகிய சித்திரங்கள், இனிய கட்டுரைகள், சுவையுள்ள கதைகள் சிறந்த தொடர் கதை, விஞ்ஞான சரித்திரம் சம்பந்தமான விஷயங்கள் முதலிய சகல அருமையான பகுதிகளோடு உயர்ந்த முறையில் அச்சிடப்பெற்று மாதந்தோறும் தவறாமல் மலர்வது.

வருஷ சந்தா :

உள் நாடு	:	**ரூ. 4-0-0**
பர்மா	:	**ரூ. 4-8-0**
வெளிநாடு	:	**ரூ. 6-0-0**

தனிப் பிரதி அணா ஆறு.

கிடைக்கும் விலாசம் :—

மானேஜர், கலைமகள் காரியாலயம்,
மயிலாப்பூர்

மதராஸ்